Registered as Newspaper

# உதயன் சஞ்சீவி

சுடர் : 36 கதிர் : 234 | ஞாயிற்றுக்கிழமை | ஆடி 02 நாள் 18 ஜூலை 2021 | வள்ளுவர் ஆண்டு 2052

பக்கங்கள்: 16+16 விலை : ரூ.40

செய்தி : 021 493 0000
விளம்பரம்: 021 493 1111

# வீட்டுத்திட்டப் பயனாளிகள் தெரிவில் பெரும் குளறுபடி

## இணைத் தலைவர்களுக்கு அனுப்பிய பட்டியலிலிருந்து

### 187 பேரின் பெயர்கள் காட்சிப்படுத்தலில் மாயம்

யாழ்ப்பாணம், ஜூலை 18

யாழ்ப்பாண மாவட்டத்தில் முன்னெடுக்கப்படவுள்ள வீட்டுத் திட்டத்துக்கான பயனாளிகள் தெரிவில் பெரும் குளறுபடி இடம்பெற்றுள்ளது. பிரதேச செயலர்களால் இறுதிப்பட்டியல் எனத் தெரிவித்து மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுவின் இணைத் தலைவர்களுக்கு பட்டியல் அனுப்பப்பட்டது. அதன் பின்னர் அந்தப் பட்டியலை காட்சிப்படுத்துமாறு பிரதேச செயலர்கள் பணிக்கப்பட்டனர். அவ்வாறு காட்சிப்படுத்தப்பட்டுள்ள பட்டியலில் 187 பேரின் பெயர்கள் மாற்றப்பட்டுள்ளன. முன்னைய பட்டியலிலிருந்து 187 பேர் நீக்கப்பட்டு புதிதாக 187 பேர் உட்புகுத்தப்பட்டுள்ளனர்.

14

| பிரதேச செயலகம் | மாவட்ட செயலகத்துக்கு பிரதேச செயலர்கள் அனுப்பிய இறுதிப்பட்டியல் | 06.07.2021 பிரதேச செயலகங்கள் காட்சிப்படுத்திய பட்டியல் | வித்தியாசம் |
|---|---|---|---|
| நெடுந்தீவு | 20 | 16 | 4 |
| வேலணை | 53 | 52 | 1 |
| ஊர்காவற்றுறை | 53 | 49 | 4 |
| காரைநகர் | 53 | 44 | 9 |
| யாழ்ப்பாணம் | 53 | 53 | 0 |
| நல்லூர் | 73 | 71 | 2 |
| சண்டிலிப்பாய் | 93 | 87 | 6 |
| சங்கானை | 93 | 66 | 27 |
| உடுவில் | 93 | 77 | 16 |
| தெல்லிப்பழை | 183 | 183 | 0 |
| கோப்பாய் | 163 | 131 | 32 |
| சாவகச்சேரி | 163 | 117 | 46 |
| கரவெட்டி | 73 | 68 | 5 |
| பருத்தித்துறை | 93 | 74 | 19 |
| மருதங்கேணி | 41 | 25 | 16 |
| மொத்தம் | 1300 | 1113 | 187 |

## அனைத்து எம்.பிக்களுக்கும் கட்டாய கொவிட் சோதனை

கொழும்பு, ஜூலை 18

நாடாளுமன்ற உறுப்பினர்கள் 225 பேரும் நாளை திங்கட்கிழமை கொரோனா பரிசோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளனர். இதன்படி நாடாளுமன்ற வளாகத்தில் வைத்து காலை 9.30 மணிமுதல்

13

## ரிஷாத்துக்கு மாரடைப்பு!

*அவசர சிகிச்சைப் பிரிவில்*

கொழும்பு, ஜூலை 18

உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதல் தொடர்பான விசாரணைகளின் நிமித்தம் பொலிஸ் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்

13

## வீட்டுத்திட்டத்துக்கான பயனாளிகள் தெரிவில் எந்தக் குழப்பமுமில்லை!

*சத்தியம் செய்கிறார் அங்கஜன்*



யாழ்ப்பாணம், ஜூலை 18

தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் வீட்டுத்திட்டம் தொடர்பில் அரசியல் நோக்கத்துடன் செய்திகளை வெளியிட்டு மக்களை குழப்பியடிக்கின்றனர். இந்தப் பயனாளிகள் தெரிவில்

14

## வீடமைப்பு அதிகார சபையின் தலைவராக துமிந்த நியமனம்

கொழும்பு, ஜூலை 18

ராஜபக்சக்களின் சகாவான முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை

14

## வடக்கில் கொரோனா 63

யாழ்ப்பாணம், ஜூலை 18

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நேற்று 596 மாதிரிகள் பி.சி.ஆர். சோதனைக்கு உட்படுத்தப்பட்டதில் 63 பேருக்குக் கொரோனா உறுதிப்படுத்தப்பட்டது. பளை சுகாதார மருத்துவ அதிகாரி பிரி

13

## மறுப்பு பிரசுரிக்க 'உதயனுக்கு' ஆணைக்குழுவால் நிர்ப்பந்தமாம்

*காதில் பூச்சுற்றிய அங்கஜன்!*

யாழ்ப்பாணம், ஜூலை 18

'ஆட்டையைப்போட்ட அரசியல்வாதி' என்ற தலைப்பில் உதயன் பத்திரிகை வெளியிட்ட செய்திக்கு மறுப்புத் தெரிவிக்க வேண்டும் என பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்தும்,

14

## அரசுக்கு எதிராகப் போராடுவதற்கு ஒன்றிணைந்தன எதிர்க்கட்சிகள்!

*கருஜயசூரியவின் நகர்வு வெற்றி*

கொழும்பு, ஜூலை 18

அரசுக்கு எதிராகப் போராடுவதற்கு எதிர்க்கட்சிகளை ஓரணியில் திரட்டும் நடவடிக்கையை முன்னாள் சபாநாயகர் கருஜயசூரிய மேற்கொண்டிருந்த நிலையில், அந்த நகர்வு வெற்றியளித்துள்ளது. ஐக்கிய மக்கள் சக்தி, ஐக்கிய தேசியக் கட்சி

13

## ஓமந்தையில் வீடுடைத்து நகை திருட்டு

வவுனியா, ஜூலை 18

வவுனியா ஓமந்தை அரச ஊழியர் வீட்டுத்திட்டத்தில் அமைந்துள்ள வீடொன்று உடைக்கப்பட்டு இரண்டரைப்

14

## தமிழ்த் தேசிய கட்சிகள் யாழில் நேற்றுச் சந்திப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 18

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சி தவிர்ந்த ஏனைய இரு பங்காளிக் கட்சிகளுக்கும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணிக்கும் இடை

13

## மாபெரும் மக்கள் இயக்கத்தை கட்டியெழுப்புவதுதான் நோக்கம்

*ராஜித சேனாரத்ன வெளிப்படை*

கொழும்பு, ஜூலை 18

'எதிர்க்கட்சிகளை ஒன்றிணைத்து மாபெரும் மக்கள் இயக்கம் கட்டியெழுப்பப்படும், தடந்தகாலத் தவறுகளையும் சரிசெய்துகொண்டு முன்நோக்கிப் பயணிப்போம்' என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்

13

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அரச அராஜகத்துக்கு எதிரான எங்கள் போராட்டம் தொடரும்!

### விடுவிக்கப்பட்ட ஜோசப் சூளுரை

கொழும்பு, ஜுலை 18
இலவசக் கல்வியை இராணுவ மயப்படுத்த முயலும் அரசின் அராஜகத்துக்கு எதிரான எமது போராட்டம் தொடர்ந்து முன்னெடுக்கப்படும். இவ்வாறு தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்ட இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

நியாயமற்ற முறையிலேயே நாம் தடுத்து வைக்கப்பட்டிருந்தோம். எமக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராகவும், எமது விடுதலையை வலியுறுத்தியும் நாடு முழுவதும் ஜனநாயகப் போராட்டங்களை முன்னெடுத்த அனைத்துத் தரப்பினருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம், என்றும் அவர் குறிப்பிட்டார்.

எமது பக்க நியாயங்களை மக்களுக்குத் தெரியப்படுத்திய சகல ஊடகங்களுக்கும் நன்றியைக் கூறுகின்றோம், என்றும் அவர் மேலும் கூறினார்.

முல்லைத்தீவு கேப்பாப்பிலவு விமானப் படை முகாமில் வலுக்கட்டாயமாகத் தனிமைப்படுத்தப்பட்டிருந்த இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் உள்ளிட்ட 16 பேரும் தனிமைப்படுத்தலில் இருந்து நேற்றுமுன்தினம் விடுவிக்கப்பட்டனர்.

அரசின் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக சட்டவரைவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, கடந்த 8 ஆம் திகதி கொழும்பில் போராட்டத்தில் ஈடுபட்ட ஜோசப் ஸ்டாலின் உள்ளிட்டவர்கள் கைதுசெய்யப்பட்டனர். அவர்கள் கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டபோது பிணையில் விடுவிக்கப்பட்டனர். ஆனால், நீதிமன்றத்தின் அனுமதியின்றி அவர்களை வலுக்கட்டாயமாகத் தனிமைப்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்தனர். நீதிமன்ற வளாகத்தில் இருந்து பொலிஸ் பஸ்ஸில் முல்லைத்தீவுக்கு அழைத்துவரப்பட்டு, கேப்பாப்பிலவு விமானப் படை முகாமில் உள்ள தனிமைப்படுத்தல் மையத்தில் அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டனர். இதற்குப் பல்வேறு தரப்பினரும் எதிர்ப்புத் தெரிவித்து நாடு முழுவதும் போராட்டங்களை முன்னெடுத்தனர். ஆசிரியர் சங்கங்கள் இணையவழி கற்பித்தலைப் புறக்கணித்து தொழிற்சங்க நடவடிக்கையை மேற்கொண்டன. இதையடுத்து, 8 நாள்களின் பின்னர், நேற்றுமுன்தினம் மாலை அவர்கள் தனிமைப்படுத்தல் மையத்தில் இருந்து விடுவிக்கப்பட்டனர். (ஓ,22)

# எதிர்ப்புக்களையடுத்து பணிகிறார் கோத்தாபய

### பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்

**கொழும்பு, ஜுலை 18**

**பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சட்டத்தில் உள்ள தடைகளை அகற்றி, கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தை அதன் கீழ் கொண்டு வருவதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.**

பௌத்த ஆலோசனை சபை, 11ஆவது தடவையாக நேற்றுமுன்தினம் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஒன்றுகூடிய போதே, ஜனாதிபதி இதுபற்றித் தெரிவித்தார்.

கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழக சட்டவரைவுக்கு எதிரான போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ள சூழ்நிலையில் ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இது தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகமானது, 40 வருட காலமாக நாட்டுக்குத் தேவையான பெரும் எண்ணிக்கையான கல்விமான்களை உருவாக்கியுள்ளது. உயர்தரப் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளுடன் சித்தியடைகின்ற மாணவர்கள்கூட, கொத்தலாவல பல்கலைக்கழகத்தைத் தங்களது உயர்க் கல்விக்காகத் தெரிவு செய்வதற்கு அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர், என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார். உயர் கல்விக்காக தமது பிள்ளைகளை வெளிநாடுகளுக்கு அனுப்புவதன் மூலம், நாடும் பெற்றோர்களும் இழக்க வேண்டி ஏற்படும் பெரிய தொகையைச் சேமிக்க வேண்டுமானால், உயர்ந்த தரம் வாய்ந்த இத்தகைய பல்கலைக்கழகங்கள் நாட்டில் உருவாக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி எடுத்துரைத்தார்.

மேலும், ஜனவரி மாதம் 28ஆம் திகதியன்று, அஸ்ராஜெனகா தடுப்பூசியின் முதலாவது தொகுதி கிடைக்கப்பெற்றது முதல், இதுவரையில் கிடைத்துள்ள அனைத்துத் தடுப்பூசிகள் மற்றும் நாடளாவிய ரீதியில் மாவட்ட மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படும் தடுப்பூசி ஏற்றும் வேலைத்திட்டத்தின் மூலம், ஓகஸ்ட் மாதம் நிறைவடைவதற்கு முன்னர், 30 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் தடுப்பூசியின் இரண்டு அலகுகளையும் வழங்கி முடிக்க முடியுமெனவும், ஜனாதிபதி நம்பிக்கை தெரிவித்தார்.

'கண்டி ஸ்ரீ தலதா பெரஹராவுக்கு முன்னர், கண்டி மாவட்டத்தில் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகளை நிறைவுசெய்ய எதிர்பார்க்கப்படுகின்றது.

உலக சுகாதார நிறுவனம், நாட்டின் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகளை பாராட்டியுள்ளதுடன், தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கையில், தெற்காசிய நாடுகளின் வரிசையில், இலங்கையே முன்னணியில் இருக்கின்றது, என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

நாட்டின் எதிர்காலத்துக்காக மேற்கொள்ளப்படும் கொள்கை சார்ந்த தீர்மானங்களுக்குச் சிலர் எதிர்ப்புத் தெரிவித்து வருவது, எதிர்காலத் தலைமுறைக்குச் செய்யப்படும் மிகப் பெரிய அநீதியாகுமென்றும், ஜனாதிபதி இதன்போது எடுத்துரைத்தார்.

கொவிட் ஒழிப்புக்காக ஆரம்பம் முதல் ஜனாதிபதி தலைமையிலான அரசு முன்னெடுத்து வரும் நிகழ்ச்சித்திட்டங்களைப் பாராட்டிய மஹா சங்கத்தினர், கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம் சம்பந்தப்பட்ட நோக்கங்கள் குறித்து மக்களுக்கு அறிவூட்டி, சமூகத்தில் பரவி வரும் பிழையான தகவல்களைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியத்தையும் சுட்டிக் காட்டினர்- என்றுள்ளது. (ஒ.இ)



## நாடாளுமன்ற பேரவையை உடனடியாகக் கூட்டுங்கள்

### சபாநாயகரிடம் சஜித் கோரிக்கை

கொழும்பு, ஜுலை 18
தேர்தல் ஆணைக்குழுவில் பணியாற்றிய அதிகாரிகளை திடீரென இடமாற்றம் செய்தல் மற்றும் நீக்கியமை குறித்து விவாதிக்க நாடாளுமன்ற பேரவையை கூட்டுமாறு எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச, சபாநாயகரை கோரியுள்ளார். இது தொடர்பில் சஜித் பிரேமதாச கடிதம் ஒன்றை சபாநாயகருக்கு அனுப்பியுள்ளார்.

சுயாதீன ஆணைக்குழுக்களுக்கு உறுப்பினர்களை நியமிப்பதற்கு பொறுப்பான நாடாளுமன்ற பேரவை மற்றும் அரசமைப்பின் கீழ் அந்த ஆணைக்குழுக்களில் சேவை செய்யும் அதிகாரிகள், தேர்தல் ஆணைக்குழுவின் அதிகாரிகளை மாற்றுவது மற்றும் நீக்குவது குறித்து விவாதிக்கவே நாடாளுமன்ற பேரவை கூட்டப்பட வேண்டும் என்று அவர் கேட்டிருக்கிறார்.

தேர்தல் ஆணைக்குழுவின் அதிகாரிகள் தொடர்பான நடைமுறைகள், சாதாரண அரச அதிகாரிகளை நீக்குதல் மற்றும் இடமாற்றம் செய்வது தொடர்பான விதிமுறைகளுக்கு அப்பாற்பட்டவை. தேர்தல் ஆணைக்குழுவின் அதிகாரிகளை ஏனைய நிறுவனங்களுக்கு மாற்றாமல் வைத்திருப்பது அவசியம். ஏனெனில், சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தல்களை உறுதி செய்வதற்கு அவர்களின் நிபுணத்துவம் அவசியம். இதுபோன்ற இடமாற்றங்கள் மற்றும் அதிகாரிகளை நீக்குவது எதிர்காலத்தில் சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தல்களைத் தடுக்கும் என்று சஜித் பிரேமதாச தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (த-இ)

## கோத்தாவை கடவுளாக கருதிய சிங்கள மக்களே இன்று அவர் மீது விமர்சனக்கணைகள் தொடுப்பு

### ஆட்சிமாற்றம் உறுதி என்கிறது தமிழ் முற்போக்கு கூட்டணி

கொழும்பு, ஜுலை 18
ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவை கடவுளாகக் கருதிய சிங்கள மக்களே இன்று அவரை விமர்சிக்கத் தொடங்கிவிட்டனர். எனவே, தேர்தலொன்று நடைபெறும் பட்சத்தில் அரசு படுதோல்வியடையும் என்பது உறுதியென்று தமிழ் முற்போக்கு கூட்டணி தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம், ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் கோத்தாபய ராஜபக்சவை கடவுளாகவே சிங்கள மக்கள் கருதினர். அவர் அரசியல்வாதி அல்லர். இராணுவ நிர்வாகி என்பதால் பல மாற்றங்கள் ஏற்படக்கூடும் எனவும், அதிரடியாக நடவடிக்கைகளை மேற்கொள்வார் எனவும் மக்கள் நம்பினர். எனினும், அதே இன்று அவரை திட்டுவதற்கு தொடங்கிவிட்டனர். அந்தவகையில் எல்லா வழிகளிலும் இந்த அரசு படுதோல்வியடைந்துள்ளது. தேர்தலொன்று வரும்பட்சத்தில் அதில் எதிர்க்கட்சியே வெற்றிபெறும். இன்று நாட்டில் உரம் இல்லை. கையிருப்பு இல்லை. இந்நிலையில் நாடகத்துக்காக பஸிலை கொண்டுவந்துள்ளனர். அவர் என்ன வித்தைக்காரரா?

மாகாணசபைத் தேர்தலை நடத்துமாறு நாம் வலியுறுத்துகின்றோம். அடுத்த வருடம் வைக்கப்படும் என ஆளுங்கட்சி தரப்பில் கூறப்படுகின்றது. ஆனால் பொதுத்தேர்தல் அல்லது ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதே அரசின் திட்டமாக உள்ளது. தற்போதைய சூழ்நிலையில் எந்த தேர்தல் நடைபெற்றாலும் வெற்றி நமதே, என்றார். (ஒ.44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# கிளிநொச்சியில் கொரோனா தீவிரம்; மக்கள் அவதானமாக இருங்கள்

## மாவட்டச் செயலர் எச்சரிக்கை

கிளிநொச்சி, ஜூலை 18

**கிளிநொச்சி மாவட்டத்தில் கொரோனாத் தொற்று திடீரென தீவிரமடைந்துள்ளது. எனவே மக்கள் சுகாதார நடைமுறைகளை முறையாகக் கடைப்பிடிக்க வேண்டும் என்று கிளிநொச்சி மாவட்டச் செயலர் றூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;
கிளிநொச்சி மாவட்டத்தில் இதுவரை 758 பேர் கொரோனாத் தொற்றுக்கு உட்பட்டு சிகிச்சை பெற்றுள்ளனர். மாவட்டத்தில் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை குறைவடைந்து சென்ற நிலைமை மாறி கடந்த இரு வாரங்களாக தீவிரமடைந்து காணப்படுகின்றது. கடந்த வாரத்தில் மாத்திரம் 20 பேருக்கு மேற்பட்டோருக்கு தொற்று ஏற்பட்டுள்ளது. இரண்டு நாள்களில் 15 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர் அவர்கள் குறிப்பிட்ட ஒரு பிரதேசத்தை சேர்ந்தவர்களாவர். அவர்களின் பிரதேசமான வட்டக்கச்சி கட்சன் வீதி முடக்கப்பட்டுள்ளது. இந்த மாதத்தில் மாத்திரம் மாவட்டத்தில் 65 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இந்த நிலைமை ஆபத்தானது.
எனவே மக்கள் தொடர்ந்தும் சுகாதார நடைமுறைகளுடன் அவதானமாகச்செயற்பட வேண்டும் டெல்ரா தொற்று எமது மாவட்டத்தில் வெளிநாட்டில் இருந்து வந்தவர்கள் தனிமைப்படுத்தல் நிலையத்தில் இருந்தவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையிலே உறுதி செய்யப்பட்டுள்ளது -என்றார். (ப-6)



## சிதைவடைந்த நிலையில் மன்னாரில் சடலம் மீட்பு

மன்னார், ஜூலை 18
தலைமன்னார் கடற்பரப்பில் 5 ஆவது தீடை பகுதியில் சிதைவடைந்த நிலையில் சடலம் ஒன்று மீட்கப்பட்டது.
தலைமன்னார் கடற்பரப்பில் நேற்றுமுன்தினம் காலை ரோந்து பணியில் ஈடுபட்ட கடற்படையினரால் குறித்த சடலம் இனங்காணப்பட்டது.
சடலம் தொடர்பாக கடற்படையினர் தலைமன்னார் பொலிஸாரின் கவனத்துக்கு கொண்டு வந்தனர். தலைமன்னார் பொலிஸார் குறித்த தீடைப்பகுதிக்குச் சென்று சடலத்தை பார்வையிட்டதோடு, மன்னார் நீதிமன்றத்தின் அனுமதியைப் பெற்று சடலத்தை மீட்டுள்ளனர். சடலம் மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. (ப-56)

## திடீர் மழையால் தருமபுரம் சந்தை வியாபாரிகள் பாதிப்பு

கிளிநொச்சி, ஜூலை 18
கடந்த புரேவி புயல் காரணமாக கரைச்சி பிரதேச சபைக்கு உட்பட்ட தருமபுரம் பொதுச்சந்தையின் கூரை தூக்கி வீசப்பட்டு பல மாதங்கள் ஆகியும் இதுவரை சீரமைக்கப்படாததால், நேற்று பெய்த கடும் மழை காரணமாக சந்தை வியாபாரிகள் பெரும் பாதிப்புக்கு உள்ளாகினர்.
வீதியோரங்களில் தமது அன்றாட வியாபாரத்தை மேற்கொண்டு வந்த நிலையிலேயே அவர்கள் மழையால் பாதிக்கப்பட்டனர்.
நேற்றைய வியாபாரம் முற்றுமுழுதாக பாதிக்கப்பட்டுள்ளதால் பல ஆயிரம் ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளது என வியாபாரிகள் கவலை தெரிவித்தனர். இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுத்து புதிய கட்டடத்தை மிக விரைவில் அமைத்து வியாபாரத்தை மேற்கொள்ள உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர். (ப113)





## அவசர தேவைக்கு சினோவெக் தடுப்பூசி

### தேசிய ஔடதங்கள் அதிகாரசபையும் அனுமதி

கொழும்பு, ஜூலை 18
இலங்கையில், சீன உற்பத்தியான சினோவெக் தடுப்பூசியை அவசர தேவைகளுக்காக பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.




தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையால் இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
அவசர தேவைகளுக்காக சீனாவின் சினோவெக் தடுப்பூசியை பயன்படுத்துவதற்கு ஏற்கனவே உலக சுகாதார ஸ்தாபனம் அனுமதி வழங்கியுள்ளது.
சினோவெக் தடுப்பூசியை எளிதில் களஞ்சியப்படுத்தி வைக்கமுடியும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. 18 வயதுக்கும் மேற்பட்டவர்கள் அவசர தேவைகளுக்காக இந்த தடுப்பூசியை பெற்றுக்கொள்ள முடியும் என உலக சுகாதார ஸ்தாபனம் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (கு-இ)



## தானியக் களஞ்சிய அறைக்கு மல்லாவியில் அடிக்கல்

முல்லைத்தீவு, ஜூலை 18
முல்லைத்தீவு துணுக்காய் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மல்லாவியில் தானியக்களஞ்சிய அறை அமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது.
துணுக்காய் பிரதேச செயலர் ஆ.லதுமீரா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் முதன்மை விருந்தினராக கலந்துகொண்டு அடிக்கல்லை நடுகை செய்தார்.
குறித்த தானியக் களஞ்சிய அறைக்கு 'சௌபாக்கிய' வேலைத்திட்டத்தின் கீழ் வடக்கு மாகாண விவசாய அமைச்சால் 10 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் நிகழ்வில் வடமாகாண நீர்ப்பாசன பணிப்பாளர், உதவி மாகாண விவசாயப் பணிப்பாளர் மற்றும் அரச அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ-246)

## வாகனம் தடம்புரண்டதில் ஏழு பேர் படுகாயம்

சாவகச்சேரி, ஜூலை 18
ஹன்ரர் வாகனம் தடம்புரண்டதில் அதில் பயணித்த ஏழு பேர் படுகாயமடைந்தனர். இந்தச் சம்பவம் மட்டுவில் வண்ணாத்திப் பாலத்துக்கு அருகில் நேற்றுக் காலை இடம்பெற்றது.
தென்மராட்சி உசன் பகுதியில் கட்டட நிர்மாணப் பணியில் ஈடுபடும் குழுவினர் ஹன்ரர் வாகனத்தில் அச்சுவேலியிலிருந்து வந்துள்ளனர்.
மழை பெய்து கொண்டிருந்ததால். எதிரே நடுவீதியில் மோட்டார் சைக்கிள் வருவதைக்கண்ட வாகன சாரதி வாகனத்தை நிறுத்த முற்பட்ட போது வாகனம் வீதியை விட்டு விலகி தடம்புரண்டு விபத்துக்குள்ளானது.
இதில் காயமடைந்த 7 பேரும் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.
இதில் நால்வர் மேல்திக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டனர். (ஐ-9 .131)

## 55 பேருக்கு நேற்று எழுமாற்று பி.சி.ஆர்.

சாவகச்சேரி, ஜூலை 18
சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தில் நேற்று 55 பேருக்கு எழுமாற்று பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.
கைதடி மற்றும் தனங்களப்பு ஆகிய பகுதிகளில் கொரோனா தொற்றாளர்களுடன் நேரடித் தொடர்பைப் பேணி தனிமைப்படுத்தலில் உள்ள குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் மற்றும் பிரதேச பாடசாலைகளில் கட்டடப் பணிகளை மேற்கொண்டு வருபவர்கள் என 55 பேருக்கு பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. இவ்வாறு பெறப்பட்ட மாதிரிகள் ஆய்வுக்காக யாழ்ப்பாணம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (ஐ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடல் எடை குறைய வேண்டுமா?

◎ எடை கூடுகிறதா?
◎ வயிறு, மார்பு குறைய வேண்டுமா?
◎ உடல் எடை குறைகிறதேயில்லை என்கின்ற கவலையா?

**பால்மா குளிசை** - வயிறு, மார்பு குறைக்கும் கிறீம் 15 நாள்களில் அற்புத மாற்றத்தை உணர்வீர்கள்.

## தலைமுடி நீளமாக வளர வேண்டுமா?

தலைமுடி வளரவேண்டுமா? பேன், பொடுகு தொல்லையா? ➤முடிகொட்டுகிறதா? ➤இளநரையா? ➤தலையிடியா? முடி அடர்த்தி இல்லையா?➤புதிதாக முடி முளைக்க வேண்டுமா? ➤பொன்னாங்காணி? கரிசலாங்காணி, இலாமிச்சை வேர், கருவேப்பிலை, வல்லாரை, நெல்லி சேர்த்துக்காய்ச்சிய எண்ணெய் குளிசை

இந்த எண்ணையைப்பாவித்து பயனடைய

## உடல் எடை இலகுவாக கூட வேண்டுமா

எடை கூட வேண்டுமா?, கணச்சூடா?, பலகீனமா?, ஒட்டிய கன்னங்கள் குண்டுக்கன்னங்களாக மாற வேண்டுமா?, மார்பு கூட வேண்டுமா?, உடல் குறைபாடுகளா?

**குளிசை, பால்மா என்பன விற்பனைக்குண்டு**

**கருமை நிறம் நீங்க வேண்டுமா?**

077 210 6155 221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்

மலர்வு 27 . 10 . 1938



உதிர்வு 16 . 07 . 2021

### திருமதி அரியமலர் இரத்தினம்

மட்டுவில் மத்தி சாவகச்சேரியைச் சேர்ந்த திருமதி அரியமலர் இரத்தினம் அவர்கள் 2021.07.16 ந் திகதி வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா தங்கம்மா தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை வள்ளிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சின்னத்துரை இரத்தினம் அவர்களின் அன்புத் துணைவியாரும், சாந்தநாயகி (கனடா), பாக்கியநாதன் (மட்டுவில்), பத்மநாதன் (மட்டுவில்), பாஸ்கரநாதன் (ஜேர்மனி), வசந்த நாயகி (ஜேர்மனி), ஜெகநாதன் ( மட்டுவில்), சுகந்தி ( மட்டுவில்), பிரதாபன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் இராசலிங்கம், தயாநிதி, சுஷானியா, நாகேந்திரம், பரமேஸ்வரி, சிவானந்தன், லட்சனா ஆகியோரின் பாசமிகு மாமியாரும், துஷியந்தி - ஸ்ரீபிரகாஸ், தமயந்தி, ரூபினி - விபூஷணன், நிரோஷன், நிருஷிகா, காயத்திரி, கௌசல்யா, ஜெகதீஸ்வரன், துவாரகன், துவாரகா, அபர்ணா, விஷ்வா, ரித்திகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும் ஆகாஷ், அஷானா, ரியா, ரிசான் ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (2021.07.18 முற்பகல் 10.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் இடம்பெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக மட்டுவில் மத்தி நேரியத்தூ இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொ.பேசி இல. 0771793809 - ரவி**
**0770488347- சுகந்தி**

**தகவல்.**
**குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்

### சிவஞானம் ஜெகதீஸ்வரன்

**(புண்ணியம்)**

**(இளைப்பாறிய பொறியியலாளர் நெல் சந்தைப்படுத்தும் சபை)**

இல. 92, ஆடியபாதம் வீதி நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவஞானம் ஜெகதீஸ்வரன் நேற்று (17.07.2021) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிவஞானம் (ஈஸ்வரி மில் கல்வியங்காடு) சிவபாக்கியம் (ஓய்வுபெற்ற ஆசிரியர் செங்குந்தா இந்துக் கல்லூரி) தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனும் காலஞ்சென்றவர்களான இராஜேஸ்வரன், பேரின்பநாதன் மற்றும் ஜெயகௌரி, பாலஸ்கந்தா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் கமலாதேவி, செல்வராணி, செல்வராஜ், சுகந்தி ஆகியோரின் அன்பு மைத்துனரும் கல்யாணி, மயூரன், வசீகரன், பரதன், மைதிலி, சிவதர்சினி, சிவஜீவிதன், காலஞ்சென்ற சிவகானன் மற்றும் வைஷ்ணவி ஆகியோரின் சிறிய தந்தையும் ஜனனி, விபூஷன் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (18.07.2021) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் இடம்பெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**92, ஆடியபாதம் வீதி,**
**நல்லூர்,**
**யாழ்ப்பாணம்**

**தகவல்.**
**குடும்பத்தினர்**
**021 223 0232**
**077 351 2601**

## சிறுநீரகம் உடன் தேவை

**0 +** சிறுநீரகம் உடன் தேவை வழங்க விரும்புபவர்கள் உடன் தொடர்புகொள்ளவும்

**076 018 3700/ 077 468 5553**

## வேலை வாய்ப்பு

யாழ்ப்பாணம் மானிப்பாய் பகுதியில் இயங்கி வரும் ஏலிம் சிறுவர் இல்லத்திற்கு பின்வரும் பதவிகளுக்கு வெற்றிடங்கள் காணப்படுகின்றது.

**1. சிறுவர் பராமரிப்பாளர் (13 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள்) – ஆண்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம்**
**2. சமையலாளர் – ஆண்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம்**

**நிபந்தனைகள்:**

35 வயதிற்கு மேற்பட்டிருத்தல் வேண்டும்.
இல்லத்தில் தங்கியிருந்து வேலை செய்ய கூடியவராய் இருத்தல் வேண்டும்.
ஆர்வமுடையோர் விண்ணப்ப சுயவிபரகோவையை இரு நபர்களின் சிபாரிசுடன் கீழ்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**தவிசாளர்,**
**ஏலிம் சிறுவர் இல்லம், மெமோறியல் ஒழுங்கை மானிப்பாய்.**
**தொ.பே. இல. 072 768 1144**

## ST. JOHN'S COLLEGE, JAFFNA

## VACANCY

Application are hereby invited from qualified persons to teach

- Engineering Techology - A/L
- Tamil - A/L
- Mathematics (English Medium) - Grade 6 - 11

Please Send your Complete CV with the contact details of two non - related referees by registered post to reach before 31st july 2021 to the address below:

**The Principal**
**St. John's College**
**Jaffna.**

## வேலைவாய்ப்பு

### கணக்காளர் (பெண்)

**தகைமைகள்:**

- CA Srilanka / ACCA / CIMA கற்கைகளில் முழுமையான தேர்ச்சி அல்லது கணக்கீடு தொடர்பான கற்கை நெறிகளில் பொருத்தமான தேர்ச்சிகளை கொண்டிருத்தல்.
- கணக்கீடு அல்லது அது சார்ந்த துறையில் 3 வருட அனுபவம் Microsoft Office மற்றும் கணக்கீட்டு மென் பொருள்களில் சரளமான தேர்ச்சி
- வயது எல்லை 25 - 30

தேர்வு செய்யப்படும் தகுதியான நபருக்கு கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும். ஆங்கிலத்தில் சரளமான தேர்ச்சிக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தகுதியுடையவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் jobvacanciesjfn@gmail.com மூலம் கோரப்படுகின்றது.

மேலதிக விபரங்களுக்கு: **076 095 3655**

## பணியாளர் தேவை

யாழ் நகரில் அமைந்திருக்கும் வெண்பா புத்தக நிறுவனத்திற்கு நல்ல திறமையுள்ள பணியாளர்கள் தேவை.

புதிய சவால்களை ஏற்று இயங்கக்கூடியவராகவும், கணிதத்தில் நல்ல தேர்ச்சியும், கம்பியூட்டர் பயன்பாடு மற்றும் ஆங்கிலப் பரீட்சயமும் உள்ளவராக இருக்க வேண்டும். புத்தக வாசிப்பும், புத்தகங்கள் மேல் ஆர்வமுள்ளவராகவும் இருப்பது மேலதிகத்தகுதியாகும். தகுதிக்கும் திறமைக்கும் ஏற்றபடி ஊதிய அதிகரிப்பு உண்டு.

ஆர்வமுள்ளவர்கள், உங்கள் சுயவிபரக் கோவையை, உங்கள் புகைப்படத்தோடும் தொடர்பு இலக்கத்தோடும் மின்னஞ்சல் செய்யுங்கள்.

**venpaabookhouse@gmail.com**

**வெண்பா புத்தக நிறுவனம்**
**No 20A Hindu College Road, Jaffna**
**யாழ் இந்துக் கல்லூரி மைதான நுழைவியிலிற்கு எதிரில்**
**தொடர்பு எண் : 076 762 2100**
**இணையம்:** venpaa.lk



# 3 லட்சம் பேரின் தரவுகள் 'மிஸ்ஸிங்'

*இராணுவத் தளபதி தெரிவிப்பு*

கொழும்பு, ஜூலை 18

கொரோனாத் தடுப்பூசி பெற்றுக் கொண்டவர்கள் தொடர்பில் சுகாதாரத்துறையினரால் பதிவு செய்யப்பட்ட 3 லட்சம் பேரின் விவரங்கள் தவறவிடப்பட்டுள்ளதாக இராணுவத்தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:


தடுப்பூசி ஏற்றத் தொடங்கிய நாளிலிருந்து இராணுவம் கணினிகளில் தகவல்களை சேகரித்தது. சுகாதாரத்துறையினர் பதிவேடுகள் ஊடாக தகவல்களை சேகரித்தனர். அவ்வாறு சுகாதாரத்துறையினர் சேகரித்த தரவுகளை விமானப் படையினர் ஊடாக சேகரிப்பதற்கு முயற்சிகளை மேற்கொண்டோம். இந்தப் பணியில் ஈடுபட்ட விமானப் படையினர் பல இடங்களில் சிக்கல்களை எதிர் கொண்டனர். இந்தத் தரவுகளை யார் சேகரிக்கச் சொன்னார்கள் என்ற கேள்விகளால் அவர்கள் சிக்கல்களை சந்தித்தனர். தடுப்பூசிகளைப் பெற்றுக் கொண்ட 3 லட்சம் பேரின் தரவுகளை சுகாதாரத்துறையினர் வழங்கவில்லை. அதனை கணினிமயப்படுத்த வேண்டும், என்றார். (ஒ.சி)

# நோய்வாய்ப்பட்ட காட்டு யானை நேற்று உயிரிழப்பு

முல்லைத்தீவு, ஜூலை 18

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேச செயலர்பிரிவில், பெரியகுளம் வயல் வெளியில் நோய்வாய்ப்பட்டிருந்த காட்டு யானை ஒன்று நேற்று உயிரிழந்துள்ளது.

குறித்த பகுதியில் காட்டுயானை ஒன்று நோய்வாய்ப்பட்டு வயல்வெளியில் வீழ்ந்து காணப்பட்டுள்ளது. இதனை அப்பகுதி பொதுமக்கள் பார்வையிட்டு, ஒட்டுசுட்டான் பகுதியில் அமைந்துள்ள முல்லைத்தீவு மாவட்ட வனஜீவராசிகள் திணைக்களத்துக்கு தகவல் வழங்கினர். சம்பவ இடத்துக்கு வந்த வன ஜீவராசிகள் திணைக்கள மருத்துவர், உத்தியோத்தர்கள் நோய்வாய்ப்பட்ட யானைக்கு சிகிச்சை வழங்கினர். இருப்பினும் சிகிச்சை பலனின்றி யானை உயிரிழந்துள்ளது. (ப-246)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அலட்சியப் போக்கால் ஆபத்தை அழைக்காதீர்

யாழ்ப்பாணக் குடாநாட்டில் அண்மைய நாள்களின் கொரோனா தொற்றுப் பரவல் தொடர்பான அச்சமூட்டும் செய்திகள் வெளியாகின்றன. ஆனால் பொதுமக்களோ இந்த ஆபத்தான நிலைமைகள் பற்றிக் கிஞ்சித்தும் கவலை கொள்வதாக இல்லை என்பதையே அவர்களின் செயற்பாடுகள் காட்டுகின்றன.

பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, கிளிநொச்சி என பல இடங்களில் அதிக எண்ணிக்கையான தொற்றாளர்கள் இனங்காணப்பட்டு வருகின்றனர். அதைவிடவும் யாழ்ப்பாணம் உட்பட வடக்கு மாகாணத்தில் டெல்டா வைரஸ் திரிபுடனும் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டிருக்கின்றனர். எதிர்வரும் நாள்களில் டெல்டா தொற்றுப் பரவலின் வீரியம் அதிகரிக்கும் என்று பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கமும் எச்சரித்திருக்கின்றது.

மக்களின் நடமாட்டத்துக்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் இப்போது நீக்கப்பட்டிருக்கின்றன. சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி மக்கள் நடந்துகொள்ள வேண்டும் என்று சுகாதாரத் துறையும், அரசும் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றபோதும், மக்களின் செயற்பாடுகளில் திருப்தி கொள்ள முடியவில்லை.

வடக்கின் முக்கியமான நகரங்களில் மக்களின் நடமாட்டங்கள் இப்போது வழமைக்குத் திரும்பியிருக்கின்றன. பெரும்பாலான இடங்களில் தனிநபர் இடைவெளிகள் பேணப்படுவதில்லை. சுகாதார அறிவுறுத்தல்களும் சரியாகக் கடைப்பிடிக்கப்படுவதில்லை. இவை எதிர்காலத்தில் பெரும் அபாய நிலைமைக்கு எம்மை இட்டுச் செல்லுமோ என்ற அச்சம் எழுந்திருக்கின்றது.

புருத்தித்துறையில் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்ட வர்த்தகர்கள் சிலர் சுகாதார அதிகாரிகளின் அறிவுறுத்தல்களை மீறி பயணங்கள் மேற்கொண்டிருக்கிறார்கள். கொவிட் தொற்றுப் பரிசோதனைக்கான மாதிரிகளை வழங்கிய பின்னர் அவர்கள் தங்கள் சொந்த இடங்களான, வேறு மாவட்டத்துக்குச் சென்றுள்ளனர். இது எந்தவகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாத செயல். அவர்களுடன் தொடர்புடைய 70 பேர் வரையானோரின் தகவல்களைப் பெறமுடியாது, அவர்களைத் தனிமைப்படுத்த முடியாது அதிகாரிகள் இடர்களை எதிர்கொண்டிருக்கிறார்கள். அதேபோன்று கொரோனா தொற்றால் தனிமைப்படுத்தப்படும் இடங்களிலும் மக்கள் தங்கள் நடமாட்டங்களைக் கட்டுப்படுத்திக் கொள்வதாகத் தெரியவில்லை.

பெருந்தொற்றாக மாறியிருக்கும் கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்த சுகாதாரத் தரப்பினர், கடும் பிரயத்தனங்களை மேற்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தங்களின் சக்திக்கு அப்பாற்பட்டே இந்தக் காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்தும் முழுப் பொறுப்பையும் அவர்கள் மீது சுமத்திவிட முடியாது.


பொதுமக்களும் தங்கள் மீதுள்ள பொறுப்பைப் புரிந்து கொள்ள வேண்டும். தங்கள் தான்தோன்றித்தனமான செயற்பாடுகளால் நிலைமையைச் சிக்கலாக்கிவிடக்கூடாது. கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த சுகாதார அதிகாரிகள் மேற்கொள்ளும் காரியங்களுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டுமே தவிர, அவர்களுக்கு இடையூறாக இருக்கக்கூடாது.

ஒருவருக்குக் கொரோனாத் தொற்று அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக அவர்கள் தங்களைத் தனிமைப்படுத்திக் கொள்வது அவர்களுக்கும், அவர்களது குடும்பத்தினருக்கும், சமூகத்துக்கும் நல்லது என்பதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும். எமக்கு அருகில் யாருக்கேனும் கொரோனா தொற்று அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக சுகாதார அதிகாரிகளுக்கு அதுபற்றித் தெரியப்படுத்த வேண்டும். இதில் அச்சப்படவோ, அசூசைப்படவோ எதுவும் இல்லை. ஆனால் பெரும்பாலானவர்கள் அவ்வாறு நடந்து கொள்ளவில்லை.

தற்போது கண்டுபிடிக்கப்படாதிருக்கும் 70க்கும் மேற்பட்டவர்களில் சிலருக்குத் தொற்று இருந்தாலும், பல நூறு பேர் பாதிக்கப்படுவார்கள். இப்போது மக்கள் நடமாட்டங்களுக்குக் கட்டுப்பாடுகள் இல்லாத நிலையில், தொற்று பல இடங்களுக்கும் பரவவும் கூடும். பல நாள் கட்டுப்பாடுகளுக்குப் பின்னர் இப்போது கிட்டியுள்ள ஆசுவாசம் இவ்வாறான செயற்பாடுகளால் இல்லாது போகவும் கூடும்.

கொடிய பெருந் தொற்றில் இருந்து மீளும் சந்தர்ப்பங்களை எமது செயற்பாடுகளால் இழந்து விடக் கூடாது. தங்கள் சமூகப் பொறுப்புணர்ந்து சுகாதார நடைமுறைகளை இறுகக் கடைப்பிடிப்பதோடு, சுகாதாரத் துறையினர் மேற்கொள்ளும் பணிகளுக்கும் ஒத்துழைப்பு வழங்க வேண்டியதே பொதுமக்கள் முன் இப்போதுள்ள தலையாக கடமை.

வெண்ணெய் திரண்டு வரும் சமயம் தாழியை உடைப்பவர்களாக இருக்காது, அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட்டு இந்தப் பெருந் தொற்றில் இருந்து மீள்வோம்.




# நாட்டிலுள்ள 54 லட்சம் பேருக்கு முதலாவது டோஸ் ஏற்றப்பட்டது

**கொழும்பு, ஜூலை 18**

**நாட்டில் இதுவரை 53 லட்சத்து 89 ஆயிரத்து 497 பேருக்கு கொவிட் தடுப்பூசியின் முதலாவது டோஸ் ஏற்றப்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.**



இதற்கமைய, நேற்றுமுன்தினம் மாத்திரம் 2 லட்சத்து 21 ஆயிரத்து 753 பேருக்கு சீனாவின் சைனோஃபோம் தடுப்பூசியின் முதலாவது டோஸ் ஏற்றப்பட்டுள்ளது. மேலும், சைனோஃபோம் தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் நேற்றுமுன்தினம் 16 ஆயிரத்து 336 பேருக்கு ஏற்றப்பட்டுள்ளது. இதுவரை 3 லட்சத்து 85 ஆயிரத்து 885 பேருக்கு கொவிசீல்ட் தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் ஏற்றப்பட்டுள்ளது.

அத்துடன் இதுவரை ஒரு லட்சத்து 57 ஆயிரத்து 368 பேருக்கு் ஸ்புட்னிக் வி தடுப்பூசியின் முதலாவது டோஸ் ஏற்றப்பட்டுள்ளது. மேலும் 14 ஆயிரத்து 464 பேருக்கு ஸ்புட்னிக் வி தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் போடப்பட்டுள்ளது.

அதேபோல், நேற்றுமுன்தினம் 6 ஆயிரத்து 617 பேருக்கு பைஸர் தடுப்பூசியின் முதலாவது டோஸ் ஏற்றப்பட்டுள்ள நிலையில் இதுவரை 45 ஆயிரத்து 793 பேருக்கு பைஸர் தடுப்பூசியின் முதலாவது டோஸ் ஏற்றப்பட்டுள்ளது.

இதேவேளை, இலங்கையில் அபிவிருத்தி பணிகளில் ஈடுபட்டுள்ள சீன பிரஜைகள் 2 ஆயிரத்து 865 பேருக்கு சைனோஃபோம் தடுப்பூசியின் முதலாவது டோஸ் ஏற்றப்பட்டுள்ளதுடன் 2 ஆயிரத்து 435 பேருக்கு இரண்டாவது டோஸ் ஏற்றப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

(த-இ)

# தமிழர்களின் நம்பிக்கையை அரசு பெறவேண்டும்

### மனோ கணேசன் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூலை 18

இலங்கை அரசு தமிழ் மக்களின் நம்பிக்கையை பெறவேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பின் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

நிதி அமைச்சர் பஸில் ராஜபக்சவின் ருவிற்றர் பதிவு ஒன்றுக்கு இட்ட மீள்பதிவில் செய்து மனோ கணேசன் குறிப்பிட்டுள்ளதாவது:

"புது நிதியமைச்சர் பஸில் ராஜபக்ச சொல்வது சரி. நாட்டை வளர்க்க சர்வதேச முதலீடுகள் அவசியம்தான். ஆனால் தேவையானது ஆள் மாற்றம் இல்லை, கொள்கை மாற்றம். சர்வதேசத்தை நாடமுன்னர் இலங்கை அரசு "போலி தேசியவாதத்தை கைவிட்டு, தமிழ் பேசும் மக்களின் நம்பிக்கையை பெற வேண்டும்" என்று குறிப்பிட்டுள்ளார். (த-இ)

# சரியான பாதையில் செல்வாராயின் சேர்ந்து செல்வதற்கு நான் தயார்

### கூறுகின்றார் அமைச்சர் விமல் வீரவன்ச

"யாராவது ஒருவருடன் சரியான முறையில் பயணத்தைத் தொடர முடியுமாயின் அவர் யார் என்பது முக்கியம் இல்லை" என அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போது அவர் மேலும் தெரிவிக்கையில்:

"யாராவது ஒருவருடன் சரியான முறையில் பயணத்தைத் தொடர முடியுமாயின் அவருடன் தொடர்ந்து பயணிக்க நான் தயாராக இருக்கின்றேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பஸில் ராஜபக்ச நாடாளுமன்றுக்கு வரமாட்டார் என்று விமல் வீரவன்ச கூறிவந்தார். ஆனால், அதற்கு மாறாக பஸில் நாடாளுமன்றுக்கு வந்து அமைச்சராகவும் பதவி வகிக்கின்றார். அதனையடுத்து சில வாரங்களாக கருத்துத் தெரிவிப்பதைக் குறைத்துக்கொண்ட விமல் வீரவன்ச, தற்போது மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

(த-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 31 . 07 . 1947 | 16 . 07 . 2021 |

## இராசரத்தினம் புஸ்பமலர்

கட்டுப்பலானை, கோப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசரத்தினம் புஸ்பமலர் நேற்றுமுன்தினம் (16.07.2021) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - பூரணம் தம்பதியரின் அன்பு மகளும், இராசரத்தினத்தின் அன்பு மனைவியும், பொன்னையா - தங்கமுத்துவின் மருமகளும், தர்சினி (மருத்துக்கலவையாளர் பி.வை கோப்பாய்) கவிதா (ஆசிரியர் - கொழும்பு இசிபதன கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயும், ஞானாகரன் (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேசசெயலகம் கோப்பாய்) அவர்களின் மாமியும், சங்கவியின் அன்புப் பேர்த்தியும், விக்கினேஸ்வரலிங்கம் (கொழும்பு), கேசவநாதன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், மகேஸ்வரி, காலஞ்சென்ற சபாரத்தினம் மற்றும் தர்மராஜசிங்கம், காலஞ்சென்றவர்களான யோகரத்தினம், மனோரஞ்சிதம், தளையசிங்கம் மற்றும் சிவராசரத்தினம், பராசக்தி, ஈஸ்வரி, ஞானமணி, வசந்தா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.07.2021) ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்களுக்காக முற்பகல் 11.00 மணியளவில் கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கோப்பாய் வடக்கு.

தகவல்:
குடும்பத்தினர்.

On-line Free Classes
Diploma in English/ Spoken English
Diploma in ICT
Diploma in Sinhalam
Batch - IV
• காலம் : 03 மாதங்கள் சான்றிதழ்
• ஆரம்பம்: 24.07.2021, 10.00 P.m (Saturday)
IPS to your future
On-line Education Center, Jaffna.
Email : degreeinfo21@gmail.com
021 424 0229
076 685 2529

# மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 01 . 03 . 1962 | 03 . 07 . 2021 |

## வேல்முருகன் பாலகிருஷ்ணன் (பாலா)

பண்டத்தரிப்பு செட்டிகுறிச்சியைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனி (HildeSheim) இல் வசித்தவரும் கொழும்பு வெள்ளைவத்தை (Harmers Avenue) இல் நிரந்தர வதிவிடமாகக் கொண்ட வேல்முருகன் பாலகிருஷ்ணன் (பாலா) (03.07.2021 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற புலவர் வேல்முருகன் மற்றும் நாகேஸ்வரி தம்பதியரின் பாசமிகு புதல்வனும், காலஞ்சென்றவர்களான கங்காதரன் - இராசம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும், கங்கேஸ்வரியின் அன்புக் கணவரும், யதீஷனின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் நடைபெற்று தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 17 . 04 . 1949 | 16 . 07 . 2021 |

## திருமதி நடராஜா யோகேஸ்வரி

சண்டிலிப்பாய் வடக்கினை பிறப்பிடமாகவும் இல. 359/C இராமநாதபுரம், கிளிநொச்சியை வதிவிடமாகவும் கொண்ட நடராஜா யோகேஸ்வரி அவர்கள் நேற்று முன் தினம் (16.07.2021) வெள்ளிக்கிழமை இறைபாதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா தங்கமுத்துவின் அன்பு மகளும், நடராஜா (ஓய்வு நிலை உத்தியோகத்தர் - விவசாய நெல் ஆராய்ச்சி நிலையம், பரந்தன்) அவர்களின் அன்பு மனைவியும் ராஜசுதன் (தாதிய உத்தியோகஸ்தர் - மாவட்ட பொது வைத்தியசாலை கிளிநொச்சி) கிரிஷாந்த் (தாதிய உத்தியோகஸ்தர் - தேசிய தொற்று நோயியல் வைத்தியசாலை - கொழும்பு), திருமதி கிரிஜா தர்சன் (ஆசிரியை - கிளி/ இராமநாதபுரம் கிழக்கு அ.த.க பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தாயாரும், கங்காயினி (தாதிய உத்தியோகஸ்தர் - பிரதேச வைத்தியசாலை - சங்கானை), கம்சவாஹினி (தாதிய உத்தியோகஸ்தர் - வவுனியா பல்கலைக்கழகம்), தர்சன் (முகாமைத்துவ உதவியாளர் - தென்னை பயிர்ச் செய்கை சபை - யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், சேனாதிராஜா, கதிர்காமநாதன், லோகநாயகி, நகுலாம்பிகை, ஜெயவதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் தன்ஷிகா, லிதுர்ஷாந்த், ஹரிசாய்சன் மற்றும் பேரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.07.2021) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று மம்மில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

077 751 4327 - (ராஜசுதன் - மகன்)
077 737 5488 - (கிரிசாந் - மகன்)

தகவல்
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 02 . 03 . 1934 | 13 . 07 . 2021 |

## திரு. கந்தையா முத்துத்தம்பி

பெரியபளை, பளையைப் பிறப்பிடமாகவும், இல. 135, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. கந்தையா முத்துத்தம்பி கடந்த (13.07.2021) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற திருமதி சிவயோகத்தின் அன்புக் கணவரும், தேவிவிமலா (ஆசிரியை கொ/ விபுலானந்தா த.ம.வி) சாந்தாதேவி (ஆசிரியை யா/ சன்மார்க்க மகா வித்தியாலயம்) Dr. கருணாகரன் (அவுஸ்ரேலியா), மஞ்சுளாதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும், Dr. ஸ்ரீகரன் (மாலேபே நெவில் பெனான்டோ வைத்தியசாலை), காலஞ்சென்ற இராதாக்கிருஷ்ணன் (அதிபர்), சுதாகரன் (கொழும்பு), மஞ்சுளா (பொறியியலாளர் அவுஸ்ரேலியா) ஆகியோரின் அன்பு மாமனாரும், யுவன், வஜன், நிலஷ்சுமிகா, ஜார்த்தனாமீனு ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.07.2021) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல. 135, இராசாவின் தோட்ட வீதி,
யாழ்ப்பாணம் .
021 222 5676

தகவல்
குடும்பத்தினர்
077 174 9285

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கல்வி அமைச்சை ஏற்கத் தயார்

## திசாநாயக்க எம்.பி. தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 18

கல்வி அமைச்சை தனக்கு வழங்கினால் அதனை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கின்றேன் என்று நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். பி. திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

கல்வி அமைச்சு எஸ். பி. திசாநாயக்கவிடம் வழங்கப்படவுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. இது குறித்து ஊடகவியலாளர்கள் அவரிடம் கேள்வியெழுப்பினர். அதன்போது திசாநாயக்க மேலும் தெரிவிக்கையில்,

"கல்வி அமைச்சுப் பதவி எனக்கு வழங்கப்படவுள்ளது என்று யாரும் கூறவில்லை. அது குறித்து எனக்கு தெரியாது. எனக்கு அமைச்சு பதவி வழங்கினாலும் ஒன்று, இல்லையென்றாலும் ஒன்று. சபை அமர்வுகளில், மூப்பு அடிப்படையில் பிரதமர் மஹிந்த ராஜபக்சவுக்கு அடுத்தபடியாக நான் இருக்கின்றேன். எனினும், இந்த அரசில் எனக்கு அமைச்சு பதவி வழங்கப்படவில்லை. எனக்கு வழங்கப்படாதது தவறு என்றே எண்ணுகின்றேன்" என்றார். (த-இ)




## மூளைச் சாவடைந்த பெண்ணால் இரண்டு பேர் உயிர் பிழைத்தனர்

கண்டியில் மூளைச் சாவடைந்த பெண் மூலமாக 2 பேர் காப்பாற்றப்பட்ட சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. தந்தையை இழந்த இரண்டு பிள்ளைகளின் தாய் மூளை சாவடைந்த நிலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் உள்ளார் என்று மருத்துவர்கள் கூறியுள்ளனர்.

இந்தநிலையில் அவரது உடற்பாகங்களை தானம் செய்ய பிள்ளைகள் நடவடிக்கை எடுத்தனர் என்று கண்டி மருத்துவமனை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



45 வயதுடைய தாயின் உயிரை காப்பாற்ற முடியாத நிலை உள்ளதென மருத்துவர்கள் தெரிவித்த நிலையில், அந்தப் பெண்ணின் உடற்பாகங்களை தானம் செய்ய பிள்ளைகள் உடன்பட்டனர். அதன்படி, அந்தத் தாயின் உடற்பாகங்கள் இருவருக்கு தானம் செய்யப்பட்டு இருவரின் உயிர்களும் காப்பாற்றப்பட்டன.

நேற்றுமுன்தினம்காலை, மூளைச்சாவடைந்த பெண்ணின் குறித்த உடற்பாகங்கள் சத்திரசிக்சை மூலம் அகற்றப்பட்டு கேகாலை மற்றும் மீமுரே பிரதேசங்களை சேர்ந்த இருவருக்கு பொருத்தப்பட்டுள்ளன என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். (த-இ)

# கண்காணிப்புத் தொகுதி அரசிடம் அன்பளிப்பு

சமுத்திரப் பாதுகாப்புக்கு உதவும் பல நாள் படகுக் கண்காணிப்புத் தொகுதி ஒன்றை, ஆஸ்திரேலிய அரசு இலங்கைக்கு அன்பளிப்புச் செய்துள்ளது.

சட்டவிரோத மீன்பிடியைத் தடுத்தல், நாட்டின் எல்லைகள், இந்து சமுத்திர வலயப் பாதுகாப்பு, படகுகள் மூலம் மேற்கொள்ளப்படும் மனித மற்றும் போதைப்பொருள் கடத்தல்களைத் தடுத்தல் போன்றவற்றுடன், அனர்த்தத்துக்கு உள்ளாகும் படகுகளை இனங்கண்டு மீனவர்களைக் காப்பாற்றுவதற்கு, இந்தக் கண்காணிப்புத் தொகுதி பெரிதும் உதவுமென இலங்கைக்கான ஆஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் டேவிட் ஹொலி தெரிவித்தார்.

படகுகளில் பொருத்தப்படும் 4 ஆயிரத்து 200 சமிக்ஞை செலுத்தி வாங்கிகள் (ட்ரான்ஸ்பொன்டேர்ஸ்), கண்காணிப்பு மத்திய நிலையத்துக்குத் தேவையான அனைத்து வகையான கருவிகள், சற்றலைட் தொழிநுட்ப வசதிகளை உள்ளடக்கிய இந்தக் கண்காணிப்புத் தொகுதியின் பெறுமதி, 5.38 மில்லியன் ஆஸ்திரேலிய டொலர்களாகும்.

இந்தக் கண்காணிப்பு மத்திய நிலையமானது, கடற்றொழில் மற்றும் நீரியல்வள திணைக்களத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட உள்ளது.

இதன் முதலாவது ட்ரான்ஸ் பொன்டர் தொகுதி, நேற்றுமுன்தினம் முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து, ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவிடம் ஆஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் டேவிட் ஹொலி கையளித்தார்.

2015ஆம் ஆண்டு பொருத்தப்பட்டு, தற்போது செயலிழந்துள்ள இது போன்ற ஆயிரத்து 250 ட்ரான்ஸ் பொன்டர்கள், பல நாள் படகுகளில் உள்ளன. இந்த இயந்திரங்களை நவீனமயப்படுத்துவதற்கு உதவுமாறு, கடற்றொழில் அமைச்சர் முன்வைத்த கோரிக்கை தொடர்பில் உயர்ஸ்தானிகர் கவனம் செலுத்தினார்.

மக்கள் மைய பொருளாதாரக் கொள்கையை பலப்படுத்தி, சர்வதேச தரத்துக்கேற்ப மீன் மற்றும் கடற்றொழில் சார்ந்த ஏற்றுமதி நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கு, இந்தக் கண்காணிப்பு முறைமை பெரிதும் உதவுமென, புலம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பின் இலங்கைத் தலைவர் சரத் தாஸ் தெரிவித்தார்.

முக்கியத்துவம் வாய்ந்த பூகோள அமைவிடத்தைக் கொண்டுள்ள இலங்கையின் சமுத்திரப் பாதுகாப்புக்கு, இந்தக் கண்காணிப்பு முறைமையின் அவசியத்தைச் சுட்டிக்காட்டினார். மேலும், ஆஸ்திரேலியா அரசு இலங்கைக்கு தொடர்ச்சியாக வழங்கிவரும் உதவிகளுக்கும், ஜனாதிபதி நன்றி தெரிவித்தார்.

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் தினேஸ் குணவர்தன, கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் கஞ்சன விஜேசேகர, ஜனாதிபதியின் தலைமை ஆலோசகர் லலித் வீரதுங்க, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் அட்மிரல் ஜயநாத் கொலம்பகே ஆகியோ ரும், அமைச்சுகளின் செயலாளர், பாதுகாப்புத்துறை முக்கியஸ்தர்கள். அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் அலுவலகம் மற்றும் கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களம் உள்ளிட்ட நிறுவனங்களின் அதிகாரிகள், இந்த நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர். (த-இ)

## ஒருவர் குத்திக்கொலை மற்றையநபர் படுகாயம்

கொழும்பு, ஜூலை 18

வெலிகம, கப்பரதொட்ட பகுதியில் இருவர் கூரிய ஆயுதங்களால் தாக்கப்பட்டநிலையில், ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் இரவு 10.45 அளவில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது என தெரிவிக்கப்படுகின்றது. 50 வயதுடைய ஒருவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார். காயங்களுக்கு உள்ளான மற்றைய நபர் மாத்தறை மருத்துவமனையில் சிகிச்சைபெற்று வருகின்றார். சம்பவம் தொடர்பில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். விசாரணைகள் தொடர்கின்றன என்று வெலிகம பொலிஸார் தெரிவித்தனர். (த-இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

மண்ணில்
18
.
12
.
1978



விண்ணில்
14
.
07
.
2021

2021.07.14 இல் சிவனடி சேர்ந்த
**வேலணை மத்திய கல்லூரி ஆசிரியர் திலகம்**

## திருமதி சுதர்சினி வசீகரன்

அவர்களின் தூய ஆன்மா நித்தியப் பேரின்பப் பேறடைய பிரார்த்திக்கின்றோம்.

**சுடரொளி சுதர்சினியே ஏனம்மா**
**விண்ணிடை ஏகினாய் விரைந்தே ......**

சின்னவொரு பூவனைய சிந்தைமிக்காள்
சுடரெனவே வழிகாட்டும் வாஞ்சைமிக்காள்
நல்லனவே எண்ணிடும் வண்ணமிக்காள்
எண்ணிய எண்ணியாங்கு திண்ணமுறு
- தீரமிக்காள்
செய்வினை செம்மையுறு சீர்மைமிக்காள்
அறனறிந்து அறிவுடையார்
- கேண்மைமிக்காள்
திறனறிந்து சொல்லும் வாக்குமிக்காள்
மணிச்சுடர் சுதர்சினியே! உனை
மரணந்தான் அணைத்ததாமோ நாம்
நம்பித்தான் ஆகனுமோ?
விதியென ஆறிடும் வலிமையுண்டோ ? - உன்
பொன்னுடலைப் பாடையேற்றும்
- பாவியானோம்.
பொருவிலாப் பண்பாலின் சொலால ன்பால்
உ ளமெனும் வயல்விளை பொறைசே
- ரொப்பரவும்
உ யர்புகழ் நடுநிலையி வையும்
வளமுறு ஈகைய டக்கமும் சேர்ந்தே
ஒளிசெயும் அமைதி நிறைகதிர் சுதர்சினியே!
எம்மிடையு லாவினாய் வரமென உவந்தோம்
பழியென் செய்தோம் ஏகினாய் விண்ணிடை
- விரைந்தே!
பிணமெனப் பெயரிட்டு நினைப் பொழிந்து
- போவோமா!

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!
முழுத்தர முகாமைத்துவக் குழு
**யா/ வேலணை மத்திய கல்லூரி**

# மரண அறிவித்தல்

பிறப்பு
18
.
12
.
1978



இறப்பு
14
.
07
.
2021

## திருமதி வசீகரன் சுதர்சினி

(நடன ஆசிரியை யா/ வேலணை மதிய கல்லூரி)

நாவற்குழி கைதடியைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வசீகரன் சுதர்சினி அவர்கள் 14.07.2021 அன்று புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை சிதம்பரம் அவர்களின் பாசமிகு பேர்த்தியும் காலஞ்சென்ற மரியஞானசீலன் மற்றும் பரமேஸ்வரி தம்பதிகளின் ஏக புதல்வியும், காலஞ்சென்ற சிவஞானசுந்தரம் மற்றும் கனகாம்பிகை தம்பதிகளின் பாசமிகு மருமகளும் வசீகரன் (அபிவிருத்தி உத்தியோகத்தர் உள்ளூராட்சி அமைச்சு, வடக்கு மாகாணம்) அவர்களின் பாசமிகு மனைவியும், சுதறட்சன் (கனடா), சுதயூட்சன் (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், நவதாரணி (கனடா), றேமிசா (கனடா) அவர்களின் அன்பு மைத்துனியும், ஆதிராவின் பாசமிகு அத்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.07.2021) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக கோண்டாவில் கட்டை ஆலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இருபாலை வீதி,**
**கோண்டாவில் கிழக்கு.**
**077 233 6263**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

# மரண அறிவித்தல்

தோற்றம்
17
.
02
.
1956



மறைவு
11
.
07
.
2021

## திருமதி நடராஜா கௌசலாம்பிகை (கௌசலா)

யாழ்ப்பாணம் பெருமாள் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் பளையை தற்காலிய வசிப்பிடமாகவும் யாழ்ப்பாணம் பெருமாள் கோவிலடியை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட திருமதி நடராஜா கௌசலாம்பிகை (கௌசலா) கடந்த (11.07.2021) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பரராஜசிங்கம் தையல்நாயகி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற இளையதம்பி மாணிக்கம் தம்பதிகளின் அன்பு மருமகளும் அனுஷியா (ஹொலண்ட்), தனுஜா (லண்டன்), பாரதிதாஸ் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், முருகதாஸ் (ஹொலண்ட்), பாலசங்கர் (லண்டன்), வேணி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் கலாவாணி (யாழ்ப்பாணம்), சித்ரா (ஜேர்மனி), காலஞ்சென்றவர்களான நாகபாதம், தெய்வநாயகி, யோகேந்திரன், யசோதரஞ்சனி, சந்திரகுமார், ராஜசேகர் ஆகியோரின், அன்புச் சகோதரியும், ஆகாஸ், ஜதுஷா, மதுசன், ஜானுசன், பிரவீன், அஷ்வின், ஹான்சிகா ஆகியோரின்அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.07.2021) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**8/2, பெருமாள் கோவிலடி,**
**யாழ்ப்பாணம்.**
**00447380812312 (மாலதி)**
**0031630832503 (கீதா)**

**தகவல்**
**குடும்பத்தினர்**
**076 637 0761**
**00447427179124 (தாஸ்)**

# மரண அறிவித்தல்

பிறப்பு
17
.
12
.
1942



இறப்பு
16
.
07
.
2021

## வல்லிபுரம் இலட்சுமணன்

(ஓய்வுபெற்ற எழுதுவினைஞர் - மாவட்ட செயலகம் - யாழ்ப்பாணம்)

பாடசாலை வீதி, நாவற்குழி, கைதடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் இலட்சுமணன் நேற்றுமுன்தினம் (16.07.2021) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் - செல்லமுத்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற இரத்தினம் - கனகமணி தம்பதியரின் பாசமிகு மருமகனும், செல்வமணியின் அன்புக் கணவரும், துஷ்யந்தி (பிரதிப் பிரதம செயலாளர் அலுவலகம் - திட்டமிடல், வடக்கு மாகாணம் அபிவிருத்தி உத்தியோகத்தர்), தயானந்தி (மகாவலி அதிகார சபை - கழுகங்கை, மாத்தளை - சிவில் பொறியியலாளர்), விஜிதன் (லண்டன்), லிபியந்தி ஆகியோரின் அன்புத் தந்தையும், நிக்ஷன் ரைரஸ் (மாவட்ட செயலகம் - யாழ்ப்பாணம் - புள்ளிவிவர உத்தியோகத்தர்) என்பவரின் பாசமிகு மாமனும், ஐயாத்துரை, பவளம், சிவபாதம் பூமணி, வல்லிபுரம் தர்மலிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோரனும், இரத்தினம் செல்வராசா (ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் - புகையிரதத்திணைக்களம் - கொழும்பு), யோகராணி செல்வநாயகம் (ஓய்வுபெற்ற சங்கீத ஆசிரியை), புஸ்பராணி சிவமூர்த்தி (ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர் - மாவட்ட செயலகம் - வவுனியா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.07.2021) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிணமுருங்கை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**[illegible] வீதி,**
**நாவற்குழி, கைதடி.**

T.P.: **076 197 8114**
**077 926 1123**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை அரசின் செயலைக் கண்டித்து வவுனியாவில் கவனவீர்ப்பு போராட்டம்

**வவுனியா, ஜூலை 18**

**விலைவாசி உயர்வை கண்டித்தும், எரிபொருள்களின் விலையேற்றம், மற்றும் மக்களின் உரிமைக்காக போராடுபவர்களைக் கைதுசெய்வது உட்பட பல்வேறு விடயங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து வவுனியாவில் கவனவீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.**




புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியினரால் வவுனியா பழையபஸ் நிலையத்துக்கு அருகாமையில் இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கோத்தாபய, மகிந்த தலைமையிலான அரசு மக்கள் விரோதச் செயற்பாடுகளை தொடர்ந்து கொண்டிருப்பதை அண்மைக் காலங்களாக அவதானிக்கமுடிந்துள்ளது. உணவுப்பொருள்கள் மற்றும், எரிபொருள் ஆகியவற்றின் சடுதியான விலை அதிகரிப்பானது நாட்டுமக்களை, குறிப்பாக உழைக்கும் மக்களை வாட்டிவதைக்கின்றது. மக்களின் நலனை முன்னிறுத்துவோம் என்று ஆட்சிக்கு வந்த ஆட்சியாளர்கள் மக்கள் மீது சுமைகளையும் துன்பங்களையும் ஏற்படுத்திய நிலையில், மக்கள் வீதியிலே இறங்கிப் போராடவேண்டிய நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளனர். நாட்டின் சொத்துக்களையும் இறைமையும் தாரை வார்க்கும் அரசின் செயற்பாடுகளை கண்டிக்கும் அரசியல்சமூக செயற்பாட்டாளர்களை பொலிஸ் அராயகத்தைக் கட்டவிழ்த்து கைது செய்து தனிமைப்படுத்தும் செயலை இந்த அரசு முன்னெடுத்து வருகின்றது. விவசாயத்தை நம்பி வாழும் மக்கள் உரத்தைப் பெற்றுக்கொள்ள முடியாமல் அவதிப்பட்டுவருகின்றனர். அதற்கான மாற்றுக் கொள்கை அரசால் முன்னெடுக்கப்படவில்லை. இவற்றுக்கு வன்மையான கண்டனங்களை நாம் தெரிவித்துக்கொள்கின்றோம் என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

இதில் சமூகநீதிக்கான வெகுஜன அமைப்பினர், இலங்கை ஆசிரியர் சங்க உறுப்பினர்கள், தேசிய கலை இலக்கியப் பேரவையினர், புதிய சிந்தனை பெண்கள் அமைப்பு உட்பட பொது அமைப்புக்கள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டனர். (ப-110)

# வாரத்தில் மூன்று நாள்கள் பி.சி.ஆர்.பரிசோதனை

சாவகச்சேரி,ஜூலை 18

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தில் பிரதி செவ்வாய் ,வியாழன் மற்றும் சனிக்கிழமைகளில் காலை 8 மணி தொடக்கம் 9 மணி வரை பி.சி.ஆர்.மற்றும் அன்டிஜென் பரிசோதனைகள் இடம்பெற்றுவருகின்றன.

இந்தப் பரிசோதனைகளுக்கு வருவோர் காலை 8.30 மணிக்கு முன்னர் பணியகத்துக்கு வருகை தருமாறு பணியகத்தினர் அறிவித்துள்ளனர்.(ஐ-9)



# பாடசாலையில் இருந்த குளவிக்கூடு அழிப்பு

கொடிகாமம்,ஜூலை 18

கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்ப பாடசாலையின் மண்டபப் பகுதியில் இருந்த குளவிக்கூடு சாவகச்சேரி பிரதேச சபையால் நேற்றுமுன்தினம் இரவு எரித்து அழிக்கப்பட்டது.

பப்பறக்கொப்பான் என்று அழைக்கப்படுகின்ற நச்சுத்தன்மை கொண்ட குளவிக்கூடு ஒன்று காணப்படுகிறது என சாவகச்சேரி பிரதேச சபைக்கு பாடசாலை சமூகத்தால் அறிவிக்கப்பட்டது.

இதனையடுத்து பிரதேச சபையின் உபதவிசாளர் செ.மயூரனின் ஏற்பாட்டில் குளவிக் கூடு எரித்து அழிக்கப்பட்டது. (ஐ-159)





# வீரமக்கள் தினம்

தமிழீழ விடுதலை இயக்கத்தின் வீரமக்கள் தினம் நேற்றுமுன்தினம் வவுனியா கோவில்குளத்தில் அமைந்துள்ள உமாமகேஸ்வரன் சமாதி வளாகத்தில் நடைபெற்றது.

வவுனியா நகரசபை உறுப்பினர் சந்திரகுலசிங்கம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கட்சியின் தலைவரும் யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் கழகத்தின் கொடியை ஏற்றியதுடன், ஈகைச்சுடரேற்றி உமா மகேஸ்வரன் திருவுருவப்படத்துக்கு மலர்மாலை அணிவித்தார்.

தொடர்ந்து வடமாகாணசபை முன்னாள் உறுப்பினர்களான கஜதீபன் மற்றும் ஜி.ரி.லிங்கநாதன், பிரதேசசபை தவிசாளர்களான சு.ஜெகதீஸ்வரன், யோகராயா மற்றும் கட்சியின் முக்கியஸ்தர்கள் மலர்மாலை அணிவித்து மலர் தூவி அஞ்சலி செலுத்தினர். (ஐ-110)

# இடைத்தங்கல் மையத்துக்கு ஒருதொகுதி பொருள்கள் கையளிப்பு

கொடிகாமம்,ஜூலை 18

நாவற்குழி இடைத்தங்கல் மையத்தில் தங்கியுள்ள சிறுவர்களுக்கான பொழுதுபோக்கு கருவிகள் மற்றும் தொலைக்காட்சி உள்ளிட்ட பொருள்கள் வழங்கப்பட்டன.

சாந்திகம் தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் ஏற்பாட்டில் இந்தப் பொருள்கள் நேற்றுமுன்தினம் கையளிக்கப்பட்டன.

நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினரும் யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவருமான அங்கஜன் இராமநாதன் கலந்துகொண்டு இடைத்தங்கல் மையத்தின் பொறுப்பதிகாரியிடம் குறித்த பொருள்களை கையளித்தார். (ஐ-159)




# தொழில்நுட்ப ஆய்வுகூடத்துக்கு மன்னார் அடம்பனில் அடிக்கல்

மன்னார்,ஜூலை 18

மன்னார் அடம்பன் மத்திய மகா வித்தியாலயத்தில் 3 மாடிகளைக் கொண்ட தொழில்நுட்ப ஆய்வுகூடம் அமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

பாடசாலை அதிபர் பரஞ்சோதி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் விருந்தினர்களாக மடு வலயக் கல்வி பணிப்பாளர் எஸ்.சத்தியபாலன், பங்குத்தந்தை மற்றும் வடமாகாண கல்வித் திணைக்கள பொறியியலாளர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (ஐ-56)



# யாழ்.மின்சார நிலைய வீதியில் தொற்று நீக்கல் நடவடிக்கை

பொதுமக்கள் அதிகமாக நடமாடும் யாழ்ப்பாணம் மின்சார நிலைய வீதி நேற்றுமுன்தினம் இராணுவத்தினரால் நீர் ஊற்றி சுத்தம் செய்யப்பட்டதுடன், தொற்று நீக்கி மருந்து விசிறும் செயற்பாடும் முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்த பல்வேறுபட்ட வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இராணுவத்தின் 512 ஆவது பிரிகேட் படையினரால் குறித்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது. (ஐ-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அறிவியல்நகர் வளாகத்துக்கு புலிக்குளத்தின் மூலமாக நீர்

## திட்ட வரைபு சமர்ப்பிப்பு

கிளிநொச்சி, ஜூலை 18

அறிவியல்நகர் பல்கலைக்கழக வளாகத்துக்கு புலிக்குளம் மூலம் நீர் வழங்கலை மேற்கொள்வதற்கான விவரமான திட்ட வரைபு, மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணைத்தலைவருக்கு சமர்ப்பிப்பதற்காக மேலதிக இணைப்பாளர் றுஷாங்கனிடம் கையளிக்கப் பட்டது.

யாழ் பல்கலைக்கழக பேரவை உறுப்பினரும், ஒருங்கிணைப்புக்குழுத் தலைவரின் மேலதிக இணைப்பாளருமான கோ.றுஷாங்கனிடம், அறிவியல்நகரில் அமைந்துள்ள யாழ். பல்கலைக்கழக விவசாயபீட பீடாதிபதி கலாநிதி வசந்தரூபா உத்தியோகபூர்வமாக திட்டவரைபைக் கையளித்தார்.

துணைவேந்தர் பேராசிரியர் சிறிசற்குணராஜாவின் கையெழுத்துடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இந்தத் திட்ட வரைபில், திட்டத்தின் நோக்கம், இலக்குப் பயனாளிகள், புலிக்குளத்தில் மேற்கொள்ளப்படவேண்டிய கட்டுமான நடவடிக்கைகள், செலவீனங்கள் தொடர்பான விவரங்கள் உட்பட அனைத்து விடயங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன. திட்ட வரைபை உடனடியாக மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைத்தலைவரும், கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவிடம் சேர்ப்பித்த அவரது மேலதிக இணைப்பாளர் கோ.றுஷாங்கன், இதுவிடயம் எதிர்வரும் திங்களன்று அமைச்சரவையில் பேசப்பட்டு தீர்க்கமான முடிவுகள் எடுக்கப்படும் என்று அமைச்சர் உறுதியளித்துள்ளார் - என்று தெரிவித்துள்ளார். (ப-13)



# 1000 குருதிக்கொடையாளர்களை இணைக்கும் 15ஆவது செயற்றிட்டம்

சாவகச்சேரி ஜூலை 18

யாழ்ப்பாண மாவட்ட இளைஞர் நாடாளுமன்ற ஒன்றியத்தின் ஏற்பாட்டில் மாவட்ட இளைஞர் சம்மேளனம், பிரதேச இளைஞர் சம்மேளனங்கள் பொது அமைப்புகளின் பங்களிப்புடன் 30 நாள்களில் 1000 குருதிக்கொடையாளர்களை இணைக்கும் செயற்றிட்டம் நேற்றுமுன்தினம் 15ஆவது நாளாக சாவகச்சேரியில் நடைபெற்றது.

தென்மராட்சி இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் ஜனார்த்தனனின் வழிகாட்டலில் கைதடி நாவற்குழியின் ஸ்ரீ மஹாவிஷ்னு இளைஞர் கழகம் மற்றும் விளையாட்டுக் கழகத்தினரின் ஏற்பாட்டில் கைதடி நாவற்குழி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மண்டபத்தில் இந்தக் குருதிக்கொடை இடம்பெற்றது. இதில் 32 கொடையாளர்களால் குருதி வழங்கப் பட்டது. (ப-9)

# சமுர்த்தி திட்டத்தால் கிடைக்கும் நிதியில் 95 வீதமானது மீண்டும் சமுர்த்தி வங்கிக்கே

## பயனாளிகள் கடும் விசனம்

கிளிநொச்சி, ஜூலை 18

**கிளிநொச்சி மாவட்டத்தில் சமுர்த்திக் கொடுப்பனவில் கடன் அறவிடுதல் மற்றும் தண்டப்பணம் அறவிடுதல் என்ற பெயரில் பயனாளிகளுக்குக் கிடைக்க வேண்டிய 95 வீதமான பணம் மீளவும் சமுர்த்தி வங்கிகளில் செலுத்தப்படு கின்ற அவலம் தொடர்கின்றது.**

இது தொடர்பில் பாதிக்கப்பட்ட சமுர்த்தி பயனாளிகள் தெரிவிக்கையில்;

கடந்த ஏழு மாத கால சமுர்த்திக் கொடுப்பனவுகள் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன. ஒரு பயனாளி ரூபா 20 ஆயிரம் ரூபா பணத்தைப் பெற்றுக்கொள்கின்ற போது கடன் அறவீடு, கடன் செலுத்தப்படாத காலத்துக்கான தண்டப் பணம் என ரூபா 18 ஆயிரம் வரை சமுர்த்தி வங்கியில் மீளச் செலுத்த வேண்டி உள்ளது. இதனால் ரூபா 2 ஆயிரத்துக்கும் குறைவான பணமே ஒரு பயனாளி பெற்றுக் கொள்ளவேண்டியநிலைமை காணப் படுகின்றது. கொவிட் - 19 அச்சுறுத்தல், பயணத்தடை போன்ற பல்வேறு காரணங்களால் வறுமை நிலையில் வாழ்கின்ற சமுர்த்திப் பயனாளிகளின் குடும்பங்கள் நீண்ட நாள்களுக்குப் பின்னர் சமுர்த்திக் கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்ளும் போது சமுர்த்தி வங்கிகள் விட்டுக் கொடுப்புடன் குறைந்த கடன் அறவீடு, குறைந்த தண்டம் என பயனாளிகளிடம் பெறுவதன் மூலம் சமுர்த்திப் பயனாளிகள் நன்மையடைய முடியும். இதனைவிடத்து முழுமையான கடன் அறவீடு, கடன் செலுத்தாததற்கான தண்ட அறவீடு என்பவை கிளிநொச்சி மாவட்ட சமுர்த்திப் பயனாளிகளைப் பாதித்துள்ளது. இவ்விடயம் தொடர்பாக கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் மற்றும் மாவட்ட சமுர்த்தி ஆணையாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர். (ப-13)

# அக்கராயன் வயல்நில வீதியை விரைந்து சீரமைக்கவேண்டும்

## நாகதம்பிரான் கமக்கார அமைப்பின் தலைவர் கோரிக்கை


கிளிநொச்சி, ஜூலை 18

கிளிநொச்சி ஸ்கந்தபுரத்தில் இருந்து முக்கொம்பன் செல்லும் வீதி கடுமையாக சேதமடைந்திருப்பதால், வயல் நிலங்களில் இருந்து அறுவடைகளை முடித்து நெல் மூடைகளை வீடுகளுக்கு எடுத்து வர முடியாதுள்ளது என்று அக்கராயன் நாகதம்பிரான் கமக்கார அமைப்பின் தலைவர் சி.கனகசபாபதி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

கடந்த ஐந்தாண்டுகளுக்கு முன்னர் ஸ்கந்தபுரத்தில் இருந்து முக்கொம்பன் செல்லும் வீதியில் ஒரு கிலோ மீற்றர் வரையான வீதி நிரந்தரமாக சீரமைக்கப் பட்டது. தரமற்ற வெண் கிரவல் வீதியின் சீரமைப்புகளின் போது பயன்படுத்தப்பட்டதால் வயல் வெளிக்குச் செல்லும் குறித்த வீதி பெரும் குண்டும் குழியுமாக மாறி உள்ளது. தற்போது சிறுபோக அறுவடை 10 நாள்களில் ஆரம்பமாக உள்ள நிலையில் வயலில் இருந்து நெல் மூடைகளை வீடுகளுக்கு எடுத்து வருவதோ வெட்டு இயந்திரங்களை வயல்களுக்குக் கொண்டு செல்வதோ முடியாத காரியமாக உள்ளது. வீதியின் சீரமைப்புக்கு முன்னர் வாகனங்களை வயலுக்குக் கொண்டுசெல்ல முடியும். வீதியை சீரமைத்த பின்னர் ஏற்பட்டுள்ள பெரும் குழிகளால் வாகனங்களைக் கொண்டு சென்று வருவதில் சிரமங்கள் காணப்படுகின்றன. இவ்விடயம் தொடர்பாக கடந்த ஆண்டு மாவட்டச் செயலாளரிடம் நேரடியாக எடுத்துரைத்திருந்தோம். எனினும் இதுவரை வீதி சீரமைக்கப்படவில்லை - என்றார். (ப-13)






# வட்டுவாகல் பாலத்துக்கு உடனடியாக ஒளியூட்டுக

## மீனவர்கள் கோரிக்கை

முல்லைத்தீவு, ஜூலை 18

முல்லைத்தீவு வட்டுவாகல் பாலத்தில் மின் குமிழ்களைப் பொருத்துவதற்கு நெருக்கடி நிலைமை காணப்பட்டால் சூரிய மின்கல வெளிச்சமூட்டலையாவது மேற்கொள்வதற்கு கரைதுறைப்பற்று பிரதேச சபை முன்வரவேண்டும் என அந்தப் பகுதி கடற்றொழிலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்;

வட்டுவாகல் பாலத்தில் இருந்து நந்திக் கடலில் தொழில் ஈடுபடுவோர் தமது கடலுணவை தரம் பிரித்தல், வலைகளைத் துப்பரவுசெய்தல் என்பவற்றை வட்டுவாகல் பாலத்தில் வைத்தே மேற்கொள்வார்கள். வட்டுவாகல் பாலம் இருளில் மூழ்கி இருப்பதால் விபத்துகள் ஏற்படக்கூடிய அபாய நிலைமை காணப்படுகின்றது. வட்டுவாகல் பாலத்தில் மின் குமிழ்களை பொருத்துவதற்கு நடைமுறைச் சிக்கல் காணப்பட்டால் சூரிய மின்கலம் மூலம் இப்பகுதியில் வெளிச்சத்தை ஏற்படுத்தலாம். கடந்த பிரதேச சபை அமர்வுகளிலும் வட்டுவாகல் பாலம் உட்பட முல்லைத்தீவு நகரச் சூழலில் இருளில் மூழ்கி உள்ள பகுதிகளை வெளிச்சமூட்டுதல் தொடர்பாக ஆராயப்பட்டிருந்தது. வட்டுவாகல் பாலத்துக்கு வெளிச்சமூட்டுதல் தொடர்பாக கடந்த கால பிரதேச சபை அமர்வுகளில் தீர்மானங்கள் எடுக்கப்பட்டும் அவை நடைமுறைப்படுத்தப்படாமல் காணப்படுகின்றன. எனவே அவற்றை உடன் நடைமுறைப்படுத்த வேண்டும் - என்றனர். (ப-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம் மதமானாலும் அதற்குரிய மரியாதை கிடைக்கவேண்டும்

## காவிந்த ஜெயவர்த்தன எம்.பி. தெரிவிப்பு

**மன்னார், ஜூலை 18**

**மாவனல்ல புத்தர் சிலை உடைப்பு விவகாரம், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் உள்ளிட்ட பலவற்றுக்கு இதுவரையில் நீதி கிடைக்காத நிலையில் தற்பொழுது மன்னார் பகுதியில் மூன்று தினங்களாக கத்தோலிக்க மக்கள் செறிந்து வாழும் பிரதேசங்களில் உள்ள அவர்களின் வழிபாட்டுத் தலங்கள் சேதப்படுத்தப்பட்டமை அதிர்ச்சியளிக்கின்றது. நாம் யாரையும் விரல் நீட்டி குற்றம் சுமத்தவில்லை, எந்த மதமாக இருந்தாலும் அவற்றுக்குரிய மரியாதை கிடைக்க வேண்டும் என்பது தமது நிலைப்பாடு என நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜெயவர்த்தன தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

மன்னாரில் கத்தோலிக்க மத சிற்றாலயங்கள், திருச் சொரூபங்களைச் சேதப்படுத்திய சம்பவங்கள் மன வேதனையை ஏற்படுத்தியுள்ளன. நாட்டிலுள்ள சகல மதத்தவர்களும் ஒன்றுமையாக வாழ வேண்டிய நிலையில் இத்தகைய சம்பவங்களை ஏற்றுக்கொள்ள முடியாது.

சிற்றாலயங்களை சேதப்படுத்திய சம்பவங்களை எவர் செய்திருந்தாலும் அதனை நான் வன்மையாகக் கண்டிக்கின்றேன். இதில் ஈடுபட்டவர்களை கண்டுபிடித்து சட்டத்தின் முன் நி_த்த வேண்டும். நான் தற்பொழுது கவனித்ததிலிருந்து எனக்கு தெரியவருவதாவது, மன்னார் நகரில் சேதப்படுத்தப்பட்ட இந்த வழிபாட்டுத் தலங்கள் கத்தோலிக்க மக்களின் மிக முக்கியமான தலங்கள் ஆகும்.

அத்துடன் கத்தோலிக்க மக்கள் செறிந்து வாழும் பிரதேசங்களில் உள்ள இந்த வழிபாட்டுத்தலங்கள் சேதப்படுத்தப்பட்டமை எமக்கு அதிர்ச்சியளிக்கின்றது. இது போன்ற சம்பவங்கள் கண்டி உள்ளிட்ட சில பிரதேசங்களிலும் இடம் பெற்றுள்ளன.



இத்தகைய சம்பவங்கள் எத்தகைய மனநிலையில் செய்யப்பட்டாலும் குற்றவாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும் - என்றார். (ப-60)





*வவுனியாவில்*

# சிறப்பாக நடைபெற்ற ஆடிப்பிறப்பு நிகழ்வு

வவுனியா,ஜூலை 18

ஆடிப்பிறப்பு நிகழ்வு வவுனியா பசார்வீதியில் உள்ள நவாலியூர் சோமசுந்தரபுலவரின் சிலையடியில் நேற்று சிறப்பாக நடைபெற்றது.

வவுனியா முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கம் மற்றும் வவுனியா நகரசபை ஆகியவை இணைந்து நிகழ்வை ஏற்பாடுசெய்து நடத்தின.

இதன்போது விருந்தினர்களால் சோமசுந்தர புலவரின் சிலைக்கு மாலை அணிவிக்கபட்டு, மலரஞ்சலி செலுத்தப்பட்டது. தொடர்ந்து சிறப்புரையை ஆசிரிய ஆலோசகர் நிறைமதி நிகழ்த்தினார்.

நிகழ்வில் விருந்தினர்களாக நகரசபை செயலாளர், நகரசபை உறுப்பினர்கள், பிரதேசசபை உறுப்பினர்கள், பொதுஅமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஐ-110)

# வலுவூட்டலுக்காக தென்மராட்சியில் 900 பேர் தெரிவு

சாவகச்சேரி, ஜூலை 18

தென்மராட்சி பிரதேச சமுர்த்தி அலகினர் இவ்வருடம் சமுர்த்தி பயனாளிகள் 900 பேரை வலுவூட்டலுக்காகத் தெரிவு செய்துள்ளனர்.

விவசாயம்,கடற்றொழில், கால்நடை வளர்ப்பு, சிறு வியாபாரம், தையல் போன்றவற்றுக்கு தெரிவு செய்யப்பட்ட 766 பேர் அங்கீகரிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் ஆடு ,மாடு, கோழி வளர்ப்புக்குத் தெரிவுசெய்யப்பட்ட 350 பேருக்கு தொழுவங்கள் அமைத்தல், கூடு அமைத்தல் போன்றவை தொடர்பான அறிவுறுத்தல்கள், அண்மையில் (பயனாளர்களுக்கு) வழங்கப்பட்டன. ஒவ்வொன்றும் இரண்டு லட்சம் ரூபா வேலைத் திட்டங்களுக்கு 60 வீத மானியம் வழங்கப்படவுள்ளது. ஒவ்வொரு வேலைத்திட்டங்களுக்கும் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகள் கிராம அலுவலர் பிரிவு ரீதியாக பிரதேச செயலகத்துக்கு அழைக்கப்பட்டு திட்டத்தின் பயன்பாடுகள் தொடர்பாக சமுர்த்தி அலகினரால் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு வருகின்றன. (ப-9)

# டெங்குப் பரிசோதனைகள் சாவகச்சேரியில் ஆரம்பம்

சாவகச்சேரி ஜூலை 17

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தினர், பிரதேசத்தில் டெங்கு தொடர்பான திடீர் பரிசோதனைகளை கிராம அலுவலர் பிரிவு ரீதியாக ஆரம்பித்துள்ளனர்.

பிரதேசத்தில் இடைக்கிடையே மழை பெய்து வருவதால் டெங்கு மீண்டும் உருவாகாமல் தடுப்பதற்காக. பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களும், டெங்கு களத்தடுப்பு உதவியாளர்களும் இணைந்து வீடு வீடாகச் சென்று பரிசோதனைகளை மேற்கொண்டு வருகின்றனர். அண்மையில் கொடிகாமம் மத்தி பிரிவில் 37 வீடுகளில் திடீர் பரிசோதனைகளை மேற்கொண்ட போது, டெங்குக் குடம்பிகள் காணப்பட்ட நான்கு குடியிருப்பாளர்களுக்கு சிவப்பு அறிவித்தல் வழங்கி. 7 தினங்களுக்குள் துப்புரவுசெய்ய வேண்டுமென அறிவித்துள்ளனர்.

மேலும் எட்டு வீடுகளில் டெங்குக் குடம்பிகள் உற்பத்தியாகக்கூடிய நீர் ஏந்துப் பாத்திரங்கள் காணப்பட்டமையால் அவற்றை அப்புறப்படுத்துமாறு கூறி அவை அப்புறப்படுத்தப்பட்டன. இதே வேளை பிரதேசத்தில் இடையிடையே மழை பெய்வதால் குடியிருப்பாளர்கள் தமது குடியிருப்புக்கள்,மற்றும் காணிகளில் காணப்படும் நீர் ஏந்து பொருள்களை அப்புறப்படுத்துமாறும் ,கூடுமானவரை ஒவ்வொரு குடியிருப்புகளையும் துப்புரவாக வைத்திருக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இரு தினங்களுக்கு காய்ச்சல் காணப்படின் அருகில் உள்ள மருத்துவமனையில் மருத்துவ ஆலோசனையைப் பெற்றுக்கொள்ளுமாறும் சுகாதாரப் பிரிவினர் அறிவித்துள்ளனர். (ப-9)

# நீர்க்குழாய்கள் புதைக்கத் தடை

கிளிநொச்சி,ஜூலை 18

கரைதுறைப்பற்று பிரதேச சபைக்கு சொந்தமான வீதிகளில் நீர்க்குழாய் புதைப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. சபையின் மாதாந்த அமர்வு கடந்த வியாழக்கிழமை தவிசாளர் க.விஜிந்தன் தலைமையில் நடைபெற்றது.

நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையினர் கரைதுறைப்பற்று பிரதேச சபைக்கு சொந்தமான வீதிகளை சேதப்படுத்தி விட்டு சீரமைத்து தராமை தொடர்பாக சபையில் கருத்து முன்வைக்கப்பட்டது.

வடிகாலமைப்பு சபை. வழங்கப்பட்ட காலப்பகுதிக்குள் வேலைகள் சரியாக நடைபெறவில்லை என்பதால் உடனடியாக பிரதேச சபைக்கு சொந்தமான வீதிகளில் நீர்க்குழாய் புதைப்பதை நிறுத்தும்படி கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என்று தவிசாளர் தெரிவித்தார். (ஐ-13)

# முல்லைத்தீவு மருத்துவமனைக்கு ஒட்சிசன் இயந்திரம் கையளிப்பு

முல்லைத்தீவு,ஜூலை 18

முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனைக்கு 21 லட்சம் ரூபா பெறுமதியான ஒட்சிசன் செறிவூட்டி இயந்திரம் மன்னார் மெசிடோ நிறுவனத்தால் கையளிக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் வைத்து முல்லைத்தீவு சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் உமாசங்கரிடம்,மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் யாட்சன் பிகிராடோ இயந்திரத்தை கையளித்தார்.

மேலும் நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தின் பிரதம கணக்காளர் ஜேசு ரெஜினோல்ட் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட உதவி பிரதேச செயலர் திருமதி [illegible] உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். (ஐ-213)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேலும் 31 பேர் சாவு மொத்தக் காவு 3,733

கொழும்பு, ஜூலை 18
இலங்கையில் மேலும் 31 கொரோனாத் தொற்றாளர்கள் உயிரிழந்துள்ளனர் என்று அரச தகவல் திணைக்ககளம் உறுதிப்படுத்தியுள்ளது.
நேற்றுமுன்தினம் இவ்வாறு உயிரிழந்தவர்களில் 17 ஆண்களும், 14 பெண்களும் அடங்குக்கின்றனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. இதற்கமைய நாட்டில் பதிவான கொரோனா மரணங்களின் மொத்த எண்ணிக்கை 3 ஆயிரத்து 733ஆக அதிகரித்துள்ளது. (ம-22)


## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நல்லூர் செட்டித் தெரு வீதியில் வரிமதிப்பு எண் 10 கொண்டதும் விஸ்தீரணம் நில.பர 01 1/2 யும் வீடும் விற்பனைக்கு உண்டு.

**076 702 3565**

## விற்பனைக்கு

யாழ் ஆஸ்பத்திரி வீதியில் வைத்தியசாலைக்கு முன்பாக 15 அடி அகலமும் 60 அடி நீளமும் கொண்ட 3 மாடிக் கடையும் நவீன சந்தைக் கட்டடத்திற்கு முன்பாக 16 அடி அகலமும் 200 அடி நீளமும் கொண்ட 2 காணித்துண்டு யாழ் பிறவுண் வீதியில் 3 பரப்புக்காணியில் அமைந்த வீடு 2 1/2 பரப்புக்காணியும் வீடும் யாழ் பலாலி வீதியில் 3 பரப்புக் காணித்துண்டும் 5 பரப்புக்காணித் துண்டும் யாழ் வேம்படி பாடசாலை வீதியில் 3 பரப்புக் காணியும் விற்பனைக்கு உண்டு.

**077 723 2535**


## டிப்பர் மோதியதில் தாய் ஒருவர் சாவு

கொழும்பு, ஜூலை 18
புத்தளம் - கொழும்பு பிரதான வீதியில் பயணித்த டிப்பர் வாகனத்துடன் மோட்டார் சைக்கிள் ஒன்று மோதியதால் இடம்பெற்ற விபத்தில் ஒரு பிள்ளையின் தாய் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். இந்த விபத்து நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.
முந்தலம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட குருஹன்வில்லுவ பிரதேசத்தை சேர்ந்த வைரய்யா வசுமதி என்ற 42 வயதுடைய ஒரு பிள்ளையின் தாயாரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். உயிரிழந்த பெண் தனது கணவன் மற்றும் பிள்ளையுடன் மோட்டார் சைக்கிளில் முந்தலம் நோக்கி பயணித்துக் கொண்டிருந்த போது டிப்பர் வாகனத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளனர். விபத்தில் கணவன் மற்றும் பிள்ளை சிறு காயங்களுடன் உயிர்தப்பிய நிலையில், தாய் படுகாயமடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். டிப்பர் வாகனத்தின் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளார். விசாரணை தொடர்கின்றது என்று பொலிஸார் தெரிவித்தனர். (த-இ)


## வேலைக்கு ஆள் தேவை

பலசரக்கு கடைக்கு ஆர்வமுள்ள / அனுபவமுள்ள வயது எல்லை 20-40 வரையுள்ள ஆண் வேலையாள் கடைக்கு தேவை. சம்பளம் 45000 - 60000 வரை வழங்கப்படும்.

**077 067 4452**

## வேலையாள்கள் தேவை

வட மத்திய மாகாணத்தில் இயங்கிவரும் உற்பத்தி தொழிற்சாலைக்கு மில் வேலையில் அனுபவமுள்ள தொழில்நுட்ப உதவியாளர் எலக்ட்ரீஷியன் தேவை. தங்குமிடம், உணவு வழங்கப்படும்.

**076 138 9450**


## தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்க வருடாந்த பொதுக்கூட்ட அறிவித்தல்

எமது சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் எதிர்வரும் 01.08.2021 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு எமது சங்கப் பணிமனையில் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி நடைபெறவுள்ளது.
ஆகவே சகல அங்கத்தவரும் தவறாது உரிய நேரத்திற்கு சமூகமளிக்குமாறு கேட்டு நிற்கின்றேன்.

செயலாளர்


## உடனடி வேலைவாய்ப்பு
## VACANCIES AT THINNAI

WE ARE LOOKING FOR,
01. RECEPTIONISTS - MALE / FEMALE
02. DRIVERS - HEAVY VEHICLE
03. ROOM BOYS
CALL US FOR AN INTERVIEW
OR
SEND YOUR CV TO hr@thethinnai.com

THINNAI HOTEL
86, PALALY ROAD, THIRUNELWELI, JAFFNA
**021 2030 400**


## யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம் (வ-து)
## பலகை அரிவதற்கான மரம் மற்றும் விறகுகளிற்கான கூறுவிலை கோரல்

யாழ் பல நோக்குக் கூட்டுறவுச்சங்கத்தின் வளாகத்தில் ஒரு தொகுதி வேப்ப மரங்கள், விறகுகள் விற்பனைக்கு உள்ளன. எனவே கொள்வனவு செய்ய விரும்புவோர் நேரில் பார்வையிட்டு விலை மதிப்பீட்டினை அறியத்தருமாறு கேட்டுக்கொள்கிறோம்.

விண்ணப்ப முடிவுத் திகதி : - 2021.08.02
விண்ணப்பிக்கும் முறை : -
மேற்படி கூறுவிலைக்கான விண்ணப்ப படிவத்தினை சங்கத்தின் தலைமைக் காரியாலயத்தில் ரூபா. 10.00 இனை செலுத்திப் பெற்று, நேரில் அல்லது தபாலில் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில், "பலகை அரிவதற்கான மரம், விறகுகளிற்கான கூறுவிலை கோரல்" எனக்குறிப்பிட்டு " தலைவர், யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறச் சங்கம் (வ-து), இல. 127, கே.கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம்." என்னும் முகவரிக்கு 2021.08.02 ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

தலைவர்,
யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம் (வ-து).

## மரண அறிவித்தல்

தோற்றம் 15 . 04 . 1948



மறைவு 17 . 07 . 2021

### திருமதி இந்திராணிதேவி சச்சிதானந்தன்

இணுவில் மஞ்சத்தடியை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி இந்திராணிதேவி சச்சிதானந்தன் நேற்று (17.07.2021) சனிக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற நடராசா - நாகம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற திருநாவுக்கரசு - சின்னாச்சிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சச்சிதானந்தன் (போர்மன், இ.போ.ச) அவர்களின் அன்பு மனைவியும், ஜெயேந்திரன் (Cost Controller, மாலைதீவு), நவநீதன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், Dr.காயத்திரி - ஜெயேந்திரன் (தேசிய புற்றுநோய் வைத்தியசாலை - மகரகம) அவர்களின் அன்பு மாமியாரும், கமலேஸ்வரி, சறோஜினிதேவி, திரு ஞானசம்பந்தர் (கனடா), ஞானசம்பந்தர், ஞானசூரியர் ஆகியோரின் அன்புச் சகோதரியும், திருமதி இந்திராணி கேசவன், காலஞ்சென்ற கனகசபாபதி மற்றும் யோகராசா, மாலினி, சிவசக்தி, சாந்தினி (விரிவுரையாளர்) ஆகியோரின் மைத்துனியும், சூரியகலா இராஜேந்திரன் கலைவேந்தன் (சுவிஸ்), தமிழ்வேந்தன் (சுவிஸ்), காலஞ்சென்ற காண்டீபன், Dr. கஜேந்திரன், கார்த்திகா திலீபன் (ஆசிரியை), சிந்துஜன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சிறிய தாயாரும் சேயோன் (UK), பாலமுரளி (இ.போ.ச - காரைநகர்), முகுந்தன் (பிரான்ஸ்), முரளிதரன் (கொலன்ட்), செந்தில்ராஜா, கஸ்தூரி, வாசுகி, விதுரன், வானதி, வீஸ்மன், இதபாஷினி, சாருகர்சினி, நந்தேசன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.07.2021) ஞாயிற்றுக்கிழமை மதியம் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இணுவில் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மஞ்சத்தடி,
இணுவில்

தகவல்
ச. ஜெயேந்திரன் - ( மகன் )

## கண்ணீர் அஞ்சலி

### இராசேந்திரா இரத்தினேஸ்வரி

பிறப்பு : 26.03.1950 இறப்பு : 15.07.2021



எமது பிரதேச செயலக பெண்கள் அபிவிருத்தி அலுவலர் **மீரா** அவர்களின் அன்புத் தாயார்
**இராசேந்திரா இரத்தினேஸ்வரி**
15.07.2021 அன்று காலமானார். அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர்கள் நலன்புரிச் சங்கம்
பிரதேச செயலகம்
காரைநகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒடுக்குமுறைகளை உடன் நிறுத்தாவிடின் பின்விளைவுகளை நிச்சயம் சந்திப்பீர்கள்

## அரசுக்கு ஆசிரியர் சேவை சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 18

அரசு தற்போது ஆரம்பித்துள்ள ஒடுக்குமுறைகளை உடனடியாக நிறுத்த வேண்டும். மாணவர் கல்வி வியாபாரம், தொழில் வகுப்பினருக்கு எதிராக அரசு செயற்படுமாயின் பின்விளைவுகளை நிச்சயம் சந்திக்க நேரிடும் இவ்வாறு இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் பிரதான செயலாளர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்தார். கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

'கடந்த 8ஆம் திகதி அநீதி இழைக்கும் வகையில் கைதுசெய்யப்பட்டு தனிமைப்படுத்தலில் வைக்கப்பட்டிருந்த ஜோசப் ஸ்டாலின் உள்ளிட்டவர்களை, அரசு வெறும் 8 நாள்களுக்குள் விடுவித்தது. இது மாணவர் கல்வி, வியாபாரம் மற்றும் தொழில் வகுப்பினரின் போராட்டத்துக்குக் கிடைக்கப்பெற்ற வெற்றியாகும். அரசு தனது மக்கள் பலத்தை வைத்து நாட்டின் மாணவர் கல்வி, வியாபாரம், தொழில் வகுப்பினரை ஒடுக்குவதற்கு முயற்சித்தது. எனினும், நாம் அரசிடம் ஒன்றைக்கூற விளைகின்றோம். உங்களது முயற்சிகளை முறியடிப்பதற்காக மாணவர் படையணியும் தொழில் வகுப்பினரும் ஒன்றிணைந்துள்ளோம். அரசுக்கு நாம் கொடுத்த அழுத்தத்தை அரசு புரிந்துகொள்ள வேண்டும். தொழில் வகுப்பினருக்கு எதிராக அரசு செயற்படுமாயின் இவ்வாறான பின்விளைவுகள் ஏற்படும் என்பதை அரசுக்குத் தெளிவாகக் கூறிக்கொள்ள விரும்பு கின்றோம். எனவே, அரசு ஆரம்பித்துள்ள இந்த ஒடுக்குமுறைகளைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்லாது உடனடியாக நிறுத்த வேண்டும்' - என்றார். (ம-22)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்...

### அரசுக்கு...

உள்ளிட்ட பல எதிர்க்கட்சிகள் ஓரணியில் சங்கமித்துள்ளன.

எதிர்க்கட்சிகளை ஒன்றிணைக்கும் நோக்கில் சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விசேட கூட்டமொன்று கொழும்பில் நேற்று நடைபெற்றது.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் மாவை சேனாதிராசா, எம்.ஏ.சுமந்திரன், ஐக்கிய தேசியக்கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்தன, தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், '43' இயக்கத்தின் தலைவர் சம்பிக்க ரணவக்க, உள்ளிட்ட அரசியல் கட்சிகளின் தலைவர்களும், பிரதிநிதிகளும் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றிருந்தனர்.

இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய கருஜயசூரிய, 'இருண்டதொரு யுகத்தையே நாம் கடந்துகொண்டிருக்கின்றோம். அந்த யுகத்தில் இருந்து மீள்வதற்கு எமக்கு மற்றுமொரு வாய்ப்பும் உள்ளது. ஐக்கியமே அதற்கான வழி. வரலாற்றில் என்றுமில்லாதவாறு அந்த ஐக்கியம் இன்று ஏற்பட்டுள்ளது. இந்த ஒற்றுமை மூலம் அநீதிக்கு எதிராக எந்தவொரு தரப்பையும் எதிர்கொள்ளும் சக்தி கிடைக்கும்' என்று தெரிவித்தார்.

கூட்டத்தில் கருத்து வெளியிட்ட எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச,

'ஜனநாயகத்துக்காகவும், ஏகாதிபத்தியத்துக்கு எதிராகவும் நாம் ஒன்றுபட வேண்டும். நாடு பொலிஸ் இராஜ்ஜியத்தை நோக்கி நகர்வதை தடுத்து ஜனநாயகத்தை நிலைநாட்ட வேண்டும். அதற்கான போராட்டத்தில் நாம் அனைவரும் கரம்கோர்த்து செயற்பட வேண்டும்' என்றார்.

'அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டுமெனில் நாம் ஒன்றிணைய வேண்டும் என ஏற்கனவே அழைப்பு விடுத்திருந்தோம். எனவே, ஜனநாயகத்துக்காகவும், மனித உரிமைகளை பாதுகாப்பதற்கும் ஐக்கிய தேசியக்கட்சி முன்னின்று செயற்படும்' என்று ஐக்கிய தேசியக்கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்தன தெரிவித்தார். (ம-44,22)

### தமிழ்த்....

யில் யாழ்ப்பாணத்தில் நேற்று முக்கிய பேச்சு இடம்பெற்றது.

இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன், ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன் மற்றும் ரெலோவின் நாடாளுமன்ற உறுப்பினர்களான கோவிந்தன் கருணாகரம், எஸ்.வினோநோகராதலிங்கம் உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டனர்.

அதேவேளை, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் சார்பில் அதன் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன், பங்காளிக் கட்சிகளின் தலைவர்களான சுரேஷ் பிரேமச்சந்திரன், என்.சிறிகாந்தா, எம்.கே. சிவாஜிலிங்கம் உள்ளிட்ட குழுவினர் பங்கேற்றனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான ரெலோ முன்னெடுத்து வரும் ஒற்றுமை முயற்சியின் ஓர் அங்கமாக இந்தச் சந்திப்பு இடம் பெற்றது. எனினும், மாவை சேனாதிராசா தலைமையிலான இலங்கைத் தமிழரசுக் கட்சி இந்தச் சந்திப்பில் பங்கேற்கவில்லை.

இந்தச் சந்திப்பை ஏற்பாடுசெய்த ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன், மாவை சேனாதிராசாவுக்கு தொலைபேசிவழியாக அழைப்புவிடுத்திருந்தார். எனினும், அவர் பிறிதொரு நிகழ்வுக்காகக் கொழும்பில் தங்கியுள்ளார். அதனால் அவர் இந்தச் சந்திப்பில் கலந்துகொள்ளவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. ஆனால், அவர் சார்பில் பிரதிநிதிகள் எவரும் இந்தச் சந்திப்பில் கலந்துகொள்ளவில்லை.

இந்தக் கூட்டத்தின் ஆரம்பத்தில், 'எமது ஒற்றுமை முயற்சி பதவியை, தலைமையை நோக்கமாகக் கொண்டதல்ல. மக்கள் நலன் சார்ந்தது என ரெலோ தரப்பால் கூறப்பட்டது. எனினும், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் சார்பில் கலந்துகொண்ட அதன் பங்காளிக் கட்சியான ஈ.பி.ஆர்.எல்.எப். தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் கொஞ்சம் காட்டமாகக் கருத்து தெரிவித்தார்.

'ஏற்கனவே 10 கட்சிகள் ஒற்றுமை முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இதில் தமிழ்த் தேசிய பேரவை பற்றி நான் கருத்துத் தெரிவித்தது பிழை என்று தமிழரசுக் கட்சி குழப்பியது. ரெலோவும் அதை ஆதரித்து அறிக்கை வெளியிட்டது. அது பிழையென்றால், அது பற்றி கலந்துரையாடியிருக்கலாம். அதை விட்டு, குழப்புவதைப் போல் நடந்து விட்டு, இப்போது புதிய கூட்டணி முயற்சிக்கு ஏன் வருகின்றீர்கள்?' என்று செல்வம் அடைக்கலநாதனிடம் கேள்வியெழுப்பினார் சுரேஷ்.

பழைய முயற்சிகளில் ஏதேனும் குறைகள் இருந்தால் அதை நிவர்த்தி செய்து அதனையே தொடரலாம் என்றும் சுரேஷ் குறிப்பிட்டார்.

எனினும், ஒற்றுமை முயற்சியின் அவசியத்தை தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் ஏனைய இரண்டு கட்சிகளான தமிழ் மக்கள் கூட்டணி, தமிழ்த் தேசிய கட்சி ஆகியன ஏற்றுக்கொண்டன. ஆனால், அது தொடர்பில் தொடர்ந்து பேச வேண்டும் என்று அவர்கள் குறிப்பிட்டனர்.

இந்தக் கூட்டத்தின் ஆரம்பத்திலேயே 'செல்வம் உங்கள் முயற்சி [illegible]' என்று விக்னேஸ்வரன் குறிப்பிட்டார். சந்திப்பின் இறுதியில் விக்னேஸ்வரன், 'நாம் என்ன அடிப்படையில் சேர்ந்தியங்குவதென்பதை தீர்மானிக்க வேண்டும். தமிழ்த் தேசியப் பேரவையா, கூட்டணியா அல்லது வேறு வடிவமா என்பதைத் தீர்மானிக்க வேண்டும். எந்தப் பிரச்சினைகளில் சேர்ந்தியங்குவது என்பதையும் தீர்மானிக்க வேண்டும். அதற்காக முதலில் தமிழ் மக்களின் பிரச்சினைகளைப் பட்டியலிடுவோம். அதில் எதில் இணைந்து செயற்படுவது என்பதைத் தீர்மானிப்போம்' என்று கூறினார். (ம-22)

### மாபெரும்...

ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

எதிர்க்கட்சிகளை ஒன்றிணைக்கும் ஆரம்பகட்ட கூட்டம் முன்னாள் சபாநாயகர் கருஜயசூரிய தலைமையில் நேற்று நடைபெற்றது. இந்தச் சந்திப்பின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

'எதிர்க்கட்சிகளை ஒன்றிணைக்கும் நடவடிக்கை ஆரம்பமாகியுள்ளது. இதன் ஆரம்பக்கூட்டமே இன்று (நேற்று) நடைபெற்றது. இது தொடர்பில் ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்தாலும் முதல் சந்திப்பு தற்போதுதான் நடைபெறுகின்றது. கட்சி தலைவர்கள் பங்கேற்றிருந்தனர். திருப்தியளிக்கும் வகையில் சந்திப்பு அமைந்தது.

கூட்டுப் பயணம் குறித்து கடந்த காலங்களில் நம்பகத்தன்மையற்ற நிலைமை ஏற்பட்டது. ஏனெனில் 2015ஆம் ஆண்டில் நாம் கொண்டு வந்த ஜனாதிபதியே கொள்கைத் திட்டங்களை விமர்சித்தார். நாட்டை கட்டியெழுப்புவதை விடுத்து கட்சியைக் கட்டியெழுப்பினார். அரசுக்குள் குழப்பநிலை ஏற்பட்டது. ஐ.தே.க. தலைமையும் இரட்டை நிலைப்பாட்டில் செயற்பட்டது.

எனவே, கடந்த முறை இழைத்த தவறுகளை திருத்திக்கொண்டு, அனைவரையும் அரவணைத்தபடி தெளிவான வேலைத்திட்டத்துடன் முன்னோக்கி பயணிப்போம். பரந்துப்பட்ட மக்கள் இயக்கமொன்றை கட்டியெழுப்புவதே எமது நோக்கம்.

இந்த அரசுமீது மக்கள் அதிருப்தியில் உள்ளனர். முன்னோக்கி பயணிக்க முடியாத நிலை காணப்படுகின்றது. நிதி பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. ஆளுங் கட்சியில் உள்ளவர்கள் எம்முடன் பேச்சு நடத்துகின்றனர். அரச கூட்டணிக்குள் குழப்பம் உள்ளது. அது விரைவில் வெடிக்கும்' என்றார். (ம-44)

### அனைத்து...

நண்பகல் 12.30 மணிவரை அவர்களுக்கு அன்டிஜன் பரிசோதனை நடத்தப்படவுள்ளது. வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை நாளை விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. 20ஆம் திகதி மாலை வாக்கெடுப்பு நடத்தப்படும். அவ்வேளையில் எம்.பிக்கள் சபைக்குள் இருக்கவேண்டிவரும். இதனால் சபைக்குள் சமூக இடைவெளியை பின்பற்றுவது கடினமான விடயமாக அமையும். இந்த நிலையிலேயே எம்.பிக்கள் முன்கூட்டியே கொவிட் 19 பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றனர். (ம-44)

### ரிஷாத்துக்கு...

பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் மாரடைப்புக் காரணமாக கொழும்பு தேசிய மருத்துவமனையில் நேற்றுச் சேர்க்கப்பட்டுள்ளார்.

வைத்தியசாலையின் 42ஆம் இலக்க சிகிச்சை அறையில் அவர் சிகிச்சைகளுக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார் என்று வைத்தியசாலை தகவல்கள் உறுதி செய்தன.

ரிஷாத் பதியுதீன் தனக்கு நெஞ்சு வலிப்பதாக சி.ஐ.டி. அதிகாரிகளுக்குத் தெரிவித்துள்ள நிலையில், அவரைக் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு சி.ஐ.டியினர் அழைத்துச் சென்றனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

அங்கு முன்னெடுக்கப்பட்ட பரிசோதனைகளை அடுத்து அவர் தேசிய மருத்துவமனையில் தங்கியிருந்து சிகிச்சை பெற அனுமதிக்கப்பட்டுள்ளார். சி.ஐ.டி.யினரின் பாதுகாப்புக்கு மத்தியில் அவர் சிகிச்சை பெறுகின்றார் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் கூறினார். (ம-22)

### வடக்கில்...

வில் 2 பேரும், மல்லாவி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் ஒருவரும், பரந்தன் இடைத்தங்கல் முகாமில் 10 பேரும், கரைச்சி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 2 பேரும், வேலணை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் ஒருவரும், பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 19 பேரும், கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் 2 பேரும், செட்டிக்குளம் ஆதார மருத்துவமனையில் 2 பேரும், மன்னார் மாவட்ட மருத்துவமனையில் 4 பேரும், பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் 9 பேரும், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் 8 பேரும், சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் ஒருவரும், வேலணை மருத்துவமனையில் 2 பேரும் தொற்றாளர்களாக அடையாளப்படுத்தப்பட்டனர். (ம)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வீட்டுத்திட்டப்....

கிராமிய வீடமைப்பு நிர்மாணத்துறை மற்றும் கட்டடப் பொருள்கள் தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சால் யாழ்ப்பாண மாவட்டத்தில் 10 லட்சம் மற்றும் 6 லட்சம் ரூபா பெறுமதியான இரண்டு வகையான வீட்டுத் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன. இவற்றுக்குரிய பயனாளிகள் தெரிவு மார்ச் மாதம் இடம்பெற்றது.

ஏப்ரல் மாதம் பிரதேச செயலகங்கள், கிராம அலுவலர் அலுவலகங்களில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகள் பட்டியல் காட்சிப்படுத்தப்பட்டது.

மக்களிடமிருந்து முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றதால் அது தொடர்பில் பிரதேச செயலகத்தில் முறைப்பாடுகளை பரிசீலனை மேற்கொள்ளும் குழு அமைக்கப்பட்டு ஆராயப்பட்டது.

அதற்கு அமைவாக தயாரிக்கப்பட்ட இறுதிப் பட்டியல் பிரதேச செயலர்களின் ஒப்பத்துடன் ஏப்ரல் மாத இறுதியில் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டது. பிரதேச செயலர்கள் ஒவ்வொருவராலும் அனுப்பி வைக்கப்பட்ட பயனாளிகள் பட்டியல், யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைத் தலைவர்களான வடக்கு மாகாண ஆளுநர் திருமதி சாள்ஸ் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் ஆகியோருக்கு மாவட்டச் செயலகத்தால் அனுப்பி வைக்கப்பட்டது.

அவ்வாறு அனுப்பி வைக்கப்பட்ட பட்டியலில் உள்ளடக்கப்பட்ட பயனாளிகளின் விவரத்தை 'உதயன்' கடந்த வாரம் வெளியிட்டிருந்தான்.

இந்த நிலையில் கடந்த 3ஆம் திகதி யாழ்ப்பாண மாவட்டச் செயலரால், சகல பிரதேச செயலர்களுக்கும் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டது. அதில், வீட்டுத்திட்ட பயனாளிகள் பட்டியலை மீண்டும் காட்சிப்படுத்துமாறு தெரிவிக்கப்பட்டது. இதற்கு அமைவாக பிரதேச செயலகங்கள், கிராம அலுவலர் அலுவலகங்களில் பட்டியல்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

இணைத்தலைவர்களின் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்பட்ட பட்டியலிலிருந்து 187 பேரின் பெயர்கள் தற்போது காட்சிப்படுத்தப்பட்டுள்ள பட்டியலில் நீக்கப்பட்டுள்ளன. அதற்குப் பதிலாக புதிதாக 187 பேரின் பெயர்கள் உட்புகுத்தப்பட்டுள்ளன.

இதனைவிட தற்போது காட்சிப்படுத்தப்பட்டுள்ள பட்டியல் தொடர்பில் இதுவரையில் கிடைத்த முறைப்பாடுகளின் அடிப்படையில் 49 பேரின் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளன. இது இன்னமும் இறுதிப்படுத்தப்படவில்லை. நாளை திங்கட்கிழமையுடனேயே இறுதிப்படுத்தப்படும். அதன் பின்னரே இணைத் தலைவர்களின் அனுமதிக்கு சமர்ப்பித்த பட்டியலிலிருந்து தற்போது காட்சிப்படுத்தப்பட்ட பட்டியலிலும் எத்தனை பேரின் விவரங்கள் நீக்கப்பட்டு புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளன என்பதை அறியமுடியும். (ஒ.5)

## வீட்டுத்திட்டத்துக்கான...

எந்த குழப்பமுமில்லை. இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இ.அங்கஜன் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வீதியில் ஒரு நோக்கத்துக்காகச் செல்லும்போது பைத்தியக்காரர்கள் கத்திக் கொண்டிருப்பார்கள். அவர்களைக் கவனித்தால் எங்கள் நோக்கம் நிறைவேறாது. நாங்கள் இவ்வளவு காலமும் பைத்தியக்காரர்கள் கத்திக் கொண்டிருக்கின்றார்கள் என்று பேசாமல் இருந்துவிட்டோம்.

இவர்கள் (உதயன் உட்பட இன்னுமோர் ஊடகத்தின் பத்திரிகைப் பிரதிகள் பத்திரிகையாளர் மாநாடு நடைபெறும் இடத்தில் ஒட்டப்பட்டிருந்தன) இவ்வளவு காலமும் எனக்கு கொடுத்த அக்கறையை விட கடந்த ஓர் ஆண்டாக அதிகளவு அக்கறை கொடுக்கின்றனர். முன்பக்கத்தில் நாலு கட்டங்களாக எமக்கு இடம் ஒதுக்கி செய்திகளைப் பிரசுரிக்கின்றனர். எனது வளர்ச்சியில் மிகப்பெரிய பங்களிப்பைச் செய்திருக்கின்றார்கள். அதிகூடிய விருப்பு வாக்குகளுடன் நான் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றேன் என்றால் இவர்களுடைய பங்குதான் காரணம்.

**வீட்டுத் திட்டம்**

இது தொடர்பில் கடந்த சில நாள்களாக சர்ச்சைகளை இந்த ஊடகங்கள் வெளியிட்டு வருகின்றன. அரசியல் நோக்கங்களுக்காகவும் தனிப்பட்ட காரணங்களுக்காகவும் அவை அதைச் செய்கின்றன. மக்களைத் திசை திருப்பி இந்தத் திட்டங்களை மக்களிடத்தில் நேர்மையாகக் கொண்டு சென்று சேர்ப்பதை தடுப்பதை நோக்கமாகக் கொண்டு செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன.

யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கப்படும் வீட்டுத் திட்டத்துக்குரிய பயனாளிகளைத் தெரிவு செய்வது புள்ளியிடல் முறையில்தான். இது தொடர்பில் மாவட்டச் செயலர் சுற்றறிக்கை அனுப்பி வைத்துள்ளார்.

இந்த வீட்டுத் திட்டங்களுக்கு நாங்கள் பயனாளிகளை பரிந்துரைக்கலாம். வேறு பல அரசியல்வாதிகளும் அவ்வாறு பரிந்துரைத்துள்ளனர். இந்தப் பரிந்துரைகளை வைத்து கிராம அலுவலர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் பயனாளிகளுக்கு புள்ளியிடுவார்கள். அதனடிப்படையில்தான் பயனாளிகள் தெரிவாகுவார்கள். இந்தத் திட்டத்தில் எந்த முறைகேடும் இல்லை.

இந்த ஊடகங்கள் குற்றங்களைச் சுமத்தும்போது என்ன குற்றம் என்பதைச் சொல்ல வேண்டும். அரசியல் பிரதிநிதியாக மக்களின் வீட்டுத்திட்டப் பிரச்சினை தீரவேண்டும். வீடு தேவையானவர்களுக்கு வீடு போய்ச் சேரும். 2015ஆம் ஆண்டுக்கு முன்னர் எப்படி வீடு கொடுத்தார்கள் என்பது தெரியும்? கடந்த ஆட்சியில் நூற்றிச் சொச்ச வீடுகள் வழங்கப்பட்டன. அந்த வீடுகளில் மக்கள் குடியமராமல் அவை வெறும் சுற்றுலா மையங்களாக பயன்படுத்தப்படும் நிலைமை காணப்படுகின்றது. அதையும் மாற்றியமைக்கவேண்டும். அரசியல் நோக்கங்களுக்காக அரசியல்வாதிகள் மீது பொய்யான குற்றச்சாட்டுக்களை முன்வைப்பது அவர்களின் கீழ்த்தரமான அரசியலாக இருக்கட்டும். அரச உத்தியோகத்தர்களின் தரத்தைக் குறைக்கக் கூடாது. பொது மக்கள் பிரதேச செயலகங்கள் மீது நம்பிக்கை கொண்டு செயற்படுகின்றார்கள். அவர்களுடைய தரத்தைக் குறைத்து அபாண்டமாக குற்றம் சுமத்துகின்றார்கள். அதனை நிரூபிக்க வேண்டும்.

அரசியல் நோக்கத்துக்காக நாங்களும் செய்யமாட்டோம். மற்றவர்களையும் செய்யவிடமாட்டோம் என்கின்றார்கள். உதவி செய்யாவிடினும் பரவாயில்லை. உபத்திரம் செய்யாமல் இருங்கள். மக்களுக்கு கிடைக்கக் கூடியதை குழப்பியடிக்க வேண்டாம், என்றார். (ஒ.319)

## மறுப்பு...

அந்தப் பத்திரிகை கொரோனாவைக் காரணம் காட்டி மறுப்பு வெளியிடாமல் உள்ளது என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் ஒருங்கிணைப்புக்குழு இணைத் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடாளுமன்றத் தேர்தல் காலத்தில் 'ஆட்டையைப்போட்ட அரசியல்வாதி' என்று பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டது. நிவாரணப் பொதிகளை எனக்கு வாங்குவதற்கு வசதியில்லாமல், இங்கு (மாவட்டச் செயலகம்) கொடையாளர்கள் கொடுத்த நிவாரணப் பொதிகளை எடுத்துக் கொடுத்தேன் என்று அவர்கள் தெரிவித்தனர். அதன் பின்னர் தேர்தல்கள் திணைக்களம் ஊடாக விசாரணை நடந்தது.

அவ்வாறு நடைபெறவில்லை என்று நிரூபித்து அறிக்கை கிடைத்தது. இதன் பின்னர் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவுக்கு இந்த விடயம் தொடர்பில் முறைப்பாடு செய்யப்பட்டது. பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர், தவறான தகவல் வெளியிடப்பட்டுள்ளது. மறுப்பு பிரசுரிக்கவேண்டும் என்று கூறினார். அவ்வாறு கூறிய பின்னரும் கொரோனாவைக் காரணம் காட்டி பத்திரிகை ஆணைக்குழுவுக்கு சமூகம் தர முடியாது மறுப்புத் தெரிவிப்பதற்கும் நேரம் வேண்டும் என்று தெரிவித்துக் கொண்டிருக்கின்றார்கள், என்றார்.

**ஆசிரியர் குறிப்பு:**

*1) உதயன் பத்திரிகையிலே 'ஆட்டையைப்போட்ட அரசியல்வாதி' என்ற தலைப்பில் செய்தி கடந்த ஆண்டு பிரசுரமாகியிருந்தது. அந்தச் செய்தியில் எந்தவொரு அரசியல்வாதியின் பெயரும் இடம்பெறவில்லை.*

*2) இருப்பினும் இது தொடர்பில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் இ.அங்கஜன், முதலில் 100 கோடி ரூபா மான நஷ்ட ஈடு கேட்டு வழக்கு போடப்போவதாக 'பந்தா' காட்டியிருந்தாரே தவிர அந்த வழக்கை அவர் போடவேயில்லை. மாறாக, பின்னர் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்திருந்தார்.*

*3) இதன் அடிப்படையில் ஆணைக்குழு விசாரணைகளை ஆரம்பித்திருந்தது. ஆணைக்குழு முன்னிலையில் உதயன் பத்திரிகையின் ஆசிரியர் பீட பிரதிநிதி பிரசன்னமாகியிருந்தார். கொரோனா காரணமாக அந்த விசாரணை 'சூம்' செயலி ஊடாக தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டது.*

*4) 'ஆட்டையைப்போட்ட அரசியல்வாதி' விவகாரம் தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு நடத்திய விசாரணை அறிக்கையின் அடிப்படையில் ஆணைக்குழு முடிவை வெளியிட உதயன் தயாராக இருந்தான். விசாரணை அறிக்கையின் அடிப்படையிலான வெளியீட்டை, முறைப்பாட்டாளர் தரப்பான அங்கஜன் இராமநாதன் ஏற்றுக் கொள்ளவில்லை.*

*5) இதன் பின்னர் பூர்வாங்க விசாரணைக்காக பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவால் திகதியிடப்பட்டது. அமர்வு 'சூம்' தொழில்நுட்பத்தின் ஊடாக நடத்த முடியாது என்றும், இரு தரப்பும் ஆணைக்குழுவில் முன்னிலையாகவேண்டும் எனவும் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு தெரிவித்திருந்தது.*

*6) பூர்வாங்க விசாரணையை எதிர்கொள்ளவும், ஆதாரங்களைச் சமர்ப்பிக்கவும் உதயன் தயாராக இருந்தான்.*

*7) கொரோனாவின் இரண்டாம் அலை காரணமாக பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் அமர்வுகள் தற்போது ஒத்திவைக்கப்பட்டுள்ளன.*

*8) விசாரணை இன்னமும் நிலுவையில் இருப்பதால் 'அதிக பிரசங்கித்தனமாக' விடயத்துக்குள் ஊடுருவி கருத்துகளை வெளியிடுவதை உதயன் இப்போதைக்குத் தவிர்த்துக் கொள்கின்றான்.*

*9) ஆணைக்குழுவின் அமர்வுக்கு வர முடியாது என்று உதயன் எந்தச் சந்தர்ப்பத்திலும் கூறவில்லை. மறுப்பு பிரசுரிக்குமாறு ஆணைக்குழுவின் தலைவர் நிர்ப்பந்திக்கவுமில்லை. அதேவேளை, நீதியை நிலை நாட்டுவதில் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு பக்கச் சார்பில்லாமல் நடந்து கொள்ளும் என்ற பெருநம்பிக்கையும் எமக்குண்டு.*

*10) உண்மை இதுவாக இருக்கும் நிலையில், அதனைத் தலைகீழாகப் புரட்டி, பொய்யைத் திணித்துப் பரப்ப வேண்டியளவுக்கு அங்கஜன் இராமநாதனின் அரசியல் வங்குரோத்தாகி விட்டதா? அங்க்ஜனின் கூற்றுக்கள் மீதான நம்பகத்தன்மையை (?) மக்கள் இதனூடாகவே புரிந்து கொள்ளலாம். (ஆ - ர்)*

## வீடமைப்பு....

யின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

கொலைக் குற்றத்துக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருந்த அவர், அண்மையில் ஜனாதிபதியின் பொதுமன்னிப்பில் விடுவிக்கப்பட்டார். இந்தநிலையில், சில தினங்களுக்கு முன்னர் அவர், பிரதமர் மஹிந்த ராஜபக்சவைச் சந்தித்திருந்தார். பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் கீழ் உள்ள வீடமைப்பு அமைச்சின் கீழ்வரும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தலைவராக துமிந்த சில்வா நியமிக்கப்பட்டுள்ளார். (ம-22)

## ஓமந்தையில்...

பவுண் தங்க நகை திருடப்பட்டது. நேற்றையதினம் குறித்த வீட்டில் யாருமில்லாத நிலையில் வீட்டின் மேற்பகுதி வழியாக வீட்டுக்குள் சென்ற திருடர்கள் அங்கு வைக்கப்பட்டிருந்த இரண்டரைப் பவுண் நகையைத் திருடியுள்ளனர்.

சம்பவம் தொடர்பாக வீட்டின் உரிமையாளர் ஓமந்தை பொலிஸில் முறைப்பாடு வழங்கியுள்ளார். (ம-110)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## திருமண சேவை

### மணமகன் தேவை
1989. இந்து. அஷ்வினி. Development Officer, சொந்த இடம்: கைதடி. பதிவு: # 5198. தரகர் கூலி இல்லை. Unlimited குறிப்புகள். பதிவுக் கட்டணத்தில் 20% கழிவு.
**Ensured Quality Lanka, Colombo 04, (www.EQMarriageService.com**
**076 664 9401**

### மணமகன் தேவை
1976. இந்து. அஷ்வினி. அபிவிருத்திசபை சொந்த இடம்: தெல்லிப்பழை. பதிவு: # 2967. தரகர் கூலி இல்லை. Unlimited குறிப்புகள். பதிவுக் கட்டணத்தில் 20% கழிவு.
**Ensured Quality Lanka, Colombo 04, (www.EQMarriageService.com**
**076 664 9401**

### மணமகன் தேவை
1992. இந்து. திருவாதிரை. Doctor சொந்த இடம்: இளவாலை. பதிவு: # 5206. தரகர் கூலி இல்லை. Unlimited குறிப்புகள். பதிவுக் கட்டணத்தில் 20% கழிவு.
**Ensured Quality Lanka, Colombo 04, (www.EQMarriageService.com**
**076 664 9401**

### மணமகன் தேவை
1989. இந்து. பூரட்டாதி. Management Assistant சொந்த இடம்: அரியாலை. பதிவு: # 6236. தரகர் கூலி இல்லை. Unlimited குறிப்புகள். பதிவுக் கட்டணத்தில் 20% கழிவு.
**Ensured Quality Lanka, Colombo 04, (www.EQMarriageService.com**
**076 664 9401**

### மணமகள் தேவை
1987. இந்து. புனர்பூசம். Engineer U.K சொந்த இடம்: யாழ்ப்பாணம். பதிவு: # 6186. தரகர் கூலி இல்லை. Unlimited குறிப்புகள். பதிவுக் கட்டணத்தில் 20% கழிவு.
**Ensured Quality Lanka, Colombo 04, (www.EQMarriageService.com**
**076 664 9401**

### மணமகள் தேவை
1990. ரோமன் கத்தோலிக்கம். திருவோணம். Finance Executive, சொந்த இடம்: யாழ்ப்பாணம். பதிவு: #6231. தரகர் கூலி இல்லை. Unlimited குறிப்புகள். பதிவுக் கட்டணத்தில் 20% கழிவு.
**Ensured Quality Lanka, Colombo 04, (www.EQMarriageService.com**
**076 664 9401**

### மணமகள் தேவை
1978. இந்து. ரோகினி. Network Engineer Denmark, சொந்த இடம்: சாவகச்சேரி. பதிவு: # 6260. தரகர் கூலி இல்லை. Unlimited குறிப்புகள். பதிவுக் கட்டணத்தில் 20% கழிவு.
**Ensured Quality Lanka, Colombo 04, (www.EQMarriageService.com**
**076 664 9401**

### மணமகள் தேவை
1982. இந்து. ஸ்வாதி. Doctor, சொந்த இடம்: கோப்பாய். பதிவு:# 6261. தரகர் கூலி இல்லை. Unlimited குறிப்புகள். பதிவுக் கட்டணத்தில் 20% கழிவு.
**Ensured Quality Lanka, Colombo 04, (www.EQMarriageService.com**
**076 664 9401**

### மணமகள் தேவை
யாழ் கத்தோலிக்க கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1980இல் பிறந்த சுயதொழில் புரியும் மணமகனுக்கு நிரந்தர தொழில் புரியும் மணமகள் தேவை.
**தொடர்பு : 076 983 8968**
**Email : amhthu1@gmail.com**

### சேவை / தேவை
பிளிந்த தேங்காய்ப்பூவிலிருந்து எண்ணெய் ஊற்றிக் கொடுக்கப்படும். மேலும் பெண் ஊழியர்கள் வேலைக்குத் தேவை.
**பிருந்தா மில்ஸ்**
**179 சிவன்பண்ணை வீதி, யாழ்ப்பாணம்.**
**தொடர்பு : 077 1746 101**

### சேவை
நீங்கள் அடகுவைத்து மீட்டெடுக்கமுடியாத நகைகளை எமது நிறுவனத்தின் ஊழியர்கள் மூலமாக நீங்கள் அடகு வைத்த நிறுவனத்திற்கு வருகை தந்து மீட்டு எடுத்து அதற்கான பெறுமதிப்பணம் அவ்விடத்திலேயே தரப்படும் நாடளாவிய ரீதியில் சினேக பூர்வமான சேவை.
**AAA Gold Center**
**076 568 4346**

## தேவை

### வீடு வாடகைக்கு தேவை
யாழ் மாவட்டத்தில் வீடு வாடகைக்கு தேவை.
**தொடர்பு : 077 4570 267**

### நடிகர் நடிகை தேவை
யாழ்ப்பாணத்தில் தயாரிக்க பட உள்ள திரைப்படத்திற்கு நடிகர் நடிகைகள் தேவை.
ஆர்வம் உள்ளவர்களும் (புது முகம்) வரவேற்க தக்கது அண்மையில் எடுத்த புகைப்படத்தையும் விவரங்களையும் அனுப்பிவைக்கவும்.
Whatsapp: **077 667 7175**

### முழுநேர வேலையாள் தேவை
மேலைக் கரம்பொன் முருகமூர்த்தி. கோயிலுக்கு 'கோயில் பராமரிப்பு வேலையாள்' ஒருவர் தேவை.
தீவுப்பகுதி வதிவிடமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்
தொடர்பு: **077 773 9185**

### வீட்டுப் பணிப்பெண் தேவை
கொழும்பிலே 2 குழந்தைகள் உள்ள வைத்தியர் ஒருவரின் வீட்டிலே தங்கி நின்று உதவி செய்ய வீட்டுப் பணிப் பெண் தேவை.
**076 666 2313/ 077 360 4023**

### வேலையாள்கள் தேவை
யாழ்ப்பாணத்தில் இயங்கும்
**எண்ணை ஆலைக்கு**
**பெண்கள்** வேலைக்கு தேவை.
தொடர்புகளுக்கு **077 171 2336**

### தேவை
யாழ்ப்பாண நகர வீட்டில் வீட்டு பணிப்பெண் தேவை. நல்ல ஊதியம் வழங்கப்படும்.
**வினோத் 0777 190 266**
**பிரவுன்ரோட், யாழ்ப்பாணம்**

### வீட்டுப் பணிப்பெண் தேவை
கொடிகாமத்தில் வீட்டிலே தங்கி நின்று மூதாட்டி ஒருவரை பராமரிக்க உதவி செய்ய வீட்டுப்பணிப் பெண் தேவை.
**077 314 6006 / 077 360 4023**

### கொப்பறா தேவை
வடமாகாணத்தில் இயங்கும் **தேங்காய் எண்ணெய் உற்பத்தி நிலையத்திற்கு** கொப்பறாதேவை.
தொடர்பு: **077 354 7045**

### பணிப்பெண் உடன் தேவை
வவுனியாவில் தாயை இழந்த பெண்ணுடன் துணையாக இருப்பதற்கு பணிப்பெண் ஒருவர் உடன் தேவை.
**தொடர்பு 070 484 5366**

### வேலையாள் தேவை
கொழும்பில் அமைந்துள்ள நிறுவனத்திற்கு அனுபவமுள்ள சமையல்காரர் தேவை.
தகுந்த சம்பளம் வழங்கப்படும்.
**075 838 8236**

### கணக்காளர் தேவை
யாழ்ப்பாணத்தில் அச்சுவேலியில் அமைந்துள்ள நிறுவனத்திற்கு அனுபவமுள்ள ஆண் கணக்காளர் தேவை.
வயது : 18 – 45
**075 838 8236**

### பணிப்பெண் உடன் தேவை
வவுனியாவில் வீட்டில் தங்கியிருந்து வேலை செய்வதற்கு பணிப்பெண் ஒருவர் உடன்தேவை
**தொடர்பு 077 386 4642**

### வீட்டுப் பணிப்பெண் தேவை
நடமாடக்கூடிய நிலையிலுள்ள வயதான தாயார் ஒருவரைப் பராமரிப்பதற்கு 40 வயதிற்கு மேற்பட்ட பணிப்பெண் தேவை.
சம்பளம் 30, 000 ற்கு மேல் வழங்கப்படும்.
**தொடர்பு 077 964 0508**

### வேலையாட்கள் தேவை
சாவகச்சேரியில் உள்ள பல் பொருள் அங்காடிக்கு (Super Market) தகுதியான வேலையாட்கள் தேவை.
**தொடர்பு 076 923 7686**
kajas2624@gmail.com

### பணிப்பெண் தேவை
வீட்டில் தங்கி வேலை செய்ய வீட்டுப் பணிப்பெண் தேவை.
தகுந்த சம்பளம் வழங்கப்படும்.
**தொடர்பு 076 923 7686**

### வேலையாட்கள் தேவை
யாழ்ப்பாணத்தில் இயங்கும் யாழ் - கொழும்பு பஸ் சேவை நிலையத்திற்கு பெண் ஆசன பதிவாளர்கள் தேவை.
தொடர்புகளுக்கு:
**076 0094 946**

## வாடகைக்கு

### கடை வாடகைக்கு
மருதனார்மடத்தில் கடை வாடகைக்கு உண்டு
**தொடர்பு : 074 188 7535**

### வீடு வாடகைக்கு
5 அறைகள் உண்டு.
**T.P.:076 998 0837**
திருநெல்வேலி, கலாசாலை றோட்.

### வீடு வாடகைக்கு
கொடிகாமம் கண்டி வீதியில் வீடு வாடகைக்கு உண்டு. அலுவலக பாவனைக்கு ஏற்றது.
**தொடர்பு 077 964 0508**

### வீடு வாடகைக்கு
கே.கே.எஸ். வீதி தட்டாதெரு சந்தியில் சகல வசதிகளுடன் 5 அறைகள் மற்றும் வாகனத் தரிப்பிடத்துடன் கூடிய வீடு வாடகைக்குண்டு.
**076 746 6550 / 077 844 8946**

### வாடகைக்கு
யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதி, சத்திரசந்திக்கும் கொட்டடிச் சந்திக்கும் இடையில் சகல வசதிகளோடு **கடையும், மேல்மாடியும்** வாடகைக்குண்டு.
தொடர்புகளுக்கு **021 222 4137**

### விளம்பர தொடர்புக்கு
**021 493 1111**

## விற்பனைக்கு

### விற்பனைக்கு
ஆட்டோ Bajah 4 / விற்பனைக்குண்டு.
NPQZ XXXX
தொடர்பு: **076 047 0457**

### ஆட்டோ விற்பனைக்கு
தனிப்பாவனையில் உள்ளது
**A.AL.**
தொடர்பு: **077 525 8922**

### காணி விற்பனைக்கு
கரந்தன் சந்தி ஊரெழு வீதியில் 2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
**077 952 1587**

### காடை இறைச்சி விற்பனைக்குண்டு
சுத்தமாக்கப்பட்ட தரமான காடை இறைச்சி வவுனியா, கிளிநொச்சி, மன்னார், யாழ்ப்பாணம் மற்றும் முல்லைத்தீவில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
**076 668 7513**

## ஏனையவை

### பிரத்தியேக வகுப்புகள்
A/L இணைந்த கணிதம் 2021, 2022, 2023 மாணவர்களுக்குத் தனியாகக் கற்பிக்கப்படும். **077 832 4002**

### வேலைவாய்ப்பு
யாழ் நகரிலுள்ள பிரபல விடுதி ஒன்றுக்கு தொழில்நுட்ப உதவி யாளர் தேவை. (பிளெமிங், எலக்ரிசன் அதனுடன் தொடர்புடைய வேலை)
தொடர்புகளுக்கு: **077 343 8373**

### வேலை வாய்ப்பு
இலங்கையின் உயர்தரமான நிதி நிறுவனத்திற்கு புதிய நிதி ஆலோசகர்கள் சேர்த்துக் கொள்வதற்கான நேர்முகத் தேர்வுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
உங்களது பெயர் NIC Number
077 539 1655, 074 048 1279 இலக்கத்திற்கு SMS மூலம் அனுப்பி வைக்கவும்.

## கொரோனா 1,452

கொழும்பு, ஜூலை 18
நாட்டில் நேற்று 1,452 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 2 லட்சத்து 83 ஆயிரத்து 512ஆக அதிகரித்துள்ளது.
அத்துடன், கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 962 பேர் நேற்று குணமடைந்து வீடு திரும்பினர். இதையடுத்து நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 55 ஆயிரத்து 833ஆக உயர்வடைந்துள்ளது.
இதேவேளை, கொரோனாத் தொற்று காரணமாக மருத்துவமனைகள் மற்றும் தனிமைப்படுத்தல் மையங்கள் என்பவற்றில் தற்போது 23 ஆயிரத்து 946 பேர் சிகிச்சை பெறுகின்றனர். (ம-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஸ்திரேலியாவை வீழ்த்தியது தீவுகள்

## 4:1 என தொடரையும் வென்றது

**ஜமைக்கா, ஜூலை 18**

**ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ஐந்தாவது ரி20 ஆட்டத்தில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி தொடரையும் 4:1 என்று கைப்பற்றியது.**



முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 8 இலக்குகளை இழந்து 199 ஓட்டங்களைப் பெற்றது. ஆரம்ப வீரர் எவின் லூயிஸ் 79 ஓட்டங்களை வெறும் 34 பந்துகளில் சேர்த்து அணியைப் பலப்படுத்தினார். பந்துவீச்சில் அன்ரூ டை 3 இலக்குகளையும், ஷாம்பா, மிச்செல் மார்ஷ் இருவரும் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர். பான் குரொப்ட் 3 பந்துப்பரிமாற்றங்கள் வீசி 46 ஓட்டங்களை விட்டுக்கொடுத்திருந்தார்.

பதிலுக்குக் களமிறங்கிய ஆஸ்திரேலிய அணி 9 இலக்குகளை இழந்து 183 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. எவரும் அரைச்சதத்தையேனும் பதிவுசெய்யவில்லை. பின்ஞ் பெற்ற 34 ஓட்டங்களே அதிகபட்சம். பந்துவீச்சில் கொட்ரெல் 3 இலக்குகளையும், ரசல் 3 இலக்குகளையும் கைப்பற்றினர்.

மேற்கிந்தியத் தீவுகளின் வீரர்களான லூயிஸ் ஆட்டநாயகனாகவும், வால்ஷ் தொடராட்ட நாயகனாகவும் தெரிவாகினர். (ம)

## இலங்கை - இந்தியா தொடர் இன்று ஆரம்பம்

கொழும்பு, ஜூலை 18

**இலங்கை இந்திய அணிகளுக்கு இடையிலான இரு தரப்புத் தொடர் இன்று ஆரம்பமாகின்றது.**

இந்திய அணி இலங்கைக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. இந்த இரு அணிகளுக்கும் இடையிலான ஒருநாள் தொடர் இன்று ஆரம்பமாகின்றது. இன்றைய ஆட்டம் பகலிரவு ஆட்டமாக பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமாகின்றது.

ஒருநாள் தொடரின் எஞ்சிய இரு ஆட்டங்களும் முறையே எதிர்வரும் 20ஆம் மற்றும் 23ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளன. மூன்று ரி20 ஆட்டங்களும் முறையே 25, 27, 29ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளன. (ம)


**வேலையாட்கள் தேவை**
கோண்டாவிலில் அமையப் பெற்ற மிகஷர் தொழிற்சாலைக்கு Paking (Girl and Sales Rep (Boy) தேவைப்படுகிறது.
தொடர்பு 077 920 9507

**வேலையாட்கள் தேவை**
யாழ் நகரில் இயங்கும் நிறுவனமொன்றிற்கு ஆண், பெண் இருபாலாரும் தேவை
077 830 8360/076 776 8444

**கேக் ஐசிங் செய்ய வேலையாள் தேவை**
கொக்குவிலில் இயங்கும் கேக் ஐசிங் செய்யும் நிறுவனத்திற்கு ஐசிங் தொழில் தெரிந்த, அனுபவமுள்ள ஆண், பெண் வேலையாட்கள் தேவை.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்
தொடர்பு : 076 444 2007

**Aari work orders & Classes**
Facebook Lady Creations - Aari work
Instagram@lady-Creation91
Aari work orders price Starting From Rs.1000
ஆரிவேக் அடிப்படை வகுப்பு 15000 (10 days)
ஆரிவேக் அடிப்படையிலிருந்து முழு வகுப்பிற்கு 25000 (16 days)
இடம்: சுண்டுக்குளி - யாழ்ப்பாணம்.
077 040 0344

**பணிப்பெண் தேவை**
யாழ்ப்பாணம் சுண்டுக்குளியில் அமைந்துள்ள வீடு ஒன்றுக்கு சமையல் மற்றும் வீட்டு வேலைகள் செய்யக்கூடிய பெண் ஒருவர் தேவை.
தொடர்புகளுக்கு
077 734 7578, 077 778 0359

**மணமகள் தேவை**
யாழ். இந்து கௌரவ குடும்பம் 1984 ஆம் ஆண்டு பிறந்த அத்தம் நட்சத்திரம், திருமணப் பதிவுடன் விவாகரத்தான அரச உத்தியோகம் பார்க்கும் மணமகனுக்கு மணமகள் தேவை.
தொடர்பு 077 193 0298

**வேலையாட்கள் தேவை**
யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள எமது கட்டட ஒப்பந்த நிறுவனத்திற்கு நன்கு அனுபவமும் திறமையுமுடைய தச்சு வேலை செய்வோர் (Carpenter) தேவை.
தொடர்பு 076 316 5734

**வேலையாள்கள் தேவை**
உஷன் பகுதியில் அமைந்துள்ள தென்னந் தோட்டத்தை பராமரித்து மேற்பார்வை செய்வதற்கு அனுபவமுள்ள **பண்ணை முகாமையாளர்** (Farm Manager) மற்றும் கூலியாள் (Labour) தேவை. (தங்கி நின்று வேலைசெய்யக்கூடியவர்கள் விரும்பத்தக்கது)
076 316 5734

**மருந்தாளர் தேவை**
யாழ்ப்பாணம் கே.கே.எஸ் வீதியில் இயங்கிக் கொண்டிருக்கும் மருந்தகத்திற்கு மருந்தாளர் தேவை.
( Pharmacist with Certificate )
தொடர்பு : 076 898 9523

**Individual English Classes**
Spoken - Grammar
Grade 7- பட்டதாரிகள், தொழில் புரிவோர் English Medium செய்பவர்கள்.
Ganesh B.A 077 766 8725 Jaffna.

**நீர்க்கசிவை தடுப்பதற்கு Water Proofing**
கட்டடங்களை நீர்க்கசிவில் இருந்து பாதுகாத்திடுங்கள்
North and East Engineering
Jaffna.
077 5244 177, 077 232 3900, 021 222 0368


## மரண அறிவித்தல்



தோற்றம் 27 . 01 . 1964

மறைவு 17 . 07 . 2021

### திருமதி உருத்திரபாலன் மாலா

யாழ்ப்பாணம் குரும்பசிட்டி கிழக்கைப் பிறப்பிடமாகவும் சிவன்பாலன் வீதி, உரும்பிராய் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட உருத்திரபாலன் மாலா அவர்கள் நேற்று (17.07.2021) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பஞ்சலிங்கம் அன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற இரத்தினசபாபதி மற்றும் யோகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகளும், உருத்திரபாலனின் பாசமிகு மனைவியும் மதீசனின் அன்புத் தாயாரும், சுதர்சன் சுஜாதா அவர்களின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.07.2021) ஞாயிற்றுக் கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சிவன்பாலன் வீதி,
உரும்பிராய் தெற்கு.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்: advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 18.07.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பக்கங்கள்: 16

எம்பிக் குதிச்சுக் கூத்தாடித் திரிஞ்ச கொரோனாவை
கும்பிட்டு கட்டுக்க கொண்டந்தாச்சு எண்டே– நம்பிக்கையோடு
நாடு ஊசி போட்டு நிம்மதியா நிமிரேக்க பொல்லாத
மாடு மாதிரி மூசி வருதாம் 'டெல்டா' தெறிச்சே ஓடு!
– ஒட்டுக்குழு சுவாமிகள்

சஞ்சீவி

Registered as a Newspaper

மலை 33: வள்ளுவர் ஆண்டு : 2052 ஆடி 02 ஞாயிற்றுக்கிழமை (18.07.2021) சிகரம் : 56



# தண்டனையாக மாறிய தனிமைப்படுத்தல்?

நிலாந்தன்

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை மறுபரிசீலனை செய்யப்போவதாகக் கூறிவரும் அரசாங்கம் தென்னிலங்கையில் தனக்கு எதிராகப் போராடிய செயற்பாட்டாளர்களைத் தனிமைப்படுத்தல் சட்டத்தின்கீழ் தடுத்து வைத்திருந்து நேற்று முன்தினம் விடுத்திருந்தது.

'பௌலிங் (bowling) விளையாட்டில் ஒரே அடியில் பல இலக்குகளை விழுத்துவதைப்போல அரசாங்கமும் தனிமைப்படுத்தல் சட்டத்தை வைத்து தனது அரசியல் எதிரிகளை வீழ்த்துகிறது' என்ற தொனிப்பட ஒரு சிங்களக் கார்ட்டூனிஸ்ட் அண்மையில் ஒரு கார்ட்டூன் வரைந்திருக்கிறார்.

தனிமைப்படுத்தல் சட்டத்தை அரசாங்கம் தமிழ் மக்களுக்கு எதிராக எப்பொழுதோ பயன்படுத்தத் தொடங்கிவிட்டது. வைரஸ் தொற்றுக் காலத்தை சாட்டாக வைத்து தமிழ் மக்களின் நினைவுகூரும் உரிமையை நிராகரிப்பதில் தொடங்கி தமிழ் மக்களுடைய எதிர்ப்புப் போராட்டங்களின்போது அரசாங்கம் தனிமைப்படுத்தல் சட்டத்தை பயங்கரவாதத் தடைச்சட்டம் போல பயன்படுத்தியது. இதில் விதிவிலக்காக காணப்படுவது பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலுமான பேரணிதான். அங்கேயும்கூட தொடக்கத்தில் அரசாங்கம் தனிமைப்படுத்தல் சட்டத்தின் மூலம் போராட்டத்துக்கு தலைமை தாங்கக்கூடிய நபர்களை முடக்கப்பார்த்தது. ஆனால் பேரணி அதிகம் மக்கள் மயப்பட்ட காரணத்தால் ஒரு கட்டத்தில் அது அரசாங்கத்தால் தடுக்கமுடியாத ஒரு எல்லைக்கு போய்விட்டது. அதுவல்லாத ஏனைய எல்லாப் போராட்டங்களின் போதும் அரசாங்கம் தனிமைப்படுத்தல் சட்டத்தை உபயோகித்து பெரும்பாலான போராட்டங்களை தடுத்திருக்கிறது. போராட்டத்தில் ஈடுபட்டவர்களை சட்டத்தின் முன் நிறுத்தியிருக்கிறது.

இது இப்பொழுதுதான் சிங்கள கார்ட்டூனிஸ்ட்களுக்கு தெரிகின்றதா? கடந்த ஒன்றரை ஆண்டுகளாக எதிர்க்கட்சிகளை முடக்கியதில் தனிமைப்படுத்தல் சட்டத்துக்கும் ஒரு பங்குண்டு.

**பயங்கரவாத பயங்கரவாதத் தடைச்சட்டம் இல்லையென்றாலும் அவர்களுக்கு போராட்டங்களை நசுக்க வேறு ஏதோ ஒரு சட்டம் இருக்கும் என்பதுதான். இது எதைக் காட்டுகிறது? ஒடுக்கும் மனோநிலையைத் தான் காட்டுகிறது. அந்த மனோநிலையானது எப்பொழுதும் தனக்கு வசதியாக சட்டங்களை உருவாக்கிக்கொள்ளும். எனவே இங்கே பிரச்சினை என்னவென்றால் சட்டங்கள் அல்ல. சட்டங்கள் கருவிகளே.**



அதைவிட முக்கியமாக அவ்வாறு எதிர்ப்புக்காட்டத் தேவையான சக்தி எதிர்க்கட்சிகளிடமும் இருக்கவில்லை. இவ்வாறானதொரு பின்னணியில் கொத்தலாவல தேசிய பாதுகாப்பு பல்கலைக்கழக சட்டவரைபை எதிர்த்துப் போராடிய செயற்பாட்டாளர்கள் கைதுசெய்யப்பட்டு முதலில் பிணையில் விடுதலை செய்யப்பட்டார்கள். ஆனால் பின்னர் தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் முல்லைத்தீவில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்கள். அவர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட பி.சி. ஆர். பரிசோதனையில் ஒருவருக்கும் தொற்று இல்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது. எனினும் அவர்கள் தொடர்ந்தும் தனிமைப்படுத்தல் மையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்கள். அதாவது நோயற்ற ஒருவரை நோயாளியாக்கும் புதிய தண்டனைமுறை இது.

கடந்த ஒன்றரை ஆண்டுகளுக்கு மேலாக தனிமைப்படுத்தல் சட்டங்களை தமிழ் மக்களுக்கு எதிராக அரசாங்கம் பயன்படுத்தியது. தமிழ் மக்களை ஒடுக்க அவர்களுக்கு ஒரு சட்டம் தேவை. அது பயங்கரவாத தடைச்சட்டமாகவும் இருக்கலாம் அல்லது தனிமைப்படுத்தல் சட்டமாகவும் இருக்கலாம். ஏதோ ஒரு சட்டத்தை முன்வைத்து அவர்கள் தமிழ் மக்களின் போராட்டங்களை ஒடுக்கவேண்டும். அவ்வளவுதான். அதைத்தான் கடந்த ஒன்றரை ஆண்டுகளாக அவர்கள் செய்தார்கள். பயங்கரவாதத் தடைச்சட்டத்தை மறுபரிசீலனை செய்வதென்பது 'ஜி.எஸ்.பி. பிளஸ்' வரிச்சலுகை தொடர்பான ஐரோப்பிய ஒன்றியத்தின் அழுத்தத்தின் நேரடி விளைவு. ஆனால் இங்கு ஒன்றைக் கவனிக்கவேண்டும். பயங்கரவாதத் தடைச்சட்டத்தை மீள்பரிசீலனை செய்யப் போவதாகக் கூறப்படும் ஒரு காலகட்டத்தில் தான் தனிமைப்படுத்தல் சட்டத்தை உபயோகித்து போராட்டங்கள் நசுக்கப்படுகின்றன. எனவே இங்கு ஒரு விடயம் தெளிவாகத் தெரிகிறது. பயங்கரவாதத் தடைச்சட்டம் இல்லையென்றாலும் அவர்களுக்கு போராட்டங்களை நசுக்க வேறு ஏதோ ஒரு சட்டம் இருக்கும் என்பதுதான். இது எதைக் காட்டுகிறது ? ஒடுக்கும் மனோநிலையைத் தான் காட்டுகிறது. அந்த மனோநிலையானது எப்பொழுதும் தனக்கு வசதியாக சட்டங்களை உருவாக்கிக்கொள்ளும். எனவே இங்கே பிரச்சினை என்னவென்றால் சட்டங்கள் அல்ல. சட்டங்கள் கருவிகளே. பிரச்சினையாக இருப்பது அந்தக் கருவிகளைப் பயன்படுத்தி ஒடுக்கும் மனோநிலைதான்.

அண்மையில் ஒரு சிவில் சமூக செயற்பாட்டாளர் என்னிடம் சொன்னார். "தென்னிலங்கையில் அரசாங்கத்துக்கு எதிரான அதிருப்திகள் புகையத் தொடங்கிவிட்டன. ஒரு கட்டத்தில் அவை நெருப்பாக மூளும். அரசாங்கத்துக்கு எதிரான இந்தத் திரட்சியில் தமிழ் மக்களும் பங்கெடுக்கவேண்டும். அப்படி பங்கெடுத்தால்தான் இந்த அரசாங்கத்தை தோற்கடிக்கலாம். சிங்களமக்களோடு இணையாமல் தென்னிலங்கையில் மாற்றங்களை ஏற்படுத்த முடியாது என்பதே கடந்தகால வரலாறு" என்று.

அதில் உண்மை உண்டு. இலங்கைத்தீவு பிரித்தானியரிடம் இருந்து விடுபட்டதிலிருந்து இன்றுவரையிலுமான தேர்தல் களத்தை பார்த்தால் ஒரு விடயம் தெளிவாகத் தெரியும். எந்த ஒரு கட்சியாவது பெரும் பலத்தோடு ஆட்சிக்கு வரும் பொழுது அதனை வீழ்த்துவதற்கு எதிர்க்கட்சிகள் அணிசேர்கின்றன. இந்த அணிச்சேர்க்கைகளில் தர்மம் இல்லாமல் இருக்கலாம். இந்த அணிச் சேர்க்கைகளில் இனவாதமும் இருக்கும். ஆனாலும் இவ்வாறான கூட்டு முன்னணிகள் மூலம்தான் மிகப்பலம் பொருந்திய ஓர் அரசாங்கம் எப்பொழுதும் தோற்கடிக்கப்பட்டிருக்கிறது. இந்த அணிச்சேர்க்கை என்பது இலங்கை அரசியல் வரலாற்றில் தொடர்ச்சியாக காணப்படும் ஒருபோக்கு.

வெல்லக்கடினமான பெரும்பான்மையோடு ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வரும்போது அதை எதிர்கொள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி பல்வேறு கட்சிகளுடன் இணைந்து ஒரு கூட்டுக்குப் போகும். அப்படித்தான் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி வெல்லக்கடினமான ஒரு பெரும்பான்மையைப்

04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இந்தியாவுக்கு மற்றுமொரு இராஜதந்திரத் தோல்வி

O அ.நிக்ஸன்

பாகிஸ்தான் தவிர்ந்த இலங்கை உள்ளிட்ட தெற்காசிய நாடுகளின் 'பிம்ஸ்ரெக்' அமைப்பை இயக்குவதற்கு இந்தியா துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் நிலையில், இந்தியாவைத் தவிர்த்து பாகிஸ்தான், இலங்கை போன்ற நாடுகள் அடங்கலாக சீனாவின் தெற்கு நாடுகளின் வறுமை ஒழிப்பு மற்றும் கூட்டுறவு மேம்பாட்டு மையம் (ChinaSouth Asian Countries Poverty Alleviation and Cooperative Development Centre) ஒன்றை சீனா கடந்த செவ்வாய்க்கிழமை உருவாக்கியுள்ளது.

ஆசிய நாடுகளுக்கான வறுமை நிவாரணம் உள்ளிட்ட நிதியுதவிகளை இந்தியா மூலமாகச் செய்வதற்கு கடந்த மாதம் பிரித்தானியாவில் இடம்பெற்ற ஜி -7 மாநாட்டில் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்த நிலையில், சீனா எடுத்துள்ள இந்தப் புதிய முயற்சியால், இந்தோ -பசுபிக் பிராந்தியப் பாதுகாப்பு விவகாரங்களில் அமெரிக்கா, இந்தியா மேற்கொண்டுவரும் தந்திரோபாயங்களை முறியடிக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ், பூட்டான், இந்தியா, மாலைதீவு, நேபாளம், பாகிஸ்தான், சீனா ஆகியவற்றை கொண்ட சார்க் கூட்டமைப்பு 1985 இல் உருவாக்கப்பட்டிருந்தது. இந்த நாடுகளில் இந்தியா, பூட்டான் மற்றும் மாலைதீவு என்பவற்றைத் தவிர்த்துவிட்டு , சீனா மேற்படி புதிய மேம்பாட்டு மையத்தைத் தற்போது உருவாக்கியுள்ளது. 2017 ஆம் ஆண்டின் பின்னர் செயலிழந்த சார்க் நாடுகள் அமைப்பை மீளவும் ஒழுங்காக இயக்க வேண்டுமென விடுக்கப்பட்ட கோரிக்கையை புறம் தள்ளிய இந்தியா, பாகிஸ்தான் அங்கம் வகிக்காத 'பிம்ரெக்ஸ்' என்ற அமைப்பைப் பலப்படுத்தவே விரும்பியது.

'ஐ.ஒ.ஆர்.ஏ' எனப்படும் இந்து சமுத்திரத்தைத் தொடுகின்ற கடலின் கரையோரத்தில் உள்ள பிராந்திய நாடுகளின் ஒத்துழைப்புக்கான கூட்டு முயற்சி மற்றும் 'பிம்ரெக்ஸ்' ஆகிய இரு அமைப்புகளையும் துரிதமாகச் செயற்படுத்துவது தொடர்பாக இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் கடந்த மாதம் 21 ஆம் திகதி அமைச்சர் தினேஸ் குணவர்த்தனவுடன் நடத்திய இணை ய வழி மாநாட்டில் வலியுறுத்தியிருந்தார். குறிப்பாக வங்காள விரிகுடாவை மையப்படுத்தி பங்களாதேஷ், பூட்டான், இந்தியா, மியான்மர், நேபாளம், இலங்கை, தாய்லாந்து ஆகிய ஏழு நாடுகளைக் கொண்ட, 'பிம்ரெக்ஸ்' (The Bay of Bengal Initiative for MultiSectoral Tech nical and Economic Cooperation BIMSTEC) அமைப்பை ஊக்குவிப்பதே இந்தியாவின் நோக்கமாக இருந்தது.

இந்தவொரு நிலையில் சீனா உருவாக்கியுள்ள புதிய அமைப்பில் இலங்கை பிரதான பங்காளியாக மாறலாம். கடந்த செவ்வாய்க்கிழமை சோங்கிங் நகரில் உள்ள தென்மேற்கு பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற இந்தப் புதிய அமைப்புக்கான ஆரம்ப விழாவில் சீனாவுக்கான இலங்கை தூதுவர் கலாநிதி பாலிதா கோஹோனா பங்கேற்றிருக்கிறார். இலங்கையின் உட்கட்டுமானத்துக்கு சீனாவின் நிதியுதவி அவசியம் என்ற கருத்தை இலங்கையின் பிரதிநிதியான பாலித கோகன்ன தனது உரையில் விபரித்துள்ளார்.

நிகழ்வில் பாகிஸ்தான், பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான் மற்றும் நேபாள நாடுகளின் தூதுவர்களும் பங்கேற்றனர். தெற்காசிய நாடுகளின் பொருளாதார வளர்ச்சி மற்றும் வாழ்வாதார மேம்பாட்டுக்கு ஆதரவளித்தல், உதவியளித்தல், பிராந்தியத்தில் பலத்தைத் திரட்டுதல், வளங்களை ஒருங்கிணைத்தல் தந்திரோபாயங்களை பரிமாறிக்கொள்ளுதல் மற்றும் வறுமைக் குறைப்புக்கான காரணத்தை கூட்டாக ஊக்குவித்தல் மேற்படி மையத்தின் பிரதான நோக்கம் என்று சீன வெளியுறவு அமைச்சு கடந்த புதன்கிழமை வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.

சீன வெளியுறவு அமைச்சர் வோன் லீ, கடந்த ஏப்ரல் மாதம் விடுத்த கோரிக்கைக்கு அமைவாகவே சீனா தெற்கு நாடுகளின் வறுமை ஒழிப்பு மற்றும் கூட்டுறவு மேம்பாட்டு மையம் கடந்த செவ்வாய்க்கிழமை உருவாக்கப்பட்டிருக்கிறது. இது தொடர்பாக இலங்கை, பாகிஸ்தான், நோபாளம் ஆகிய நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் மற்றும் உயர்மட்ட அதிகாரிகளோடு கடந்த சில மாதங்களாக தொடர்ச்சியாகச் சீனா உரையாடியிருக்கிறது.

ஆனாலும் இந்த மையத்தை எப்போதிருந்து ஆரம்பிப்பது என்ற தகவலும், அதன் ஆவணங்கள் பற்றிய விபரங்களும் இதுவரை வெளியாகவில்லை. சீனாவைத் தலைமையாகக் கொண்டு இலங்கை, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், பாங்களாதேஷ், நேபாளம் ஆகிய ஐந்து நாடுகள் இந்த மையத்தின் அங்கத்துவ நாடுகளாக இருக்கும். இந்த மையத்தின் நோக்கங்களுக்கு சீனா பிரதான நிதியுதவியாளராகவும் வழிகாட்டியாகவும் செயற்படவுள்ளது.

பூட்டான், மாலைதீவு நாடுகள் இந்த மையத்தில் இணைக்கப்படவில்லை. ஏனெனில் பூட்டான் சீனாவின் பொருளாதாரத் திட்டங்களை புறக்கணித்துள்ளது. சீனாவுக்கு ஆதரவாக இருந்த மாலைதீவு தற்போது இந்தியாவின் செல்லப்பிள்ளையாகியுள்ளது. இதனால் இந்த இரு நாடுகளும் தவிர்க்கப்பட்டுள்ளன. இந்த மையத்தின் பிரதான செயற்பாட்டுத் திட்டங்கள், தந்திரோபாயங்கள் கொழும்பு, இஸ்லாமபாத் நகரங்களில் நடத்தப்படும் மாநாடுகளில் வகுக்கப்படலாம் என்பதை சீன வெளியுறவு அமைச்சின் அறிக்கையின் உள்ளடக்கத்தில் இருந்து அறிய முடிகின்றது.

இந்த அமைப்புக்கான மாநாடு சீனாவில் செவ்வாய்க் கிழமை இடம்பெற்றுக் கொண்டிருந்தபோதே தென் சீன கடல் பிரதேசத்தை சீனா உரிமை கோர முடியாதென அமெரிக்க வெளியுறவு அமைச்சர், அன்டனி பிளின் கென் எச்சரிக்கை விடுத்தார்.

சர்வதேச நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு எதிராக, பிலிப்பைன்ஸ் மீது தாக்குதல் நடத்தினால் அமெரிக்கா இராணுவத்தைக் களமிறக்கும் என்றும் அவர் கூறியிருந்தார். தென் சீனக் கடல் எல்லை தொடர்பான வழக்கில், பிலிப்பைன்ஸ் நாட்டுக்கு ஆதரவாக, சர்வதேச நீதிமன்றம் 2016 ஆம் ஆண்டு தீர்ப்பு வழங்கியிருந்தது. ஆனால் அந்தத் தீர்ப்பை சீனா இதுவரை ஏற்றுக்கொள்ளவில்லை. அந்தத் தீர்ப்பின் பின்னணியிலே தான் பிலிப்பைன்ஸ் நாட்டுடன் அமெரிக்கா பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றையும் செய்திருந்தது. இதனாலேயே இராணுவத்தை அனுப்புவோம் என்ற எச்சரிக்கையை அன்டனி பிளின் விடுத்திருந்தார் எனக் கருத முடியும்.

இந்தியா உள்ளிட்ட ஆசிய நாடுகளின் நிலப்பரப்பை ஆக்கிரமிக்கும் முயற்சியில், சீனா ஈடுபட்டுள்ளதென அமெரிக்க, இந்திய ஊடகங்கள் தொடர்ச்சியாகக் குற்றம் சுமத்துகின்றன. இந்த இடத்திலேதான் இலங்கை புதிய தந்திரோபாயங்களை வகுத்திருக்கிறது. ஈழத்தமிழர்களின் அரசியல் விடுதலை குறித்த நியாயங்களை சர்வதேச அரங்கில் இருந்து தட்டிக்கழிக்க அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகளின் ஒத்துழைப்பை இலங்கை 1983 ஆம் ஆண்டில் இருந்து 2009 ஆம் ஆண்டு மே மாதம் வரை பெற்றிருந்தது. தற்போது இந்தோ - பசுபிக் பாதுகாப்பு விவகாரத்தை மையப்படுத்தி அமெரிக்காவையும் சீனாவையும் வெவ்வேறாகவும் சமாந்தரமாகவும் இலங்கை கையாண்டு வருகின்றது. இதற்கு இலங்கையின் சமீபத்திய நகர்வு ஒன்றை உதாரணமாக அவதானிக்க முடியும்

அதாவது இலங்கை மற்றும் சீனா இராணுவத்தின் ஒருமித்த கூட்டுச் செயற்பாடுகள் உட்பட இரு நாடுகளுக்கும் இடையிலான அனைத்து துறைகளிலும் நடைமுறை ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்காக இலங்கையும் சீனாவும் உறுதிபூண்டுள்ளன என சீன அரசின் அதிகாரப்பூர்வ செய்தி நிறுவனமான சின்ஹுவா தெரிவித்துள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் சீன மாநில ஆலோசகரும் தேசிய பாதுகாப்பு அமைச்சருமான வீ பெங்கை சந்தித்த ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, பிரதமர் மகிந்த ராஜபக்ச ஆகியோர் நேரடியாகவே உறுதியளித்தனர் எனவும் அந்தச் செய்தியில் கூறப்பட்டிருக்கிறது. ஆனால் இது குறித்து இலங்கை அதிகாரபூர்வமாக ஊடகங்களுக்கு இன்றுவரை அறிவிக்காத நிலையில், சீன அரசின் அதிகாரப்பூர்வ செய்தி நிறுவனமான சின்ஹுவா இதனைப் பகிரங்கப்படுத்தியுள்ளது. சீனா தெற்கு நாடுகளின் வறுமை ஒழிப்பு மற்றும் கூட்டுறவு மேம்பாட்டு மையத்தை அமைப்பது குறித்தும் இருவருடனும் வீ பெங் பேசியதாகவும் அதற்கு இலங்கை உடன்பட்டதெனவும் அந்தச் செய்தியில் கூறப்பட்டிருக்கி றது.

இதன் பின்னணியிலேயே கடந்த மே மாதம் அமெரிக்காவுக்குச் சென்றிருந்த பசில் ராஜபக்ச இலங்கையில் அமெரிக்காவையும் சமாளித்து அதன் நலன்களுக்குச் சாதகமான விவகாரங்கள் குறித்தும் பேசியிருக்கிறார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனைத் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் நாசூக்காக வெளிப்படுத்தியிருக்கிறது. கோத்தாபயவை ஜனாதிபதியாக்குவதற்கு பாடுபட்ட அமைப்புகளில் ஒன்றான இந்த இயக்கம், தற்போது அமெரிக்க - இலங்கை உறவு பற்றியும் அதன் ஆபத்துகள் குறித்தும் கடந்த செவ்வாய்க்கிழமை நீண்ட அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தது. சீனாவோடு முழுமையான ஒத்துழைப்பை வழங்கி வரும் இலங்கை அரசு அமெரிக்காவுக்கும் இலங்கையில் கால்பதிக்க இடமளிக்கின்றது என்ற குற்றச்சாட்டை அந்த இயக்கம் முன்வைத்திருந்தது. திருகோணமலைத் துறைமுகத்தை ஐந்து ஆண்டுகளுக்கு மூவாயிரம் மில்லியன் டொலருக்குக் குத்தகைக்கு வழங்க இலங்கை இணங்கியிருப்பதாகத் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் அறிக்கை கூறுகின்றது. கோத்தாபய ராஜபக்சவோடு தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் முரண்பட்டுள்ள நிலையிலேயே இந்த உண்மைகள் வெளிவந்துள்ளன.

ஆனால் வடக்கு, கிழக்கில் உள்ள ஈழத்தமிழர்களுக்குச் சொந்தமான கடற் பிரதேசங்கள், வளங்கள் போன்றவற்றை அமெரிக்கா, சீனா, இந்தியா ஆகிய நாடுகளுக்குக் குத்தகைக்குக் கையளிக்கச் சிங்கள ஆட்சியாளர்கள் முற்படுவதை தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் கண்டிக்க முற்படுகின்றமை சிங்கள பௌத்த தேசிய நலன்சார்ந்ததே. அது ஈழத்தமிழர் நலன் சார்ந்ததல்ல.

வடமாகாண கடற்பிரதேசங்களையும் திருகோணமலைத் துறைமுகத்தையும் அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகளிடம் கையளித்து, வேண்டுமானால் சீனாவுக்கும் அங்கு சலுகைகளை வழங்குவதன் மூலம், ஈழத்தமிழர்களின் தமிழ்த் தேசியக் கோட்பாட்டை உடைப்பதே கோத்தாபய, ரணில் விக்கிரமசிங்க போன்ற சிங்கள ஆட்சியாளர்களின் நோக்கம். ஆகவே சிங்கள ஆட்சியாளர்களின் இந்த நோக்கமும் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் போன்ற சிங்கள அமைப்புகளின் எதிர்ப்பும் வெவ்வேறு கோணத்தில் இருந்தாலும், ஈழத்தமிழர்களின் தாயகக் கோட்பாட்டை சிதைப்பது என்ற அடிப்படைச் சிந்தனை ஒன்றுதான். கொழும்பு மற்றும் அம்பாந்தோட்டை போன்ற சிங்களப் பிரதேசங்களை அமெரிக்கா, சீனா போன்ற நாடுகளுக்குக் குத்தகைக்கு வழங்குவதும். இலங்கைத் தீவின் முதலீட்டுக்கு இந்தியா போன்ற நாடுகளுக்கு இடமளிப்பதும் இலங்கைத் தீவின் இறைமைக்கு உட்பட்டது. சிங்களவர்களின் பொருளாதார நலன்களுக்கும் வேலை வாய்ப்புகளுக்கும் ஏற்ற முறையிலும் அது அமைந்திருக்கும். ஆனால் தமிழர் பிரதேசங்களை இவ்வாறான நோக்கில் சிங்கள ஆட்சியாளர்கள் கருதவில்லை. நிலத் தொடர்பைப் பிரித்துத் தாயகக் கோட்பாட்டை உடைத்தல் என்ற இலங்கை ஒற்றையாட்சியின் சிந்தனைகளை உள்வாங்கியே அமெரிக்கா, சீனா போன்ற நாடுகளும் வடக்குக் கிழக்கில் தங்கள் புவிசார் நலன்களை நிறைவேற்று கின்றன. இந்தியாவும் இதற்கு விதிவிலக்கல்ல. அமெரிக்காவின் நட்பு நாடுகளையும் இணைத்துக் கொண்டு ஆசியான் நாடுகளை உள்ளடக்கிய பிராந்திய பொருளாதாரக் கட்டமைப்பு ஒப்பந்தம் (Regional Comprehensive Economic Partnership RCEP) ஒன்றை சீனா கடந்த ஆண்டு நவம்பர் மாதம் செய்திருந்தது. இதன் மூலம் கொழும்பு போர்ட் சிற்றியில் மேற்கு மற்றும் ஐரோப்பிய நாடுகளின் முதலீட்டாளர்களையும் இலங்கை வரவழைக்கக் கூடிய சூழல் உண்டு.

ஆகவே இவ்வாறான புவிசார் மற்றும் பூகோள அரசியல் செயற்பாடுகள் எல்லாமே ஈழத் தமிழர்களின் அரசியல் விடுதலை குறித்த பேச்சுக்களைச் சர்வதேச அரங்கில் இருந்து முற்றாகவே நீக்கம் சிங்கள ஆட்சியாளர்களுக்கு வசதியாக அமைந்துள்ளது.




# சீனாவின் பொறிக்குள் இந்தியா

○ ந.பரமேஸ்வரன்

**1962** ஆம் ஆண்டு இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையே போர் மூண்டபோது வடஇந்திய எல்லையிலேயே போர் நடைபெற்றது. சீனப் படைகள் முன்னேறத் தொடங்கியதும் அப்போதைய பாரதப் பிரதமர் நேரு, சீனாவுடன் சமாதான ஒப்பந்தம் செய்துகொண்டார். இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையே இனிமேல் போர் மூண்டால் அல்லது யுத்தம் ஏற்பட்டால் சீனாவிடம் சரணடைவதைத் தவிர இந்தியாவுக்கு வேறுவழியில்லை. காரணம் இந்தியா மூச்சுவிட முடியாதளவுக்கு சீனா இந்தியாவை சுற்றி வளைத்துள்ளது. இந்தியாவின் எல்லை நாடுகளான இலங்கை, பாகிஸ்தான், பங்களாதேஷ், நேபாளம், மாலைதீவு, மியான்மர் போன்ற நாடுகள் இப்போது சீனாவின் கட்டுப்பாட்டில். வறிய அல்லது பொருளாதார ரீதியில் பின்தங்கிய நிலையில் உள்ள இந்த இந்தியாவைச் சூழவுள்ள நாடுகள் அனைத்தையும் தனது கடன் பொறிக்குள் சிக்க வைத்து கடன்களை வாரி வழங்கியதன் மூலம் இந்த நாடுகள் அனைத்தையும் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துள்ளது சீனா. பீஜிங்கின் தாளத்துக்கு ஏற்ப ஆடுவதைத் தவிர இந்த நாடுகளுக்கு வேறுவழியில்லை. அமெரிக்க வெளியுறவுச் செயலர் மைக்பொம்பியோ சீனாவின் கடன் பொறி பற்றி எச்சரித்தபோது இலங்கை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, "நாங்கள் சீனாவின் கடன் பொறிக்குள் சிக்கமாட்டோம்" என பதிலளித்திருந்தார். நேபாள அரசாங்கத்தில் உயர் பதவி வகிக்கும் உயரதிகாரி ஒருவர் சீனாவின் கடன் பொறி பற்றி சர்வதேச ஊடகமொன்றுக்கு கருத்து தெரிவிக்கையில் "சீனாவின் கடன் பொறிக்குள் சிக்குவதற்கு நேபாளிகள் ஒன்றும் முட்டாள்களல்லர்" எனத் தெரிவித்துள்ளார். பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனா, பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கான் ஆகியோரும் தாங்கள் சீனாவின் கடன்பொறிக்குள் சிக்கமாட்டோம் என்றே கூறியுள்ளனர் ஆனால் இவர்கள் இவ்வாறு கூறினாலும் பீஜிங்கின் தாளத்துக்கேற்ப ஆடுவதைத் தவிர இந்த நாடுகளுக்கு வேறுவழியில்லை என்றே சர்வதேச அரசியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர். டிஜிபோதி இதற்கு நல்ல உதாரணம்.

ஆபிரிக்கக் கண்டத்தின் மிகச்சிறிய நாடான டிஜிபோதி 2012 ஆம் ஆண்டு கொழும்பு தெற்குமுனையம் போன்ற ஒரு சுதந்திர வர்த்தக வலயத்தை உருவாக்கியது 2012 முதல் 2020 வரையான காலப்பகுதியில் சீனா இந்த வலயத்தில் 1.02பில்லியன் டொலர் முதலீடு செய்துள்ளது. டிஜிபோதியின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 70% சீன முதலீடுகள்.

2017 ஓகஸ்ட் முதலாம் திகதி சீனா தனது கடற்படைத் தளத்தை டிஜிபோதியில் நிறுவியுள்ளது. சீனாவின் வலையில் சிக்கியுள்ள தெற்காசிய நாடுகளில் பலமான எதிர்க்கட்சிகள் இல்லாதமை சீனாவுக்கு வாய்ப்பாக உள்ளதாகவும் இவர்கள் கூறுகின்றனர். அவ்வப்போது சீனா வுக்கு எதிரான சில சம்பவங்கள் இடம்பெற்றிருந்தாலும் இவை பெரியளவில் தாக்கத்தை ஏற்படுத்தமாட்டாது என்றே சர்வதேச அரசியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

2017ஆம் ஆண்டு ஜூன் மாதம் பாகிஸ்தானில் சீனமொழி கற்பிக்கும் சீன ஆசிரியர்களிருவர் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டனர்; இதற்கு ஐ.எஸ். உரிமைகோரியிருந்தது. மியான்மரிலும் கடந்த மார்ச் மாதம் சீனதொழிற்சாலைகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது இப்படியான சிறு சிறு சம்பவங்கள் பெரியளவில் தாக்கத்தை ஏற்படுத்தமாட்டாது.

**சீனாவிடம் நாடுகள் பெற்ற கடன்**

| | |
|---|---|
| பாகிஸ்தான் | 115.76 பில்லியன் டொலர் |
| பங்களாதேஷ் | 1.159 பில்லியன் டொலர் |
| நேபாளம் | 3 பில்லியன் டொலர் |
| இலங்கை | 5 பில்லியன் டொலர் |
| மாலைதீவு | 1.4 பில்லியன் டொலர் |
| மியான்மர் | 4 பில்லியன் டொலர் |

*(இந்தப் புள்ளிவிபரங்கள் இனிவரும் காலங்களில் சிலவேளைகளில் மாறுபடலாம்)*

புள்ளிவிபரங்களை ஒருபுறம் வைத்துவிட்டு சுருக்கமாகச் சொல்லப்போனால் இந்தியாவைச் சுற்றியுள்ள நாடுகளனைத்துக்கும் கடன்களை தாராளமாக வழங்கி அவற்றைத் தனது கட்டுப்பாட்டில் வைத்துள்ளது சீனா. நேபாளம் முன்பு இந்தியாவின் கட்டுப்பாட்டிலேயே இருந்தது. நேபாளத்தில் மன்னராட்சி மறைந்ததும் இந்தியாவின் கட்டுப்பாட்டிலிருந்து நேபாளம் விலகத் தொடங்கிவிட்டது என்று சொல்லலாம். அதேபோல் பங்களாதேஷும் இந்தியாவின் கைப்பிடிக்குள்ளேயே இருந்தது. இப்போது பங்களாதேஷ் சீனா பக்கம் சாய ஆரம்பித்து விட்டது. பங்களாதேஷை இந்தியாவுக்கு எதிராக திசைதிருப்பி தனது பக்கம் இழுத்துவிட்டது சீனா. இப்போது பாகிஸ்தான் பங்களாதேஷ் இரு நாடுகளையும் தனது கட்டுப்பாட்டில் கொண்டு வந்துவிட்டது சீனா.

இலங்கையும் அதேநிலைப்பாடுதான். பாகிஸ்தானும் பங்களாதேஷும் எதிரி நாடுகள். இரு நாடுகளையும் தனது கட்டுப்பாட்டில் கொண்டுவந்துவிட்டது சீனா. புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் மகிந்த ராஜபக்ச எப்படி எதிரும் புதிருமான நாடுகள் அனைத்தையும் தனது கைக்குள் போட்டுகொண்டு யுத்தத்தில் வெற்றியீட்டினாரோ அதேபோன்ற ஒரு இராஜதந்திரத்தை சீனா கடைப்பிடித்து வருகிறது. பாகிஸ்தான் இன்னும் மூன்று பில்லியன் டொலரை சீனாவிடம் கடனாக எதிர்பார்த்திருக்கிறது.


ஒப்பீட்டளவில் பார்க்கும்போது , டிஜிபோதி சீனாவிடமிருந்து பெற்றுக்கொண்ட தொகையைவிட தெற்காசிய நாடுகள் அதிகமாக பெற்றுள்ளன. இன்னொரு இந்திய சீன யுத்தம் ஏற்பட்டால் தனது கட்டுப்பாட்டில் உள்ள நாடுகளில் உள்ள துறை முகங்களை சீனா நிச்சயம் பயன்படுத்தும். அத்துடன் தனது இராணுவத்தையும் இந்த நாடுகளில் நிலைகொள்ளச் செய்யும். மறுப்பு தெரிவிக்கும் பட்சத்தில் சீனா கடனை அடைக்கச் சொல்லி அச்சுறுத்த முயற்சிக்கும். இந்திய- சீன யுத்தம் ஒன்று தோன்றும் பட்சத்தில் பாகிஸ்தானின் குவாடர் மியான்மாரின் க்யாக்பூ ( kyaukpu) பங்களாதேஷின் பயாரா ( Payara) மற்றும் அம்பாந்தோட்டை அல்லது கொழும்பு போன்ற துறைமுகங்களி லிருந்து இந்தியா மீது தாக்குதல் தொடுக்கப்படும் பட்சத்தில் இந்தியாவுக்கு சீனாவிடம் சரணடைவதைத் தவிர வேறு வழியிருக்காது. ■

# கொங்குநாடு: பிரிப்பின் அரசியல்!

○ மயூ

**த**மிழகத்தின் மேற்கு மாவட்டங்களைப் பிரித்துத் தனி மாநிலம் ஒன்றை உருவாக்க இந்திய மத்திய அரசு திட்டமிடுகின்றது என்று தகவல்கள் வெளியானதை அடுத்து தமிழகம் பரபரத்துக் கொண்டிருக்கின்றது. தமிழகத்தில் வெளியாகும் நாளிதழ் ஒன்று முதன்முதலாக தலைப்புச் செய்தியாக இந்தத் தகவலை வெளியிட்டது. தமிழ்நாட்டில் மத்திய அரசை 'ஒன்றிய அரசு' என்று அழைக்கவேண்டும் என்ற வாதம் வலுப்பட்டு வந்த சந்தரப்பத்தில் இந்தச் செய்தி வெளியானது. அதன் பின்னர் கொங்குநாடு என்ற விவகாரம் சமூக வலைத்தளங்களில் விவாதப் பொருளானது. மாநிலத்தைப் பிரிக்கும் இந்த யோசனைக்கு கடும் எதிர்ப்புகள் கிளம்பியிருக்கின்றன. இந்த விவகாரத்தில் கருத்துத் தெரிவித்த பா.ஜ.க. மாநில செயலாளர் கரு.நாகராஜன், "கொங்கு நாடு தனி மாநிலம் உருவாக்கும் பரிசீலனை மத்திய அரசிடம் தொடக்க நிலையில் உள்ளது. அந்தப் பகுதி மக்கள் எதை விரும்புகிறார்களோ அதை நிறைவேற்ற வேண்டியது அரசின் கடமை" என்று கூறினார். ஆயினும் இந்திய மத்திய அரசிடம் இருந்து இது தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்புகள் வரவில்லை. அதேநேரம் தமிழக அரசும் இது தொடர்பாக எந்தக் கருத்தும் வெளியிடவில்லை.

தமிழகத்தில் அண்மைக்காலமாக ஒன்றிய அரசு என்ற சொல்லாடல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்திய மத்திய அரசு என்பதற்குப் பதிலாக இந்திய ஒன்றிய அரசு என்றே தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் உட்படப் பலர் பயன்படுத்த ஆரம்பித்திருக்கின்றனர். "இந்திய அரசு ஆங்கிலத்தில் 'யூனியன் கவர்ன்மெண்ட்' என்று அழைக்கப்படுவதால் அதை நாங்கள் ஒன்றிய அரசு என்று கூறுகிறோம். இது ஒன்றும் சமூகவிரோத குற்றமல்ல "என்று முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் விளக்கமும் அளித்திருந்தார்.



பா.ஜ.க. உறுப்பினர் நயினார் நாகேந்திரன் சட்டசபையில் `இந்தியாவிலிருந்து பிரிந்தது தான் மாநிலங்கள்" எனத் தொடங்கிய விவாதத்துக்கு "இந்தியாவிலிருந்து மாநிலங்கள் பிரியவில்லை; எல்லா மாநிலங்களும் ஒன்றிணைந்து உருவாக்கியதுதான் இந்தியா" என உயர் கல்வித்துறை அமைச்சர் பொன்முடி விளக்கம் கொடுத்து அடங்கியிருந்தார்.

ஆனால் இந்த ஒன்றிய அரசு விவகாரம், ஆளும் பா.ஜ.க. அரசுக்கு மகிழ்ச்சியளிக்கவில்லை என்பது தெரிகின்றது. தமிழகம் தனி வழியில் பயணிப்பது தங்கள் செல்வாக்கைக் குறைக்கும் என்பதுடன், ஏனைய மாநிலங்களிலும் தங்களுக்கு ஆபத்தை ஏற்படுத்திவிடும் என்று பா.ஜ.க. கருதுகின்றது. தமிழக பா.ஜ.கவினர் ஒன்றிய அரசு என்று அழைப்பதைத் தடுக்க வேண்டும் என்று நீதிமன்றில் மனுத் தாக்கலும் செய்திருந்தனர்.

"கொரோனா தடுப்பூசி போடுங்கள் என நீதிமன்றமும், அரசும் பொதுமக்களை வலியுறுத்துகின்றன. ஆனால் தடுப்பூசி போட்டுக்கொள்வது அல்லது போடாமல் இருப்பது அவர்களின் தனிப்பட்ட உரிமை. அதைப்போல நீதிமன்றம் இந்தியாவை இந்திய அரசு அல்லது பாரத் என்று அழைப்பதற்கு தமிழ்நாடு முதல் அமைச்சருக்கோ, அமைச்சர்களுக்கோ உத்தரவிட முடியாது. சட்டமன்றத்தில் இது தான் போச வேண்டும் என நீதிமன்றம் கூற முடியாது என்று கூறிய நீதிபதிகள், மனுவை தள்ளுபடி செய்தனர். இதன்பின்னரே கொங்கு நாடு விவகாரம் கிளப்பிவிடப்பட்டிருக்கின்றது.

தமிழக அரசை தங்களின் வழிக்குக் கொண்டுவருவதற்கான ஆயுதமாக "கொங்கு நாடு" விவகாரத்தைக் கையில் எடுத்துள்ளது பா.ஜ.கட்சி. அந்தக் கட்சி நேரடியாக இந்த விடயத்தில் கருத்துக்களை வெளியிடாவிட்டாலும், இந்த விவகாரத்தில் பின்னால் இருந்து ஆட்டுவது பா.ஜ.கவே. 'கொங்கு நாடு' என்ற கோரிக்கை அரசியலில் தாக்கத்தை ஏற்படுத்த வாய்ப்பு இல்லை. ஆனால், 'திராவிடநாடு', 'ஒன்றிய அரசு', 'தனித் தமிழ்நாடு' என்றெல்லாம் பிரிவினை உள்நோக்கத்துடன் பேசி வருபவர்களுக்கு பதிலடியாக 'கொங்கு நாடு' கோரிக்கை இருக்கும் என்று கூறுகின்றனர் பா.ஜ.கவைச் சேர்ந்தவர்கள்.

தமிழ்நாட்டின் மேற்கு மாவட்டவங்களான கோயம்புத்தூர், சேலம், ஈரோடு, திருப்பூர், கரூர், நாமக்கல், நீலகிரி ஆகியவையும் திண்டுக்கல், தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களின் சில பகுதிகளையும் கொங்கு மண்டலம் என்று கூறுவது தமிழக அரசியலில் வழக்கமாக இருக்கின்றது. உண்மையில் முற்காலங்களில் கொங்கு நாடு என்று ஒன்று இருந்ததா என்று ஆராய்ச்சியாளர்களைக் கேட்டால், வரலாற்றின் எந்தவொரு காலகட்டத்திலும் கொங்கு நாடு என்ற நிலப்பரப்பு தனி நாடாகவோ, தனி ஆட்சிக்குட்பட்ட பகுதியாகவோ, ஒரே அரசரின் கட்டுப்பாட்டிலோ இருந்ததில்லை. இந்தப் பகுதிக்கு தலைநகரம் என்று எதுவும் இருந்திருக்கவில்லை என்று கூறுகின்றனர்.

தமிழகத்தில் பா.ஜ.க. கட்சிக்குக் கடும் எதிர்ப்புகள் இருக்கின்றன. நீட் தேர்வு, எரிபொருள் விலையேற்றம் என்று மக்கள் மத்திய அரசில் கடும் அதிருப்தியில் இருக்கின்றனர். தற்போது தமிழகத்தில் உள்ள தி.மு.க. மக்களின் அதிருப்தியைப் பயன்படுத்திக்கொள்கின்றது. மத்தியில் ஆளும் பா.ஜ.க. அரசை விமர்சிக்கும் போக்கைக் கைக்கொள்கின்றது. இவை மோடி அரசுக்கு தலையிடியாகவுள்ள நிலையில், அதிகம் முரண்டுபிடித்தால் மாநிலத்தையே பிரிப்போம் என்ற எச்சரிக்கையே கொங்கு நாட்டு விவகாரம். நடைமுறையில் இது சாத்தியமா என்பதற்கு அப்பால், மாநிலங்களை அடக்கி ஒடுக்கி, அவை தங்கள் தாளத்துக்கு ஆட வேண்டும் என்று எண்ணும் மாநில அரசின் போக்கு இந்த விவகாரத்தில் வெளியாகியிருக்கின்றது. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ந.பரமேஸ்வரன்

# யாழ்ப்பாண வரலாறு

## 1505-1948 வரை

சங்கிலியனுக்குச் சொந்தமான காரைதீவில் (காரைநகர்) பாதுகாப்புக் காரணங்களுக்காக கோட்டையொன்று அமைக்கப்பட்டது. யாழ்ப்பாண ஏழைப் பெண்களை திருமணம் செய்த போர்த்துக்கீசருக்கும் காணிகள் ஒதுக்கப்பட்டன. இதைவிட ஒலிவேரா தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி தனது நண்பர்களுக்கு சில காணிகளை ஒதுக்கீடு செய்தான். ஆனால் இந்த ஒதுக்கீடுகள் எவையும் பெரியளவு நிலப்பரப்பைக் கொண்டிருக்கவில்லை. போர்த்துக்கீசர் கையகப்படுத்திய நிலத்திலிருந்து கிடைக்கும் வருமானத்தின் 12% யாழ்ப்பாண திறைசேரிக்கு வாடகையாக வழங்கப்பட்டது. கோட்டை இராச்சியத்தில் போர்த்துக்கீசர் உள்ளூர்வாசிகளுக்கு வழங்கிய வாடகைப் பணம் யாழ்ப்பாணத்தில் வழங்கிய பணத்தைவிட குறைவாக இருந்தது.

### குடியேற்றம் தொடர்பான விவாதம்

ஆரம்பகட்ட நிலஒதுக்கீடு முடிந்ததும் போர்த்துக்கீசர் எவ்வாறான நிலக்கொள்கையை யாழ்ப்பாணத்தில் முன்னெடுப்பது எனச் சிந்தித்தனர். போர்த்துக்கீசருக்கு நிலஒதுக்கீடு செய்வது தொடர்பாக பொருளாதார ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் ஆளுநரின் நீதிமன்றம் எதிர்மறையான நிலைப்பாட்டைக் கொண்டிருந்தது. போர்த்துக்கீசருக்கு ஒதுக்கப்பட்ட காணிகளுக்கு 12% வரியை வாடகையாகச் செலுத்துவது இயலாத விடயமாக இருந்தது. அத்துடன் கோவாவுக்கு மாற்றீடாக யாழ்ப்பாணத்தை பாவிப்பது தொடர்பிலும் கோவா ஒரு நிலைப்பாட்டையும் எடுக்கவில்லை என ஆளுநர் குறிப்பிட்டார். அத்துடன் குடியேற்றவாசிகள் தொடர்பில் இழிவான அபிப்பிராயம் ஆளுநரிடம் இருந்தது. குடியேற்றவாசிகள் உள்ளூர்வாசிகளை அடிமைகளைவிட கேவலமாக நடத்துகின்றனர் என அவர் கருதினார். யாழ்ப்பாணத்தில் போர்த்துக்கீசரின் குடியேற்றங்கள் அரசியல் செயற்பாடுகளுக்கு இடையூறு விளைவிக்கின்றன என அவர் கருதினார். தோம்புகள் பூரணப்படுத் தப்படும் வரை நிலஒதுக்கீடு செய்யவேண்டாமெனவும் அவர் தெரிவித்தார் .
டீசிக்சாஸ் ஆளுநரின் கருத்துக்கு எதிர்மறையான நிலைப்பட்டைக் கொண்டிருந்தார். அவர் குடியேற்றம் தொடர்பாக முதலியார்களிடமிருந்து இடையூறுகளை எதிர்நோக்கினார். ஒரே நேரத்தில் இரண்டு திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு அவர் பரிந்துரைத்தார். பொருளாதார ரீதியாக ஏற்பட்ட பின்னடைவுகளை ஈடுசெய்வதன் மூலம் திறைசேரிக்கு செலுத்த வேண்டிய 12% இறையைப் பெற்றுக் கொள்வது நிலத்துக்குரிய வருமானத்தை மூன்றில் இரண்டு அல்லது நான்கில் மூன்று என தீர்மானிப்பது பொருளாதார ரீதியாக ஏற்பட்ட பின்னடைவுகளை ஈடுசெய்வதன் மூலம் திறைசேரிக்கு செலுத்த வேண்டிய 12% இறையைப் பெற்றுக்கொள்வது நிலத்துக்குரிய வருமானத்தை மூன்றில் இரண்டு அல்லது நான்கில் மூன்று என தீர்மானிப்பது இதனை கோவாவில் இருந்த அம்பிரோசியோ டீ பெஃரிரஸ் ( Am brosiyo de Frietas) ஆதரித்தார்.
1634 இல் யாழ்ப்பாணத்தில் பெருமளவில் போர்த்துக்கீசரை குடியமர்த்துவதற்கு லிஸ்பன் நிர்வாகம் எதிர்ப்புத் தெரிவித்தது. யாழ்ப்பாணத்தில் போர்த்துக்கீசரை குடியேற்றுவதான தீர்மானத்தை மீளப்பெறுமாறு லிஸ்பன் நிர்வாகம் கோவாவுக்கு அறிவித்தது.

**ஒரு தசாப்தத்துக்கு மேலாக போர்த்துக்கீசர் யாழ்ப்பாணத்தை ஆட்சிசெய்த போதும் 30 போர்த்துக்கீச குடும்பங்களே அரசிடமிருந்து காணிகளைப் பெற்றுக்குடியிருந்தன. அடுத்த 15 வருடங்களில் 55 போர்த்துக்கீச குடும்பங்கள் யாழ்ப்பாணத்தில் குடியமர்த்தப்பட்டன.**

### நில ஒதுக்கீட்டுக்கான அழுத்தம்

1640 இல் யாழ்ப்பாணத்தில் நிலஒதுக்கீட்டுக்கான அழுத்தம் மீண்டும் எழுந்தது.
1638-1644 வரையான காலப்பகுதியில் காலி, நீர்கொழும்பு, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய கோட்டைகளின் வீழ்ச்சியைத் தொடர்ந்து கணிசமான போர்த்துக்கீசர் இடம்பெயர்ந்து வேறு இடங்களில் குடியமரவேண்டிய நிலை ஏற்பட்டது.1641இல் மலாக்காவின் வீழ்ச்சி கணிசமான போர்த்துக்கீசரை இலங்கைக்கு கொண்டுவந்தது. 1636 இல் யாழ்ப்பாணத்தில் போர்த்துக்கீசருக்கு நிலங்களை ஒதுக்குவதில்லை என எடுக்கப்பட்ட தீர்மானம் மீள்பரிசீலனை செய்யப்பட்டது. 1640- 1645 காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் போர்த்துக்கீசருக்கு கொஞ்ச நிலத்தை வழங்குவது என்ற தீர்மானத்தை ஆளுநரின் நீதிமன்றம் எடுத்தது. சில காணிகளை குறுகியகால அடிப்படையிலும் சில காணிகளை நீண்டகால அடிப்படையிலும் வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டது. நீண்டகால அடிப்படையில் வழங்கப்பட்ட காணிகள் ஒல்லாந்தர் ( டச்சுக்காரர்) வரும்வரை நடைமுறையில் இருந்தன. யாழ்ப்பாணத்தில் நடைமுறைப்படுத்திய நிலக்கொள்கை இறைவரி வருமானத்தில் நட்டத்தை ஏற்படுத்தியபடியால் கோவா நிர்வாகம் நிலஒதுக்கீட்டை ஏற்றுக்கொள்ளவில்லை. ஏற்றுமதி வரியை யாழ்ப்பாணத்திலிருந்து பெற்றுக் கொள்வது சிரமமாயிருந்தது. போர்த்துக்கீசருக்கு நிலங்களை ஒதுக்குவதை உடனடியாக நிறுத்துமாறும் ஏற்கனவே ஒதுக்கப்பட்ட நிலங்களை உடனடியாக மீளளிக்குமாறும் போர்த்துக்கல் அரசர் உத்தரவிட்டார்.

### 1646 இல் குடியேற்றம்

குடியேற்றத்தில் பொதுவான அணுகுமுறைகள் தாக்கத்தை ஏற்படுத்தின.
1645 இல் யாழ்ப்பாணத்தில் 88 போர்த்துக்கீசக் குடும்பங்கள் வரிசெலுத்திக் கொண்டிருந்தன. இவற்றில் 3 குடும்பங்கள் இரண்டாவது தலைமுறையாக இருந்தன. இவற்றைவிட 25 குடும்பங்கள் அவர்களது பெற்றோர் அல்லது உறவினர்களின் காணிகளைக் கொண்டிருந்தன. ஒரு தசாப்தத்துக்கு மேலாக போர்த்துக்கீசர் யாழ்ப்பாணத்தை ஆட்சிசெய்த போதும் 30 போர்த்துக்கீச குடும்பங்களே அரசிடமிருந்து காணிகளைப் பெற்றுக்குடியிருந்தன. அடுத்த 15 வருடங்களில் 55 போர்த்துக்கீச குடும்பங்கள் யாழ்ப்பாணத்தில் குடியமர்த்தப்பட்டன. 1645 இல் யாழ்ப்பாணத்தில் வசித்த போர்த்துக்கீச குடும்பங்க ளின் எண்ணிக்கை 88 ஆகவும் பிரஜைகளின் எண்ணிக்கை 350 - 440 ஆகவும் இருந்தது.

(வரலாறு நீளும்)

# தண்டனையாக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)


பெறும்பொழுது ஐக்கிய தேசிய கட்சிக் தமிழ், முஸ்லிம் தரப்புக்களோடு இணைந்து அதை எதிர்கொள்ளும். கடந்த 2015ஆம் ஆண்டு ஆட்சிமாற்றத்தின்போது அதுதான் நடந்தது. இந்த வரலாற்றுப் போக்கின் அடிப்படையில் சிந்திப்பவர்கள் இப்பொழுது தென்னிலங்கையில் ஏற்பட்டிருக்கும் கசப்பு, வெறுப்பு, ஏமாற்றம் போன்றவற்றை அரசாங்கத்துக்கு எதிரான ஒரு திரட்சியாக மாற்றுவதற்கு மறுபடியும் தமிழ் முஸ்லிம் மக்களை ஒருங்கிணைத்து ஒரு கூட்டுத் தேவை என்று உணரத்தலைப்பட்டிருக்கிறார்கள். ஆனால் இங்கு இரண்டு விடயங்களைச் சுட்டிக்காட்ட வேண்டும். முதலாவது,அத்தகைய ஒரு கூட்டின் மூலம் இப்போதுள்ள அரசாங்கத்தை மாற்றலாமா? என்பது. இரண்டாவது, எப்படிப்பட்ட ஒரு மாற்றம் தமிழ் மக்களுக்கு தேவை ?என்பது.
முதலாவதாக ஒரு ஆட்சிமாற்றத்துக்கான வாய்ப்புக்களைப் பார்க்கலாம். 2015ஆம் ஆண்டு அப்படி ஒரு கூட்டை உருவாக்கி தமது ஆட்சி கவிழ்க்கப்பட்ட அனுபவத்தை வைத்துத் தான் ராஜபக்சக்கள் தனிச் சிங்கள மூன்றில் இரண்டு பெரும்பான்மை என்ற ஒரு முடிவுக்கு போனார்கள். மிகக் குறிப்பாக 2018 ஆட்சி குழப்பத்தின்போதும் மஹிந்த ராஜபக்ச நினைத்தபடி காய்களை நகர்த்த முடியாமல்போனது. அதற்கு காரணம் தமிழ், சிங்களப் பிரதிநிதிகள் ரணில் விக்கிரமசிங்கவை பாதுகாத்ததுதான். அதை இன்னும் கூர்மையாக சொன்னால் கொழும்பை யார் ஆள்வது என்பதனை தமிழ் முஸ்லிம் பிரதிநிதிகள் தீர்மானித்தார்கள்.


அதை வைத்து தான் ராஜபக்சக்கள் ஒரு முடிவை எடுத்தார்கள். இனிமேலும் அவ்வாறு சிறிய மக்கள் கூட்டங்கள் கொழும்பை யார் ஆளவேண்டும் என்பதை தீர்மானிக்கும் ஒரு நிலைமை வரக்கூடாது என்று. ஈஸ்டர் குண்டுவெடிப்பு அவர்களுடைய வழிகளை இலகுவாக்கிக் கொடுத்தது. முடிவில் மூன்றில் இரண்டு தனிச்சிங்கள பெரும்பான்மையைப் பெற்று அவர்கள் ஆட்சிக்கு வந்தார்கள்.

இப்பொழுது அந்தப் பெரும்பான்மை அதன் மினுக்கத்தை இழக்கத் தொடங்கியிருப்பதாகக் கருதப்படும் ஒரு பின்னணியில் ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்த விரும்பும் சக்திகள் புதிய கூட்டணிகளைப் பற்றிச் சிந்திப்பதாகத் தெரிகிறது. அதற்குரிய நகர்வுகளிலும் ஈடுபட்டிருப்பதாகத் தெரிகிறது. ஆனால் இங்கு பிரச்சினை என்னவென்றால் எந்த அடிப்படையில் ராஜபக்சக்கள் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைக் கேட்கிறார்களோ அந்த அடிப்படை இப்பொழுதும் பலமாக உண்டு என்பதுதான். கொழும்பை யார் ஆள்வது என்பதை தமிழர்களும் முஸ்லிம்களும் தீர்மானிக்கக்கூடாது என்று அவர்கள் முடிவெடுத்தார்கள். அந்த அடிப்படையில் தான் தனிச் சிங்கள வாக்குகளை கேட்டுப்பெற்றார்கள். அவ்வாறு தனிச்சிங்கள வாக்குகளை கேட்பது என்பது பிரயோகத்தில் தமிழ் சிங்கள மக்களுக்கு எதிரானதுதான். எனவே தமிழ்மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்கும் எதிரான உணர்வுகளை தொடர்ந்தும் தக்கவைப்பதன் மூலம் அவர்கள் இப்பொழுது ஆட்சிக்குள் ஏற்பட்டிருக்கும் குழப்பங்களையும் வாக்காளர்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கும் குழப்பங்களையும் எளிதாகக் கடந்து போகலாம்.

அதற்குரிய மிக வாய்ப்பான ஒரு சந்தர்ப்பத்தை வரும் செப்ரெம்பர் மாதம் ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் உருவாக்கப்படவிருக்கும் ஒருபொறிமுறை அவர்களுக்கு வழங்கும். கடந்த ஜெனிவாத் தீர்மானத்தின் பிரகாரம் உருவாக்கப்படவிருக்கும் இந்தப்பொறி முறையானது இலங்கைதீவில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பான சான்றுகளையும் ஆதாரங்களையும் திரட்டுவதற்கானது. அந்தப் பொறிமுறை வரும் செப்ரெம்பர் மாதம் செயற்படத்தொடங்கும். வரும் செப்ரெம்பர் மாதம் ஐ.நா.வின் நிதி ஆண்டு தொடங்கும். அப்பொழுதுதான் அந்தப்பொறிமுறைக்குத் தேவையான நிதி வழங்கப்படும். அவ்வாறான ஒரு பொறிமுறை செயற்படத்தொடங்கும் பொழுது அது கொழும்பில் அதிகரித்த அளவில் பதற்றத்தையும் கொந்தளிப்பையும் ஒரு இனஅலையையும் உற்பத்திசெய்யப் போதுமாக இருக்கும். அந்த இனஅலையை வைத்து அரசாங்கம் இப்போது ஏற்பட்டிருக்கும் எல்லாக் குழப்பங்களையும் வைரஸ் தாக்கத்தால் ஏற்பட்டிருக்கும் பொருளாதார எதிர்விளைவுகளையும் இலகுவாகக் கடந்து போகக்கூடியதாக இருக்குமா? இது முதலாவது. இரண்டாவது, தென்னிலங்கையில் அரசுக்கு வழங்கப்பட்ட தனிச்சிங்கள மூன்றிலிரண்டு பெரும்பான்மை அதன் பளபளப்பை இழக்கத் தொடங்குவதை வைத்து சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களை இணைத்து ஒரு புதிய கூட்டை உருவாக்கி ஒரு ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்தலாம் என்று சிந்திப்பவர்கள் தொடர்பில் தமிழ் மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும். தமிழ் மக்களுக்கு தேவையாக இருப்பது ஆட்சி மாற்றம் அல்ல. அரசுக் கட்டமைப்பில் ஏற்படுத்தப்பட வேண்டிய மாற்றம்தான். ஒடுக்கும் மனோநிலையில் ஏற்பட வேண்டிய மாற்றம்தான். இலங்கைத்தீவின் ஒற்றையாட்சிக் கட்டமைப்பு எனப்படுவது சிங்கள பௌத்த பெருந்தேசியவாதத்தின் ஒடுக்கும் மனோநிலையின் விளைவுதான். எனவே அந்த மனோநிலையில் மாற்றம் வேண்டும். அந்த மனோநிலையின் உபகரணம் ஆகிய அரசுக்கட்டமைப்பில் மாற்றம்வேண்டும். பல்லினத் தன்மை மிக்க பல்சமயப் பண்புமிக்க ஒரு இலங்கைதீவை கட்டியெழுப்ப தயாரற்ற எந்த ஒருமாற்றமும் தமிழ் மக்களைப் பொறுத்தவரை ஏமாற்றமாகவே முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






**டாக்டர் நான் கிரமமாக உடற்பயிற்சி செய்யும் ஒரு விளையாட்டு வீரன். கடந்த இரு வாரங்களாக விரைகளில் வீக்கமும் இலேசான வலியும் இருக்கிறது. உடற்பயிற்சி செய்கையில் வலி அதிகரிக்கிறது. பயமாக உள்ளது. இந்நிலை ஏற்பட காரணமென்ன? என்ன பரிசோதனைகள் மேற்கொள்ள வேண்டும்? தயவுசெய்து விளக்கமளியுங்கள்**

*ரமேஷ், தம்புள்ள*

# விரைவீக்கம் (Hydrocele)

எவ்வயதினருக்கும் ஏற்படக்கூடிய ஒரு உபாதை. ஆண்களின் விரையை (Tesgcle) சுற்றியிருக்கும் சவ்வுப் பகுதியில் அளவுக்கதிகமாக நீர் சுரப்பதால் ஏற்படும் நிலை. சுரப்பு நீர் உடலுக்குள் சுழற்சிப்படுத்தப்படும் நிணநீர்ப்பாதையில் ஏற்படும் அடைப்பு காரணமாகவும் இந்நிலை ஏற்படலாம். (eg: யானைக்கால் நோயின் தாக்கம்) இது ஒரு பக்கமாகவோ இரு விதைகளிலுமோ ஏற்படலாம்.

மருத்துவர் ப்ரியா கமலசிங்கம்
(யாழ்.போதனா மருத்துவமனை,
– சிலாபம் மாவட்டப்
பொது மருத்துவமனை)






## ஏற்பட பொதுவான காரணங்கள்

1. ஆணுறுப்பில் ஏற்படும் காயம்
2. பாலியல் தொற்றுநோய்கள்
3. அதிக எடை தூக்குதல்/ கடின உடற் பயிற்சி செய்யும் விளையாட்டு வீரர்கள்
4. நீண்ட நேரம் சிறுநீர் கழிப்பதை தள்ளிப்போடுவதால் , சிறுநீர்ப்பையில் ஏற்படும் அழுத்தம்
5. மலச்சிக்கல்

## விரைவீக்க நோய் அறிகுறிகள்

பின்வருவன விரை வீக்க நோய் இருப்பதற்கான அறிகுறிகளாக சுட்டிக்காட்டப்படுகின்றன:

- **ஒன்று அல்லது இரு வேதி விரைகளின் வலியற்ற வீக்கம்**
- **வீங்கிய விறைப்பு**
- **வீக்கம்**

முதலில் விந்தணு பையில் நீர் தேங்கி வீக்கம் உண்டாகும்

*** விந்தணுபை நீர் தேங்கி சாதாரண அளவை விட பெரிதாகும்**
*** கடுமையான வலி ஏற்படும்**

## மேற்கொள்ளப்படும் பரிசோதனை

- மருத்துவர் நேரடியாக விதைப்பையை பரிசோதித்தல்
- அல்ட்ரா சவுண்ட் ஸ்கான்


## Varicocele - விந்துக்குழாய்

100 இல் 5 ஆண்களுக்கு ஏற்படும் சாத்தியமுள்ள நிலை.
இது நரம்புகளின் உள்ளிருக்கும் வால்புகள் பழுதாவதால் நரம்பில் வீக்கம் ஏற்படும் விரைநாணில் இரத்த ஓட்டம் பாதிக்கப்பட்டு ஏற்படும் நிலை யாகும்.
இது தீவிரத் தன்மையைப் பொறுத்து 1 தொடக்கம் 5 வகையாக வகைப் படுத்தப்படும்.

## அறிகுறி

இதன் முக்கிய அடையாளங்கள் மற்றும் அறிகுறிகள் யாவை?
விந்துக் குழாய் சிரைச்சுருளில் பொதுவாக காணப்படும் அறிகுறிகள் மற்றும் அடையாளங்கள் பின்வருமாறு:

1. அசௌகரியம்.
2. மந்தமான வலி.
3. விதைப்பையிலிருக்கும் நரம்புகள் விரிவடைந்தோ, அல்லது முறுக்கப்பட்ட நிலையில் இருப்பது.
4. வலியில்லாத விதை முடிச்சு.
5. இடுப்புத் தொடை நரம்பில் ஏற்படும் வீக்கம் அல்லது புடைப்பு.
6. குழந்தையின்மை.
7. குறைவான விந்துகளின் எண்ணிக்கை.
8. அரிதாக அறிகுறிகள் ஏற்படுவதில்லை.




**மேற்கொள்ளப்படும் பரிசோதனை**

1. மருத்துவர் நேரடியாக பரிசோதித்தல்
2. அல்ரா சவுண்ட்ஸ்கான்
3. Valsalva method

## சிகிச்சை

அசௌகரியத்திலிருந்து நிவாரணம் பெற ஜாக் ஸ்ட்ராப் அல்லது ஸ்னக் உள்ளாடைகளை பயன்படுத்துதல்.

வெரிகோ செலெக்டோமி என்பது விந்துக் குழாய் சிரைச்சுருளை சரிசெய்ய பயன்படுத்தப்படும் அறுவை சிகிச்சை ஆகும்.


வெரிகோ செலெ எம்போலி சேஷன் என்பது மாற்று அறுவை சிகிச்சை முறை ஆகும்.

பெர்குட்டினஸ் எம்போலிசேஷன்.

வலியைக் குறைப்பதற்காக வலி நிவாரணிகள் (அசெட்டமினோபன், இபுபுரோஃபென்) மட்டுமே கொடுக்கப்படலாம்.

**சிகிச்சை : Hydrocoleetony**

- வலி தாங்கவியலாதவிடத்து வீக்கம் கூடி இரத்த ஓட்டம் தடைப்படும் வேளையில் அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்படும்.
- துளையிடுதல் முறை விந்தணுப்பையில் இருக்கும் நீர் துளையிட்டு வெளியேற்றப்படும் முறை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொரோனாக் காலப் பதிவுகள்



# தொற்றும் நோய்! முற்றும் கவனம்!!

வேலணையூர் சுரேஷ்

11.
ஓர் இடத்தில் இருத்த லற்று
ஓடித் திரிவோ ராலே தொற்று!
பேர் இடக்குப் பண்ணி நோயை
பெருக்க வைப்பார் கவன மற்று!
சீர்ப் படுத்த நினைப்போர் தம்முள்,
சிந்தித் திங்கே செயற்படவும்;
ஏறெடுத்தும் நோக்கார்! எமக்கு
என்ன என்பார்? இரார் வீட்டில்!

12.
மூடு வாயை மூக்கை என்றால்
மூடா தலைதந்தால் என்ன ஆகும்?
நாடியிற் கவசம் நழுவ அணிந்தால்
நாடியே நோயும் வராமலா போகும்?
கூடித் திரிதல் கூடா தெண்ணு!
கூடா நோயாம்; கவனம் கொள்ளு!
கோடிப் பேர்கள் சொல்லியும் கேளா
கோடரிக் காம்புக ளாலே தொல்லை!

13.
தும்மலிற் பரவும் நஞ்சுக் கிருமி
துப்பர வின்றேல் தொற்றும் கிருமி!
எம்மளவு உயிர்களை உருட்டிப் போட்டும்
எமனாய் இன்னும் நிற்குது பொருமி!
அம்மாடி நாமும் கொண்டாட்டங்கள்
கும்மாள மென்று இருத்தல் தகுமா?
எம் படியேறிக் கொரோனா வரமுன்
எவ்வழி காப்போ, அவ்வழி நிற்போம்!

14.
எதிர் வீட்டில் கொரோனா என்ற
ஏக்கத் தாலே அயலில் சாவு!
புதிர் போட்டுக் கொல்லும் நோயால்,
பூமித் தாய்க்கு தீரா நோவு!
அதிர் வேட்டாக வெடிக்கும் நெஞ்சில்
அனலாக மூச்சுக் கிளம்பி ஐயோ
விதிர் விதிர்த்துப் போனோம் பாரு
வினையை எம்மில் விதைத்த தாரு?

15.
பெரும் எடுப்புப் பந்தா, பதவி,
பகட்டுக் காட்டித் திரிந்த பலரும்,
பெரும் விடுப்பில் வேலை அற்று
புளுங்குகின்றார் வீட்டில் நின்றும்!
அரும் பணிகள் ஆற்றி நாளும்,
அயரா துழைத்த கையும் காலும்,
"இரும்" என்றால் இருக்கு மாப்பா?
இறைவா இந்த நிலையே னப்பா?



# கி.ரா.: நினைவுகள்

**பேராசிரியர் அ.ராமசாமி**
*தமிழ்த்துறை (பணி நிறைவு) மனோன்மணி சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, தமிழ்நாடு.*

முதுபெரும் எழுத்தாளர் கி.ராஜநாராயணனின் (கி.ரா.வின்) நண்பரும் எழுத்தாளருமான பேராசிரியர் அ.ராமசாமி, அவரின் 40 ஆண்டு கால நண்பர். அவரோடு கொண்ட நட்பை 'உதயன் – சஞ்சீவி' வாசகர்களுக்காக நினைவுக் குறிப்புகளாகத் தருகிறார்.



## 25

"பாண்டிச்சேரிக்கு வந்தபிறகு சிறுகதை எழுதிறதே மறந்துட்டுய்யா.. ரொம்பநாள் கழிச்சு ஒரு கதை இந்தியா டுடேயிலெ வருது. படிச்சுட்டு சொல்லுங்கோ" என்றார் கி.ரா. அப்படி வந்த கதையின் பெயர் "காய்ச்சமரம்" இந்தியாடுடே வெளியிட்ட பொங்கல் அல்லது தீபாவளி மலராக இருக்கவேண்டும். 'காய்ச்சமரம் கல்லடிபடும்' என்ற சொலவடையின் முன் சொல்லைத் தலைப்பாக்கி எழுதிய அந்தக் கதை வந்த இந்தியா டுடேயை வாங்கிப் படித்துவிட்டு அவரைச் சந்தித்தேன்.

கிராமத்துப் பெருந்தனக் குடும்பம் ஒன்றின் பாகப்பிரிவினைக்குப் பின், மகன்களிடம் பெற்றோர் படும்பாட்டையும், இனி இவர்களிடம் இருக்கக்கூடாது; எங்கேயாவது போய்த் தற்கொலை செய்துகொள்ளலாம் என்று கிளம்பிய தம்பதிகள், தற்கொலை முடிவைக் கைவிட்டு ஒரு கோயில்வாசலில் பிச்சையெடுத்து வாழ்க்கையை நடத்தியதைக் கண்டுபிடித்த ஊர்க்காரரின் மனவேதனையாக அந்தக் கதையைச் சொல்லியிருந்தார்.

அந்தக் கதை வருவதற்கு முன்னால் சங்கரதாஸ் சுவாமிகள் நிகழ்கலைப்பள்ளி சி.கே.தாமஸ் என்ற மலையாள இயக்குநரை அழைத்து விருந்து இயக்குநராக ஒரு நாடகம் செய்யச்சொன்னார். அவர் சேக்ஸ்பியரில் ஒன்றைச் செய்யலாம் என்று சொன்னார். மேக்பெத், ஜுலியர் சீஸர் என யோசித்துக் கடைசியில் 'கிங் லியர்' தேர்வுபெற்றது. ஏற்கெனவே இருக்கும் மொழிபெயர்ப்புகளைப் பயன்படுத்தலாமா? புத்தாக்கமா ஒத்திகையின்போது பிரதியாக்கத்தையும் பயிற்சிக்கு எடுத்துக் கொள்ளலாமா? என்று யோசித்தபோது, நிகழ்கலைப்பள்ளி இயக்குநர் இந்திரா பார்த்தசாரதி, "ஒத்திகையைத் தொடங்குங்கள்; நாடகப்பிரதியைத் தழுவலாகத் தருகிறேன்" என்று சொல்லிவிட்டார். ஆரம்பக்கட்ட ஒத்திகைகள் வசனங்கள் இல்லாமல் காட்சி அமைப்புகளாக ஆரம்பித்தன.

பள்ளியில் படித்த மாணவர்கள் போதாத நிலையில் நான் லியரின் நண்பரைப் போன்ற பக்கத்து நாட்டு க்ளோஸ்செஸ்டர் பிரபு பாத்திரத்தை ஏற்றிருந்தேன். கண் தெரியாத தந்தையை ஏமாற்றும் பிள்ளைகள் அவருக்குண்டு. இன்னொரு ஆசிரியர் வ. ஆறுமுகம் லியரின் மருமகன்களில் மூத்தவராக நடித்தார். மனுஜோஸ் என்னும் சிறந்த நடிப்பு மாணவன் லியராக நடித்தான். ஆசிரியர்கள், ஆய்வாளர்கள் மட்டுமல்லாமல் நாடகத்துறையில் விருப்பப்பாடம் படிக்க வந்த மாணவிகளும் நடித்தார்கள். 20 க்கும் மேற்பட்ட பாத்திரங்கள்.

ஒருவாரத்துக்குப் பின் இ.பா. கிங் லியரை, "இறுதியாட்டம்" என்னும் தழுவலாகத் தந்தார். சேக்ஸ்பியரின் எல்லாப் பெயர்களும் மாறியிருந்தன. ஒரு மாத ஒத்திகைக்குப் பின் நாடகம் மேடையேற்றம் கண்டது. இந்த கிங் லியர் கதையை அப்படியே மாற்றி பெண் பிள்ளைகளுக்குப் பதிலாக ஆண்கள் என்று போட்டால் அதுதான் கி.ரா.வின் காய்ச்சமரம். இங்கிலாந்து உள்பட்ட ஐரோப்பாவில் பெண்களுக்குச் சொத்துரிமை உண்டு. இந்தியாவில் எப்போதும் ஆண்களுக்கே சொத்துரிமை.

காய்ச்சமரம் கதையை வாசித்துவிட்டு லியரை ஒப்பிட்டுப் பேசிக்கொண்டிருந்தோம். உலகத்தில் பிள்ளைகளைக் கடைசிவரை அடக்கிவைத்திருக்கும் பெற்றோரைப் பழிவாங்கும் பிள்ளைகள் என்ற உரிப்பொருள் பரவலான ஒன்றுதான். எல்லா மொழிகளிலும் இப்படியான ஒரு கதையல்ல; ஓராயிரம் கதைகள் இருக்கும் என்றார் கி.ரா. நேரடி அனுபவங்களைக் கதையாக்கும் கலைஞனை சேக்ஸ்பியர் படித்துத் தழுவல் செய்துவிட்டான் எனச் சொன்னால், சொல்பவனைப்பார்த்துச் சிரித்துக் கொண்டே நகர்ந்துவிடுவான் என்றும் சொன்னார்.

கி.ரா. வைப் பொறுத்தவரைக் கதைகள் காய்த்துத் தொங்கும் பெருமரம் என்பதைப் பாண்டிச்சேரியில் இருந்த ஏழாண்டுகளில் நேரடியாக அறிந்துகொண்டேன். அவர் பேச்சு ஒவ்வொன்றும் கதையாகவே இருக்கும்.

## 26

பாண்டிச்சேரிக்கு கி.ரா. வந்தததால் எழுத்தில் மட்டுமே வாசித்திருந்த பல எழுத்தாளர்களை நேரில் பார்க்கும் வாய்ப்பு கிடைத்தது. தமிழ்நாட்டுக்காரர்கள் என்றில்லாமல் அயல்நாட்டிலிருந்து வந்தவர்களைக் கூட அவரது வீட்டில் பார்த்திருக்கிறேன். அப்படி அறிமுகமான எழுத்தாளர்களில் இளையோரும் உண்டு. நடுத்தர வயதினரும் உண்டு. ஒரு சில முதியவர்களும் உண்டு.நான், பாண்டிச்சேரிக்குப் போனபோது எனது வயது 30. அதனால் இளையோர்களில் ஒருவன் எனக் கருதியிருந்தேன். நாற்பதிலிருந்து அறுபது தாண்டியவர்களை நடுத்தர வயதினராகவும் அறுபதுக்கும் மேல் கடந்தவர்களை முதிய எழுத்தாளராகவும் நினைத்துக்கொள்வேன். அவரைப் பார்க்க வருபவர்களில் நடுத்தரவயது மற்றும் மூத்தோர்கள்தான் அதிகம்.

ஒருநாள் அதுவரை நான் கேள்வியே படாத ஒரு எழுத்தாளரை எனக்கு அறிமுகம் செய்தார் கி.ரா. அது ஒரு இன்பகரமான நினைவு. அந்த எழுத்தாளரின் பெயர் பா.விசாலம். அவரது "மெல்லக்கனவாய்ப் பழங்கதையாய்" என்ற நாவலோடுதான் அறிமுகம் ஆனார். அறிமுகமான இடம் கி.ரா.வின் வீடு. நான் போனபோது கி.ரா.வின் சாய்வு நாற்காலிக்குப் பக்கத்தில் இருந்த சின்ன மேசையில் மெல்லக் கனவாய்ப் பழங்கதைகள் நாவலின் சில பிரதிகள் இருந்தன.அவருக்கு முன்னால் இரண்டு பேர் அமர்ந்திருந்தார்கள்.

அவர்களோடு பேசிக்கொண்டிருந்த கி.ரா. பேச்சை நிறுத்திவிட்டு, அந்த நாவலின் ஒரு பிரதியைக் கையிலெடுத்துக் கொண்டு, 'இவரைத் தெரியுமா? என்று கேட்டார். அந்தக் கேள்வி எனக்கா? அவருக்கா? என்று புரியாமல் இருவரும் தலையை அசைத்தோம். பிறகு அவரே இருவரையும் இருவருக்கும் மாற்றிமாற்றி அறிமுகம் செய்தார். அவர் பெயர் பா.விசாலம்; அறுபது வயதை நெருங்கும்போது தனது முதல் நாவலோடு தமிழ் இலக்கியத்துக்குள் வந்திருக்கிறார். இவர் அவரது கணவர் ராஜு. பாண்டிச்சேரி தொழிற்பேட்டையில் குறுந்தொழில்கூடம் வைத்திருக்கும் தொழில் அதிபர் என்றார்.சுந்தரராமசாமிக்கு நண்பர்கள் என்று சொல்லிவிட்டு ' நாகர்கோயில்காரங்க நாவலைப் படிச்சுப் பாருங்கய்யா?' என்று சொன்னபோது பா.விசாலம் தன்கைப்பட அன்புடன் என்று எழுதிக் கையெழுத்துப் போட்டுக்கொடுத்தார்.

விசாலத்தின் கணவர் ராஜுவைச் சிலதடவை பார்த்ததாகத் தோன்றியது. அவரையும் மதியழகன் தான் அறிமுகம் செய்திருந்தார். நான் பல்கலைக்கழகம் போவதற்கு நிற்கும் குறிஞ்சி நகர் பேருந்து நிறுத்தத்தில் அவரைச் சந்தித்தது ஞாபகம் வந்தது. அதற்குப் பின்பக்கம் இருக்கும் தாகூர் நகரில் அவரது வீடு என்றும் சொல்லியிருந்தார்.புதுவை இலாசுப்பேட்டை பகுதி ஒரு தொகுதி. அத்தொகுதிக்குள் இருக்கும் நகர்களின் பெயர்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொருவிதமாக ஆளுமைகளின் பெயர்களாக ராஜாஜி, தாகூர், லெனின், இந்திரா என இருக்கும். பண்டைத்தமிழ் இலக்கியத்திலிருந்து திணைப்பெயர்கள் கொண்ட குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் நகர்களும் உண்டு. ஔவை, பாரதியார், குமரகுருபர் எனப் புலவர்களின்பெயர்களையும் பார்க்காலம். நகர் என்று இருந்தாலும் அதற்குள் இரண்டிலிருந்து ஐந்து தெருக்களே இருக்க வாய்ப்புண்டு.

விசாலத்தின் மெல்லக்கனவாய்ப் பழங்கதையாய் ஒருவித லட்சியத்தன்மை கொண்ட ஒரு பெண்ணின் கதை. நாகர்கோவில் பின்னணியில் எழுதப்பெற்ற நாவல். ஆனால்வட்டார மொழியைக் கைவிட்டுவிட்டு இடப்பின்னணியில் பாத்திரங்களை உலாவவிட்டிருந்தார். இளமையின் வேகமும் லட்சியமும் கொண்ட பெண்ணின் பிடிவாதமான காதலும், இடதுசாரி இயக்கத்தலைவர்களோடு பழகிய பழக்கமும் நிகழ்வுகளாக விரியும் அந்த நாவலை ஒருவிதத்தில் வரலாற்று நாவல் என்று வகைப்படுத்தலாம்.

நாவலை வாசித்துவிட்டு அவர்களது தாகூர் நகர் வீட்டுக்குப் போய் மாலைநேரக் காபியோடு விரிவாகப் பேசிக்கொண்டிருந்தேன். ஊடகம் இதழில் எழுத நினைத்தேன். ஆனால் அது நாவல் போன்றவற்றைக் கவனத்தில் கொள்ளாத இதழ்.அப்போது அவ்வளவுபிரபலம் இல்லை என்பதால் நான் எழுதி அனுப்பிய விமர்சனம் வரவில்லை. விசாலத்தின் கணவர் ராஜு இலக்கியம், சமூக இயக்கம் என இயங்கும் பலருக்கும் நெருக்கமானவர். கேட்காமலே நன்கொடைகள் வழங்கி ஆதரவு தருவார். மெல்லக்கனவாய்.. நாவலின் லட்சிய இடதுசாரி அவரே என்று தோன்றியது.

*(நினைவுகளும் குறிப்புகளும் தொடரும்)*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அறிந்தும் அறியாமலும்

○ சுழியன்





## வற்றாப்பளையில் நேர்த்தி செய்த அமைச்சர்!

சுகாதார அமைச்சர் பவித்ராதேவி வன்னியாராச்சி சில நாள்களுக்கு முன்னர் தனது குடும்பத்தினர் சகிதம் முல்லைத்தீவு மாவட்டத்துக்குச் சென்றிருந்தார். குடும்பத்தினர் சகிதம் செல்வதால் அவர் ஏதோ சுற்றுலா செல்வதாகவே அவருக்கு நெருக்கமான அதிகாரிகள் கருதினர். எனினும், ஆன்மீகப் பயணம் மேற்கொண்டே அவர் அங்கு சென்றிருந்தார்.

வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்துக்குச் சென்ற சுகாதார அமைச்சர், குடும்பத்தினருடன் விசேட பூஜை வழிபாடுகளில் ஈடுபட்டார் எனத் தெரியவருகின்றது. கொரோனா வைரஸ் தொற்றுக்கு இலக்கான நிலையில் அவசர சிகிச்சைப்பிரிவில் சுகாதார அமைச்சர் சிகிச்சைபெற்றுவந்தார். அப்போது அவர் விரைவில் குணமடைய அருள்புரிய வேண்டும் என அமைச்சருக்கு நெருக்கமான ஒருவர் கண்ணகி அம்மனிடம் நேர்த்திக்கடன் வைத்துள்ளாராம். அதனை நிறைவேற்றும் முகமாகவே ஆன்மீக பயணம் அமைந்தது.

## மொட்டுக்கு பதிலடி

வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணைமீது நாளை (ஜூலை 19 ஆம் திகதி) விவாதம் ஆரம்பமாகி, 20 ஆம் திகதி மாலை வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது. இந்தப் பிரேரணை மண்கவ்வும் என்பது தெரிந்திருந்தாலும் அதன் ஊடாக அரச கூட்டணிக்குள் ஏற்பட்டுள்ள மோதலை சந்திக்கு கொண்டுவர வேண்டும் என்பதும் எதிரணியின் ஓர் திட்டம்.

அரச கூட்டணிக்குள் ஏற்பட்டுள்ள குழப்பநிலை ஓரளவு வெளிச்சத்துக்கு வந்தாலும், மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலத்துடன் இந்தப்பிரேரணையை தோற்கடித்து 20 ஆம் திகதி ஏதேனுமொரு விதத்தில் ஆளுந்தரப்பு ஒற்றுமையை வெளிப்படுத்தும் என்பதே பிந்திக்கிடைத்த தகவல்.

இந்த நிலையில், மொட்டுக் கட்சி உறுப்பினர்கள் மீது கடும் அதிருப்தியில் இருக்கும் அமைச்சர் உதய கம்மன்பில, அவர்களுக்கு சில தத்துவங்கள் மூலம் பதிலடி கொடுத்து வருகின்றார்.

" நிலையில்லா இவ்வுலகில் அமைச்சு பதவி என்பதும் நிரந்தரமில்லை. நான் அமைச்சராக பிறக்கவும் இல்லை. இறந்த பின்னர் அமைச்சுப் பதவியை கொண்டுபோகப் போவதும் இல்லை. நான் செய்த புண்ணியங்கள் மட்டுமே என்னுடன் வரும்." என்பதன் ஊடாக நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு மொட்டுக் கட்சி உறுப்பினர்கள் எதிர்ப்பை வெளியிடாவிட்டால்கூட தனக்கு எவ்வித பிரச்சினையும் இல்லை என்பதை சூறவிழைந்துள்ளார்.

அத்துடன்," நாய்கள் குரைப்பது வழமை. பயணத்தை நிறுத்தி அவைமீது கல்வீச்சு தாக்குதல் நடத்தினால் எனது பயணமே தடைப்படும். எனவே. தொடர்ந்தும் முன்னோக்கிச் செல்ல வேண்டும்." என்ற கருத்தையும் அமைச்சர் வெளியிட்டிருந்தார். அரசியலிலிருந்து கம்மன்பில வெளியேற வேண்டும் என வலியுறுத்தும் மொட்டுக் கட்சி உறுப்பினர்களுக்கான பதிலடியாகவும் இது அமைந்துள்ளது.

" என்னை ஆட்டமிழக்க வைப்பதற்கு முயற்சி எடுக்கப்படுகின்றது. இருந்தாலும் தொடர்ந்தும் ஆடுகின்றேன். எல்லாப் பந்துகளையும் அடித்தாடாமல் இருப்பதே நீண்டதொரு இன்னிங்ஸின் இரகசியம்." என்ற கருத்தின் ஊடாக அரசுக்குள் தனக்கு எதிராக நடைபெறும் சூழ்ச்சித் திட்டத்தை வெளிப்படுத்தினார்.பேசாமல் கம்மன்பில துறவியாகிவிட்டால் இன்னும் நிறையத் தத்துவங்கள் கிடைக்கக்கூடும்.

## திகாவின் திட்டமென்ன?

தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவர் பழனி திகாம்பரத்துக்கும், ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் பாலித ரங்கே பண்டாரவுக்குமிடையில் இரகசிய சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளமை தொடர்பில் மலையக அரசியல் களத்தில் பெரும் பரபரப்பாக பேசப்படுகின்றது.

தனிப்பட்ட தேவைக்காக வெளிநாடு சென்றிருந்த திகாம்பரம், நாடு திரும்பிய நிலையில் முதல்கட்ட அரசியல் நகர்வாக ஐ.தே.கவுடன் பேச்சு நடத்தியுள்ளமை குறித்து பலகோணங்களில் தகவல்கள் வெளியாகி வருகின்றன.

கடந்த ஜனாதிபதி மற்றும் பொதுத்தேர்தல்களின்போது ஐக்கிய மக்கள் சக்தியை ஆதரித்தமைக்கான காரணத்தை பாலிதரங்கே பண்டாரவிடம் எடுத்துரைத்துள்ள திகாம்பரம், தற்போது இடம்பெற்றுவரும் புறக்கணிப்புகள் தொடர்பில் தன் உள்ளக்குமுறல்களை வெளிப்படுத்தியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி ஊடாக 2014 இல் நாடாளுமன்ற அரசியல் பயணத்தை ஆரம்பித்த திகாம்பரம், காலப்போக்கில் மஹிந்தவுடன் சங்கமித்தார். எனினும் 2015 இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின்போது மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவு வழங்கினார். அவ்வாண்டில் நடைபெற்ற பொதுத்தேர்தலில் யானை சின்னத்தில் போட்டியிட்டு வெற்றிபெற்றார். 2018 இல் நடைபெற்ற உள்ளாட்சிமன்றத் தேர்தலில் யானை சின்னத்திலேயே தொழிலாளர் தேசிய சங்கம் போட்டியிட்டது. 30 க்கும் மேற்பட்ட உள்ளாட்சிமன்ற உறுப்பினர்கள் இருக்கின்றனர். எனினும், 2019 இல் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் சஜித்துக்கு ஆதரவு வழங்கிய திகாம்பரம் 2020 இல் நடைபெற்ற பொதுத்தேர்தலிலும் சஜித் அணியிலேயே போட்டியிட்டார்.

ஐ.தே.கவின் யானை சின்னத்தின்கீழ் போட்டியிட்டு வெற்றிபெற்ற தமது கட்சியின் உள்ளாட்சி மன்ற உறுப்பினர்களை பாதுகாத்துக்கொள்வதற்காகவே திகாம்பரம் ஐ.தே.க. பொதுச்செயலாளரை சந்தித்தார் என ஒரு தரப்பினரும், இல்லை... ஐ.தே.கவுடன் கூட்டணி அமைப்பதன் ஓர் அங்கமாகவே இந்தச் சந்திப்பு இடம்பெற்றது என மற்றுமொரு தரப்பினரும் கருத்து வெளியிட்டுவருகின்றனர். விரைவில் ரணிலை சந்திக்கவும் திட்டமிட்டுள்ளாராம் திகா .



## கல்வி அமைச்சராகிறார் தினேஷ்?

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசின் அமைச்சரவை விரைவில் முழுமையாக மறுசீரமைக்கப்படவுள்ளது. இதன்போது சுகாதாரம், பொதுமக்கள் பாதுகாப்பு, கல்வி உள்ளிட்ட அமைச்சுப் பதவிகள் கைமாறவுள்ளன.

அமைச்சர்களான விமல் வீரவன்ச, உதய கம்மன்பில ஆகியோர் வகிக்கும் அமைச்சுகளின் கீழுள்ள விடயதானங்களும் மாற்றியமைக்கப்படவுள்ளன.

பஸில் ராஜபக்ச நிதி அமைச்சராக பதவியேற்றுள்ள நிலையில் நாட்டின் எதிர்கால அபிவிருத்தி மற்றும் பொருளாதார இலக்குகளை விரைவில் அடைவதை இலக்காகக்கொண்டே அமைச்சரவை மறுசீரமைக்கப்படவுள்ளது எனவும் தகவல் வெளியாகியுள்ளது.

அமைச்சரவை மறுசீரமைப்பின்போது சுதந்திரக்கட்சியுடன் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் அந்தக்கட்சிக்கு மேலும் மூன்று அமைச்சு பதவிகள் வழங்கப்படவுள்ளன. கல்வி அமைச்சு தினேஷ் குணவர்த்தனவிடமும் வெளிவிவகார அமைச்சு ஜீ.எல். பீரிஸிடமும் கையளிக்கப்படலாம் எனவும் தெரியவருகின்றது.

## பதவி வேண்டாம்...!



பஸில் ராஜபக்ச நாடாளுமன்றம் வருவதற்காக எம்.பி. பதவியை துறந்தவர்தான் ஜயந்த கெட்டகொட. பஸிலுக்கு மிகவும் நெருக்கமானவரும் கூட. அவர் செய்த தியாகத்துக்கு நன்றிக்கடனாக, இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் தலைவர் பதவி அல்லது வடமேல் மாகாணத்துக்கான ஆளுநர் பதவியை ஏற்குமாறு ஆளுங்கட்சி தரப்பில் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. எனினும், பதவி எதுவும் வேண்டாம் என ஜயந்த கெட்டகொட குறிப்பிட்டுள்ளார்.

ஆளுங்கட்சியின் பிரதிப் பிரதம கொறடா என்ற அடிப்படையில் தமக்கு வழங்கப்பட்டிருந்த வாகனத்தையும் எம்.பி. பதவியை துறந்த கையோடு அவர் மீளக் கையளித்துள்ளார். இந்தக் காலத்தில் இப்படி ஒரு அரசியல்வாதியா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குடித்து ... அடித்து ...

## திருநெல்வேலியில் இன்னும் துலங்காத மர்மம்

தடயத்தை தேடி...

படுத்த...

## போதையால் வந்த வினை

உளவாளி

1

**23.04.2021**

யாழ்ப்பாணம், திருநெல்வேலி கலாசாலை வீதி. சிலநாள்களாக தனிமைப்படுத்தலில் தத்தளித்த அந்தப் பகுதியின் இரவின் அமைதியைக் குலைப்பது போல உச்சஸ்தாயில் தூஷண வார்த்தைகள் கேட்கத் தொடங்கின.

" உங்களையெல்லாம் சும்மா விடமாட்டன்" என்று ஒலித்தது கொஞ்சம் வயதான நபரின் குரல். தூஷண வார்த்தைகளுக்கும் சொந்தக்காரர் அவர்தான். கொஞ்ச நேரமாக தனித்துக் கேட்ட அவரின் குரலுக்கு இப்போது எதிர்க்குரல்களும் கேட்கத் தொடங்கின. இருபுறமும் பரஸ்பரம் தூஷண வார்த்தைகள் தாராளமாக அள்ளி இறைக்கப்பட்டன.

சில நிமிடங்களில்-

"உன்னை இப்ப என்ன செய்யிறனெண்டு பார்.." என்று அந்த வயதான நபரின் குரல் ஆவேசமாக எழுந்தது. தொடர்ந்து சடார், படார் என்று தடிகளால் ஒருவரையொருவர் தாக்கிக்கொள்ளும் சத்தங்கள். ஒரு கட்டத்தில் ஒரேயொரு தடி மட்டும் யாரையோ பலங்கொண்ட மட்டும் தாக்குவது அதன் சத்தத்தில் இருந்து தெளிவாகக் கேட்டது.

திடீரென,

" ஐயோ, என்னைக் காப்பாத்துங்கோ, காப்பாத்துங்கோ" அந்த வயதான குரல் கெஞ்சும் தொனியோடு உதவி கேட்டு எழுந்தது. ஆனாலும் எவரும் அந்தப் பக்கம் எட்டியும் பார்க்கவில்லை. முன்னைய காலப் படிப்பினைகள் அப்படி. அத்தோடு இப்படி நடப்பது அந்த வீட்டில் புதுமையுமல்ல.

சில நிமிடங்களில் அந்தச் சத்தம் நின்றுபோனது. பின்னர் மீண்டும் மயான அமைதி.

அடுத்த நாள் காலை. (24.04.2021)

7 மணியிருக்கும்.

மீண்டும் அதே வீட்டில் இருந்து அவலக்குரல் ஒன்று ஊரை உலுக்கியது. இம்முறை அந்தக் குரல் ஒரு வயதான பெண்ணுடையது.

" என்ர ஐயோ, எங்களை விட்டிட்டு போட்டியளே!"

வீட்டின் முன்பக்கத்தில் அந்தக் குடும்பத்தின் தலைவரான இராசமணி இரட்ணசிங்கம் உயிரை விட்டிருக்க, அவரது சடலத்தின் முன்னால் பெரும் சனக்கூட்டம் மொய்க்கத் தொடங்கியது.

" இரவு வழக்கம் போல குடிச்சுப்போட்டு வந்து சண்டை பிடிச்சவர். எனக்கும் அடிச்சு, மகனுக்கும் அடிச்சவர். அப்ப மகன் அவருக்கு தும்புத்தடியால அடிச்சவன். அதுவும் காலுக்கு கீழ. பிறகு படுத்திட்டு, சாமம் பதினொரு மணி போல, 'நெஞ்சுக்க குத்துது' எண்டு சொன்னார்.

சுடுதண்ணி வைச்சுக் குடுத்தம், பிறகு வேலிக்கால பூந்து வெளியால போய் என்ர சகோதரி வீட்டுக்கு முன்னால நிண்டு அவையைக் கூப்பிட்டார். ஒருத்தரும் வராததால திரும்ப வந்து படுத்திட்டார். விடிய தேத்தண்ணி குடுக்க எழுப்பினால், இப்பிடி அசைவில்லாமல் கிடக்கிறார்" என்று வருவோரிடம் சொல்லிப் புலம்பிக் கொண்டிருந்தார் இரட்ணசிங்கத்தின் மனைவி.

ஆனால் காலுக்கு கீழ் அடி பட்டால் எப்படி ஒருவர் இறப்பார்? கண் புருவத்தில் இருந்த காயம் எப்படி ஏற்பட்டது? இரவுவரை சாதாரணமாக , சுகதேகியாக இருந்தவருக்கு எப்படி நெஞ்சுவலி ஏற்பட்டது? இரவிரவாக சண்டை நடந்து, விடிகாலையில் இரட்ணசிங்கம் சடலமாக மீட்கப்பட்டமையின் மர்மம் என்ன? கொலையா, இயற்கை மரணமா? இப்படி நிறையக் கேள்விகள் இதைப் படிக்கும் வாசகர்களுக்கு மட்டுமல்ல, அன்றைய தினம் இரட்ணசிங்கத்தின் சடலத்தைப் பார்த்த பலருக்கும் எழவே செய்தது.

2

### உயிரிழந்தவர்

இரத்தினம் அல்லது சிங்கம் என்று ஊரவர்களால் அழைக்கப்படுபவர்தான் இராசமணி இரட்ணசிங்கம். 53 வயதானவர். அவரது சொந்த இடமே திருநெல்வேலி, கலாசாலை வீதிதான். 1992 ஆம் ஆண்டு திருமணம் முடித்துள்ளார். 27 வருடமாக மாநகர சுகாதார ஊழியராக பணிபுரிந்து வருகிறார். அவருக்கு 5 பிள்ளைகள். சுகயீனம் காரணமாக மகன் ஒருவர் உயிரிழந்து விட்டார். பெண் பிள்ளை ஒருவர் திருமணம் முடித்து இரத்தினபுரியில் வசித்து வருகிறார். மகனொருவர் திருமணம் முடித்து போய்விட்டார்.

இன்னொரு மகன் மத்திய கிழக்கு நாடொன்றில் பணிபுரிய, 19 வயதான கடைசி மகனும், மனைவியும், இரத்தினமும் மட்டுமே அந்த வீட்டில் வசித்து வந்தனர். இரத்தினம் மதுவுக்கு அடிமையானவர் என்பதால் அடிக்கடி அந்த வீட்டில் சண்டை சச்சரவுக்கு குறையிருப்ப தில்லை. அப்படியான சண்டை தான் கடைசியில் அவரது உயிரையும் பறித்தது.



### எப்போதும் சண்டை!

3

இரத்தினத்தின் திடீர்ச் சாவு பற்றிய மர்மங்களை கண்டுபிடிக்க, அவர் உயிரிழக்க சில நாள்களுக்கு முன்னர் நடந்த சில சம்பவங்களையும் விசாரித்து கண்டுபிடித்தோம்.

திருநெல்வேலி கலாசாலைப் பகுதி கொரோனாவால் முடக்கப்பட்டிருந்தது. இரத்தினத்தின் மனைவி சிறுவர் இல்லமொன்றில் சமையல் பணி செய்பவர். முடக்க காலத்தில் வீட்டுக்கு சென்று வர முடியாதென்பதால், சிறுவர் இல்லத்திலேயே தங்கி நின்று சமைக்குமாறு இல்ல நிர்வாகத்தினர் கோரினர். அதனால் இரத்தினத்தின் மனைவி ஒரு வாரத்துக்கும் மேலாக தங்கி நின்று சமைத்து வந்தார்.

இது இரத்தினத்துக்கு ஏனோ பிடிக்கவில்லை. சம்பவம் நடப்பதற்கு இரு நாள்களுக்கு முன்னர், அந்தச் சிறுவர் இல்லத்துக்கு சென்ற இரத்தினம் மனைவியோடு கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டார். தூஷண வார்த்தைகளால் மனைவியைத் திட்டியவாறே, அடிக்க ஓடினார் இரத்தினம். ஆனால் நல்லவேளையாக இல்ல நிர்வாகிகள் அவரைத் தடுத்து வீட்டுக்கு அனுப்பி வைத்தனர். ஆனால் அதன் பின்னரும் அவர் அடங்கவில்லை. 23.04.2021 அன்று மீண்டும் சிறுவர் இல்லத்துக்கு சென்ற இரத்தினம், மறுபடியும் சண்டையைத் தொடங்கினார். ஆனால் இம்முறை அவர் சச்சரவில் ஈடுபடத்தொடங்கியதுமே இல்ல நிர்வாகத்தினர் " உங்கட மனைவி இண்டைக்கு வீட்டை வந்திடுவா. நீங்க இதில சண்டை பிடிக்காமல் போங்கோ" என்று சமரசப்படுத்தினர்.

" கையில் அஞ்சி சதம் கூட இல்லை. சாப்பாடு வாங்க வேணும். காசு தந்தால தான் போவன்" என்று அடம்பிடித்தார் இரத்தினம்.

உடனேயே நிர்வாகத்தினர் அவர் அங்கிருந்து அகன்றால் போதும் என்ற எண்ணத்தோடு அவரிடம் 100 ரூபாவைக் கொடுக்க,அதுவரை கத்திக் கொண்டிருந்த இரத்தினம் 'கப்சிப்' என்று வந்த வழியே திரும்பினார். அன்று மாலையே வீட்டுக்கு வந்து கொண்டிருந்தார் இரத்தினத்தின் மனைவி. அப்போது வழியில் அவர் பின்னால் ஒரு குரல்.

" உனக்கு வீடு வாசல் இல்லாமல் கண்டறியாத வேலையோ?" என்று தூஷணக் கலப்போடு கத்தியபடி வந்து கொண்டிருந்தார் இரத்தினம் . மனைவிக்கு பயம். சிறுவர் இல்லத்திலேயே அப்படி சண்டை பிடித்த இரத்தினம் இனி வீட்டுக்கு வந்தால் இன்னும் சன்னதம் ஆடக்கூடும். அத்தோடு காலையில் வாங்கிய 100 ரூபாவுக்கும் எதையோ வாங்கிக் குடித்து முழுபோதையில் இருந்தார் இரத்தினம். அந்தப் பயத்தில் வீட்டுக்கு போகாமல் சகோதரி வீட்டில் போய் நிற்பதே பாதுகாப்பு என மனைவி நினைத்து, அங்கே தஞ்சம் புகுந்தார். ஆனால் இரத்தினம் விடுவதாக இல்லை. அங்கும் போய் மனைவியோடு சண்டை. வாய்ச்சண்டையோடு நில்லாமல் மனைவியைப் பிடித்து கழுத்தை நெரிக்கத் தொடங்கினார். அவரிடம் இருந்து விடுபடுவதற்காக மனைவி திமிறினார். அப்போது மனைவியின் முழங்கை இரத்தினத்தின் கண்புருவத்துக்கு சமீபமாக இடித்துவிட ,அதிலிருந்து குருதி கொட்டியது. அதற்கிடையில் மனைவியின் மைத்துனர்(சகோதரியின் கணவர்) " எங்கட வீட்டில வைச்சு ஒரு பொம்பிளையை அடிக்கிறியோ?" என்று நியாயம் கேட்க, அவரோடும் சண்டைக்கு போனார் இரத்தினம். இருவரும் கட்டிப் புரண்டு , அடிபடத் தொடங்கினர். அதற்கிடையில் வீட்டின் முன்புறமாக ஓடிப்போன மனைவி, தன்னுடைய இன்னொரு சகோதரியின் கணவரை ( மைத்துனர்) அழைத்து, உதவி கோரினார் அந்த மைத்துனர் அண்மையில் தான் வெளிநாட்டால் வந்திருந்தார். முடக்க காலத்தில் அவர்தான் இரத்தினம் குடும்பத்தின் செலவுகளைப் பார்த்துக் கொண்டவர். எனவே அவர் சொன்னால் இரத்தினம் அடங்குவார் என மனைவி நம்பினார். அந்த வெளிநாட்டு மைத்துனரும் உடனேயே அங்கே வந்தார். வந்த வேகத்தில்,

"பளார்!"

இரத்தினத்தின் கன்னத்தின் ஒரு அறைவிட்டார். இரத்தினம் நிலைகுலைந்தார் அந்த அடியோடு.

"என்ன எப்ப பார்த்தலும் சண்டை. இஞ்சால நாங்கள் இருக்கிறேலையே, குடிச்சால் ஒழுங்கா இருக்கோணும். இப்ப என்னத்துக்கு சண்டை பிடிக்கிறாய்?" என்று கேட்கவும் செய்தார்.

உடனேயே அடிவாங்கிய வெட்கம்கூட இல்லாமல்,

" எனக்கு 350 ரூபா காசு வேணும்" என்று தடாலடியாகச் சொன்னார் இரத்தினம். " அவ்வளவுதானே, இந்தா கொண்டு போ, ஆனா சண்டை பிடிக்காதை" என்று காசையும் கொடுத்து, அறிவுரை கூறினார் மைத்துனர். காசோடு அவரது சைக்கிளையும் வாங்கிக் கொண்டு அகன்று சென்ற இரத்தினம், பின்னர் இரவுதான் வீட்டுக்கு வந்து சேர்ந்தார் நிறைவெறியோடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொல்லை:
# துக் கொலை
## த்தவர் பிணமாக மீட்பு

### 4 இரவில் நடந்தது என்ன?

வீட்டுக்கு இரத்தினம் வந்தபோது மனைவியும்,மகனும் தூங்கி விட்டனர். ஆனால் அதைப் பொருட்படுத்தாது வந்ததில் இருந்து தூஷண வார்த்தைகளால் திட்டிக் கொண்டே இருந் தார் இரத்தினம். ஒருகட்டத்தில் தான் மட்டுமே தன்பாட்டில் அரற்றிக்கொண்டிருப்பதை உணர்ந்தோ என்னவோ, வீட்டினுள் படுத்திருந்த மனைவி மீது தண்ணீரை ஊற்ற, அவர் திடுக்கிட்டு எழுந்தார். அந்த திகைப்பு மாறமுதலே அவரை சரமாரியாக தாக்கத்தொடங்கினார் இரத் தினம். அந்த அடி தாங்காமல் மகன் படுத்திருந்த அறைக்கு ஓடினார் மனைவி. அங்கும் விடாமல் இரத்தினம் அடிக்கத் துரத்தியபோது, திருப்பி அடிக்கத் தொடங்கினான் மகன். தும்புத்தடியால் மக னிடம் அடிவாங்கிக் கொண்ட இரத்தினம், அதற்கு மேல் தாக்குப்பிடிக்க முடியாமல் அப்படியே வந்து படுத்துவிட்டார். சிறிது நேரம் கழித்து மீண்டும் எழுந்தார்.

"ஐயோ நெஞ்சுக்க குத்துது , சுடுதண்ணி வைச்சுத் தா என்று உரத்த குரலில் கத்த தொடங்கினார். உடனேயே சுடுதண்ணீர் கொடுக்க, அதைக் குடித்து விட்டு வீட்டை விட்டு வெளியேற முற்பட்டார். ஆனால் கேற் பூட்டப்பட்டிருந்தது. எனவே வேலியால் புகுந்து, வெளியேறினார். அப்படியே மனைவியின் சகோதரி வீட்டுக்கு முன்னர் போய் உரத்த குரலில் அவர்களைக் கூப்பிட்டார். ஆனால் அவர்கள் ' இப்போது போனால் பிறகும் சண்டை வரலாம்' என்றெண்ணி பேசாமல் இருந்துவிட்டனர். சிறிதுநேரம் கூப்பிட்டு விட்டு, மீண்டும் வீட்டுக்கே வந்து படுத்துவிட்டார் இரத்தினம். அதன் பின்னர் காலையில் சடலமாகவே மீட்கப்பட்டார்.முன்னரும் இரு தடவைகள் நெஞ்சுக்குத்து வந்து மருத்துவமனையில் இரத்தினத்தை சேர்த்தபோதும், உரிய சிகிச்சை பெறாமலேயே அங்கிருந்து இரத்தினம் வெளியேறியிருந்தாராம்.

*( இது இரத்தினத்தின் மனைவி எமக்கும், அங்குள்ள பலருக்கும் சொன்ன தகவல்)*

### 5 சண்டைக்கு காரணம் பீடியா?

ஆனாலும் தனது நெருங்கிய உறவினர்கள் சிலருக்கு அவர் சொன்ன சில விடயங்கள் முரண்பாடானவை. மாலையில் இரத்தினம், மனைவியின் கழுத்தைப் பிடித்தபோது . அதிலுருந்து விடுபடுவதற்காக முழங்கை இடித்ததால் இரத்தினத்தின் கண்ணருகே காயம் வந்ததாக சொல்லியிருந்தார். ஆனால் கல் லால் குத்தியதாலேயே இரத்தினத்தின் கண்ணின் அருகே காயம் வந்ததாக இரத்தினத்தின் மனைவி சிலரிடம் சொல்லியிருக்கிறார். அத்தோடு கணவர் வைத்த பீடியைக் காணவில்லை என்று மகனோடு இரத்தினம் சண்டை பிடித்தபோதே அவன் அடித்தான் என்றும் அவர்களுக்குச் சொல்லியுள்ளார். ஆனால் தனக்கு அடி விழுந்து அங்கு ஓடும் போதே மகன் காப்பாற்றுவதற்காக இரத்தினத்தை தாக்கினான் என்றே பொதுவாகப் பலருக்கும் கூறியுள்ளார்.

ஏன் இப்படி ஒரே சம்பவத்தை மாற்றி மாற்றி மனைவி சொல்கிறார்? மகனைக் காப்பாற்றும் எண்ணத்திலா? அதைவிட அயலவர்கள் அந்தச் சம்பவம் பற்றி சொல் லும் தகவல்களும் வேறுமாதிரி இருந்தன.

### 6 அடித்தே கொலை!

*நேரில் கண்ட சாட்சி சொன்னவை*

அண்டைக்கு இரவு இரத்தினம் ஒரே தூசணத்தால கத்திக் கொண் டிருந்தார். பிறகு "காப்பாத்துங்கோ, காப்பாத்துங்கோ" எண்டு கத்தினார். நாங்க நினைக்கிறம் நெஞ்சுக்குத்தால தான் அப்பிடிக் கத்தியிருக்கிறார் எண்டு. அதுக்கு பிறகு அவர் சாப்பாடு கேட்ட சத்தமும் கேட்டிச்சு. அதுக்கு மனுசி திருப்பி பேசினவா.

மாறி மாறி ரண்டு பேரும் சண்டை போட்டவை.பிறகு முத்தத்தில் வச்சு சுத்தி சுத்தி மரக்கட்டையால அடிச்ச சத்தமும் கேட்டது. பிறகு மகன் இருக்கிற இடத்துக்கு கத்திக்கொண்டு அடிக்க இரத் தினம் ஓட, திருப்பி கன்னத்திலும், அவன் ஓங்கி ஒரு அடி சத்தமும் பெரிசாக் கேட்டது. ஆள் 'ஐயோ அம்மா' எண்டபடி அப்பிடியே கீழே விழுந்துட்டார். பிறகு எழும்பேலை. விடிய எந்த இடத்தில அவர் செத்துகிடந்தாரோ, அந்த இடத்திலதான் விழுந்தவர்.

### 7 கைது

இந்தச் சம்பவத்தில் பொலிஸார் இரத் தினத்தின் மகன், மைத்துனர்கள் இருவர் என மூவரை கைது செய்திருந் தனர். இதில் மைத்துனர்கள் இருவரும் அன்றுமாலை இரத்தினத்தோடு முரண்பட்டவர்கள் என்ற அடிப்படையி லேயே கைதாகி இருந்தனர். தங்கள் மனைவியின் சகோதரி துன்பப்படு வதை தடுக்க முனைந்ததை தவிர வேறெந்தக் குற்றமும் அவர்களிடம் இல்லை. ஆனால் மகனைப் பற்றி ஊரவர்கள் சொல்லும் தகவல்கள் , இந்தச் சம்பவம் ஒருன் கொலை என் பதையும், அதற்கு மகனே காரணம் எனவும் எண்ண வைக்கின்றன. அதற் குரிய காரணம், எம்மைத் திடுக்கிட வைத்தது.

### 8 போதைக்கு அடிமை

இரத்தினத்தின் கடைசி மகனுக்கு வயது 19 தான்.அவரை ஊரில் 'கஞ்சா' என்று சொன்னால் தான் தெரியும். அந்தளவுக்கு கஞ்சாவுக்கு அடிமை. இடைநடுவிலேயே படிப்பை நிறுத்திவிட்டு, பீடி, சிகரெட் என்று திரிந்தவன், பின்னர் கஞ்சாவுக்கு அடிமையானான். எந்தநேரமும் கஞ்சா மயக்கத் திலேயே இருப்பதால், கஞ்சா என்றே அவரை ஊரார் அழைக்கத் தொடங்கி விட்டனர். கஞ்சாவிலிருந்து மெல்ல மெல்ல ஹெரோய்ன் பாவனைக்கும் அவன் மாறினான். கஞ்சாவுக்கு பணம் குறைவாகத்தான் தேவைப்படும். ஆனால் ஹெரோய்ன் அப்படியல்ல. ஒரு தடவை நுக ரும் ஹெரோய்னின் விலை ஆயிரம் ரூபா. இவனோ நாளொன்றுக்கு 3 தடவைகள் ஹெரோயின் பாவிப்பான். அதனால் நாளொன்றுக்கு 3 ஆயிரம் ரூபா தரும்படி தாயிடம் சண்டை பிடிப்பான். தாய் பணம் கொடுக் காவிட்டால்,வீட்டில் உள்ள பொருள்களைக் கொண்டு சென்று விற்றுவிட்டு, ஹெரோய்ன் வாங்கி விடுவான். வேலை, வெட்டி எதுவுமில்லை. ஹெரோய்ன் அடிப்பது மட்டுமே அவனது முழுநேரத்தொழில்.

இரத்தினம் கூட மாநகரசபையில் சம்பளம் வாங்கச் செல்லும் போது, துணைக்கு சிலரை கூடவே அழைத்துச் செல்வார். தனியே சென்றால் மகன் வந்து ஹெரோய்ன் வாங்குவதற்காக சம்பளப்பணத்தை வழியிலேயே பறித்து விடுவான். போதாக்குறைக்கு வீட்டிலும் அடிக்கடி சண்டை பிடிப்பது, பொருள்களை போட்டு உடைப்பது என்று மகனின் அட் டகாசம் எல்லை மீற, இரத்தினத்தின் மனைவி( கஞ்சாவின் தாய்) பொலிஸுக்கு முறைப்பாடு செய்துள்ளார். தாயின் முறைப்பாட்டால் மூன்று முறை 'கஞ்சாவை ' பொலிஸார் கைதுசெய்தபோதும், ஒரு வாரத்திலேயே விடுதலையாகிவிடுவான்.

ஒருமுறை சிறியதாயாரின் சைக்கிளை இரவல் வாங்கியவன், அதை விற்று ஹெரோய்ன் வாங்கிய சம்பவ மும் நடந்திருக்கிறது. இரத்தினத்தின் மனைவி தான் உழைக்கும் பணத்தை மகனுக்கு கொடுப்பதுதான் குடும்பத்தில் பிரச்சினைக்கு மூலகாரணம்.

"அவனுக்கு பவுடர் ( ஹெரோய்ன்) வாங்க மூவாயிரம் குடுக்கிறாய். எனக்கு குடிக்க முந்நூறு ரூபா தந்தால் குறைஞ்சோ போயிடுவாய்?" என்று தான் இரத்தினம் சண்டையைத் தொடங்குவார். இரத்தி னத்தின் மகன் மட்டுமல்ல, அந்தப் பகுதியைச் சேர்ந்த பல இளைஞர்கள் போதைக்கு அடிமையாகும் அபாயமான சூழல் அங்குண்டு. அதற்கு காரணம் ஹெரோய்ன் விற்பனை செய்யும் மூவர் அந்தப் பகுதியில் இருப்பதுதான். அவர்கள் தான் அங்குள்ள இளைஞர்களுக்கு ஹெரோய்னை 'சப்ளை' செய்கின்றனர். ஆனால் அவர்களை கைது செய்யவோ, போதைப்பொருள் வியாபாரத்தை தடுக்கவோ பொலிஸார் எவ்வித நடவடிக்கையும் எடுப்பதில்லை என்று அங்கலாய்க்கின்றனர் இந்தப்பகுதி மக்கள்.



### 9 பொலிஸ் தரப்பு

"உயிரிழந்தவர் மாரடைப்பு ஏற்பட்டே மரணமடைந்துள்ளார். அவருக்கு அடித்தமையே மாரடைப்பு ஏற்படக் காரணம் என பிரேத பரிசோதனை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதனடிப்படையில் சாட்சிகள்,வாக்குமூலங்கள் அடிப்படை யில் மகன் மற்றும் உறவினர் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அடிப்பதற்குப் பயன்படுத்தியதாகக் கருதப்படும் சான்றுப் பொருள்களும் மீட்கப்பட்டுள்ளன. சந்தேக நபர் (இரத்தினத்தின் மகன்) ஹெரோய்ன் பாவனை உள்ளவர். அவர் ஹெரோய்ன் பாவித்த நிலையில் முன்னர் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டிருந்தார். பொலிஸார் அவரை தம்மிஷ்டப்படி விடுவிக்கவில்லை. பொலிஸார் சட்டரீதியாகவே செயற் பட முடியும். நினைத்தது போல் தடுக்கவோ போதைப்பொருள் பாவனையாளர்களுக்கான புனர்வாழ்வு முகாமுக்கு அனுப்புவதோ நீதிமன்றத்தினூடாகவே செய்ய முடியும். நீதிமன்ற உத்தரவுப்படியே அவர் முன்னர் விடுவிக்கப்பட்டிருந்தார் " என்று சொல்கிறது பொலிஸ்

#### சந்தேகம் 1

இரத்தினத்தின் மனைவி இந்தச் சம்பவம் தொடர்பில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருவித மான தகவல்களைக் கூறுகிறார். மாலையில் தன் கழுத்தை நெரிக்கும்போது இரத்தினத் தின் கண்ணருகே முழங்கையால் இடித்ததாக சிலருக்கும், கல்லால் குத்தியதாக வேறு சிலருக்கும் மாறுபட்டு சொல்லியுள்ளார். அதேபோன்று தனக்கு தண்ணீர் ஊற்றி இரத்தி னம் அடிக்கும் போதே, மகன் இருக்கும் அறைக்கு தான் ஓடிச் சென்றதாகவும் , அதன் பின்னரே மகன் இரத்தினத்துக்கு அடித்தான் எனவும் பலரிடம் கூறினார். ஆனால் அவரே வேறு சிலருக்கு, "அவர் வைச்ச பீடியை மகன் எடுத்திட்டான் எண்டு அவனோட சண்டைக்கு போனவர் என்று அந்தச் சம்பவத்தை வேறுவிதமாகச் சொல்லியுள்ளார். இப்படி ஒருவரே மாறுபாடான தகவலைச் சொல்வது ஏன்?

#### சந்தேகம் 2

மாலையில் சகோதரி வீட்டில் சண்டை நடக்கும் போதே இரத்தினத்துக்கு காயம் ஏற்பட்டது. ஆனால் இரத்தினத்தின் வீட்டின் கேற் , வீட்டின் முன்பகுதி என்பவற்றில் இரத்தம் சிந்திய நிலை யில் இருந்ததை பலரும் அவதானித்தனர். அந் தக் குருதிக் கறை வந்தது எப்படி?

#### சந்தேகம் 3

மகன் அடித்தபின்னரே இரத்தினத்துக்கு நெஞ்சுவலிவந்ததாகவும், சுடுதண்ணீர் குடித்துவிட்டு வேலிக்கால் புகுந்து சென்றுவிட்டு மீண்டும் வந்து படுத்துவிட்டார் எனவும் மனைவி கூறுகின்றார். ஆனால் சம்ப வத்தை நேரில் கண்ட சாட்சியோ, அடி விழுந்தவுடன் அப்படியே கத்திக் கொண்டு இரத்தினம் சுருண்டு விழுந்தார் எனவும், அதே இடத்திலேயே சட லம் இருந்தது எனவும் சொல்கிறார். அப்படியானால் அடி விழுந்த பின்னர் இரத்தினம் வெளியே சென்று வந்தாரெனச் சொன்னதெல்லாம் பொய்யா?

உயிரிழந்தவரும் மதுவுக்கு அடிமையானவர். சந்தேக நபரான மகன் ஹெரோய்னுக்கு அடிமையானவர். இரண்டு பக்கத்தா லும் எப்போதும் கண்ணீர் மட்டும் தான் மிச்சமாயிருந்தது இரத்தினத்தின் மனைவிக்கு.அவரைப் போல பலர் அந்தப் பகுதியில் இன்னல்படுகின்றனர். காரணம்,போதைதான். குறித்த பகுதியில் பல இளைஞர்கள் போதை ஊசிக்கு அடிமையானவர்களாக உள்ளனர். இவர்களால் பல குடும்பங்களில் நிம்மதி பறிபோய்விட்டது. அத்தோடு குடும்ப வன்முறையும் பொருளாதார நெருக் கடியும் பெருகிவிட்டது. இந்தப்பகுதியில் உள்ள போதைப்பொருள் வியாபாரிகள் தாங்களும் பெண் பிள்ளைகளை வைத்தி ருக்கிறோம் என்று நினைக்காமல் வியாபாரத்தில் ஈடுபடுகின்றனர். ஓட்டோ, புதிய மோட்டார் சைக்கிள் என்று அவர்கள் வசதியாகவே வாழ்கின்றனர்.

[illegible] போதைப்பொருள் [illegible]த்துள்ளது. இந்த போதைப்பொருள் பாவனையாளர்களால் பெண்பிள் [illegible] உள்ளனர் "போதைப்பொருள் பாவனையாளர்களையும் விற்பனையாளர்களையும் கைது செய்து ஆயுள் முழுவதும் சிறையில் அடைத்தால் தான் மற்றவர்கள் நிம்மதியாக வாழ முடியும். அதற்கு அரசாங்கம் நட வடிக்கை எடுக்க வேண்டும் "என்று தங்கள் மன ஆதங்கத்தை வெளிப்படுத்துகின்றனர் கிராமவாசிகள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# உயிர் உரம் மட்டும் வேளாண்மைக்கு போதுமா?

○ வடகோவை வரதராஜன்

நவீன விவசாயச் செய்முறை , விளைவித்தல் என்ற சொல்லுக்கு அப்பால் 'உற்பத்தி' என்ற பதத்திலேயே வந்து நிற்கிறது. உற்பத்தியானது எப்போதும் நுகர்வு கலாசாரத்துக்காக சந்தையை நோக்கிச் செல்லும் . அல்லது, உற்பத்தியானது சந்தையின் ஊடாக நுகர்ச்சியை நோக்கிச் செல்லும்.

பண்டைய விவசாயத்தில் உணவுப் பொருள்கள் விளைவிக்கப்பட்டன. 'உற்பத்தி' செய்யப்படவில்லை. விளைவிக்கப்பட்ட உணவுப் பொருள்கள் அந்தந்தக் குடும்பங்களாலும், அவர்களின் கால்நடை மற்றும் வளர்ப்புப் பிராணிகளாலும் உண்ணப்பட்டு, அவற்றின் கழிவுப் பொருள்கள் அந்தச் சூழலிலேயே சேர்க்கப்பட்டன. இந்த நடைமுறையாலேயே காடுகளின் கனிப்பொருள் வட்டம் சீர்குலையாமல் அவை எப்போதும் செழிப்பாகவே காணப்பட்டன. எப்போது எமது விளைபொருள்கள் சந்தையை நோக்கிச் செல்லத்தொடங்கினவோ, அன்று தொடக்கம் எமது மண்ணின் கனிப்பொருள் வட்டம் சீர்குலையத் தொடங்கியது. மண்ணில் கனிப்பொருள் பற்றாக்குறை ஏற்படத் தொடங்கியது. ஒரு ஏக்கர் தென்னந்தோட்டத்தில் 64 தென்னை மரங்கள் இருக்கின்றன என வைத்துக்கொள்வோம்.அந்த 64 தென்னை மரங்களில் இருந்தும்,

- ஓலை
- பாளை
- பொச்சு
- சிரட்டை
- பருப்பு( தேங்காயின் உள்ளுடல்)
- இளநீர்

ஆகியவற்றின் மூலம்

| | |
|---|---|
| 46 கிலோகிராம் | நைதரசன் (Nitrogen) |
| 8.4 கிலோகிராம் | பொஸ்பரஸ் (Phosphorus) |
| 52.8 கிலோகிராம் | பொட்டாசியம் (Potassium) |
| 13.2 கிலோகிராம் | மக்னீசியம் |

ஆகிய கனியுப்புக்கள் அந்த ஒரு ஏக்கர் தென்னம் தோப்பில் இருந்து ஒரு வருடத்தில் அகற்றப்படுகின்றன. இவை முறையே,

| | |
|---|---|
| 100 கிலோகிராம் | யூரியா |
| 30.5 கிலோகிராம் | சுப்பர் பொஸ்பேட் |
| 88 கிலோகிராம் | மியூரியேட் ஒப் பொட்டாஸ் |
| 55 கிலோகிராம் | டொலமைட் |

என்பவற்றுக்குச் சமனாகும். இவ்வாறு அகற்றப்பட்ட கனியுப்புகள் மீண்டும் அந்தத் தென்னந்தோப்பில் மீள்சுழற்சியாகச் சேர்க்கப்படுவதில்லை.

அவை கொழும்புச் சந்தையை நோக்கி கொண்டு செல்லப்பட்டு வேறு நாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன. இவ்வாறு விளைபொருள்கள் தொடர்ந்து அந்த தென்னந்தோப்பிலிருந்து அகற்றப்பட்டு வெளிநாட்டுச் சந்தைக்கு ஏற்றுமதியானால்,அந்தத் தோப்பில் கனிப்பொருள் பற்றாக்குறை ஏற்பட்டு அங்குள்ள மண்ணின் வளம் குன்றுகின்றது.

**இயற்கை உரங்கள் இந்தக் கனிப்பொருள் வளத்தை ஈடுசெய்யுமா?**

இந்தத் தென்னந்தோப்புக்கு செயற்கைப் பசளை எதுவும் போடாமல் தனியே மாட்டெருவை மாத்திரம் இடுகின்றோம் என வைத்துக்கொள்வோம்.100 கிலோகிராம் மாட்டெருவில் உள்ள கனியுப்புக்கள் வருமாறு,


| | |
|---|---|
| 1.22 கிலோகிராம் | நைதரசன் |
| 0.62 கிலோகிராம் | பொஸ்பரஸ் |
| 1.2 கிலோகிராம் | பொட்டாசியம் |

30 கிலோகிராம் மாட்டெருவை ஒரு தென்னை மரத்துக்கு போடும்போது அது மரத்துக்குத் தேவையான முழு அளவிலான நைதரசனை வழங்குகின்றது. ஆனால் மரத்துக்குத் தேவையான முழு அளவிலான பொஸ்பரஸ், பொட்டாசியம் என்பவற்றை வழங்குவதில்லை. இதை ஈடுசெய்ய 500 கிராம் சுபேஸ் பொஸ்பேட், 300 கிராம் மியூரியேட் ஒப் பொட்டாஸ் என்பவற்றை இட்டாலேயே மரத்துக்குத் தேவையான முழு போசணைப் பெறுமானமும் கிடைக்கும்.

**உயிர் உரங்கள் ( Bio fertilizer) மரத்துக்கு தேவையான முழு போசணைப் பெறுமானத்தையும் வழங்குமா?**

காற்றில் உள்ள நைதரசனை கிரகித்து பயிர்களுக்கு வழங்குகின்ற செயன்முறையையே உயிர் உரங்கள் செய்கின்றன.

1. ரைசோபியம் (Rhizobium): இது அவரைக் குடும்பத் தாவரங்களின் வேர்முடிச்சுக்களில் இயற்கையாக காணப்பட்டு காற்றில் உள்ள நைதரசனை கிரகித்து பயிர்களுக்கு வழங்குகின்றது.
2. அசட்டோபாக்ட்டர் ( Azotobacter) இதை ஒருவித்திலை தாவரங்களின் விதைகளுடன் கலந்து விதைக்கும்போது ஒரு வித்திலை தாவர வேர்களில் தங்கி இருந்து காற்றில் உள்ள நைதரசனை கிரகித்து பயிர்களுக்கு வழங்கும். கரும்புச் செய்கையில் நடுகைக்கு முன் கரும்பு விதைத்துண்டங்கள் அசட்டோபாக்ட்டர் கலவையில் தோய்த்து நடப்படுகின்றன.




3. அசோஸ்பைரில்லம் ( Azospirillum ) இதை தானியப்பயிர் விதைகளுடனும், மரக்கறிப்பயிர் விதைகளுடனும் கலந்து விதைக்கும்போது அந்தப் பயிர்களின் வேர்களில் தங்கி இருந்து காற்றில் உள்ள நைதரசனை கிரகித்து பயிர்களுக்கு வழங்குகிறது.
4. நீலப்பச்சைப்பாசி ( Blue green alge ) : அல்கா வகையைச் சேர்ந்த இந்தத் தாவரம் நெல் வயல்களில் காற்றில் உள்ள நைதரசனை கிரகித்து பயிர்களுக்கு வழங்குகின்றது.
5. அசோலா (Azolla ) : பன்னம் வகைத் தாவரமான இதுவும் காற்றில் இருந்து நைதரசனை கிரகித்து



பயிர்களுக்கு வழங்குகின்றது. தற்போது கால்நடைத் தீவனமாகவும் இது பெருமளவில் பயன்படுத்தப்படுகின்றது.

6. பொஸ்போபக்றிரியா (Pseudomonas putida ) பக்றிரியா வகையை சேர்ந்த இந்த உயிர் உரம் மண்ணில் காணப்படும் கரைய முடியாத பொசுபேற்றுக்களை கரையக்கூடிய பொஸ்பரஸ் ஆக மாற்றி பயிர்களுக்கு வழங்குகின்றது.மண்ணில் பொசுபேற்றுக்கள் காணப்படாவிட்டால் இந்த பக்றீரியாக்களால் எவ்வித பயனும் இல்லை. அதாவது இவை காற்றிலோ வேறு இடத்திலோ இருந்து பொஸ்பரஸை பெற்று மண்ணுக்கு வழங்குவதில்லை. மண்ணில் பொசுபேற்று இருந்தாலே இது செயற்பட்டு பொஸ்பரஸை பயிர்களுக்கு வழங்கும்.
7. றைற்கோடெர்மா விரிடி (Trichoderma viride இதை வெங்காயம், மிளகாய், கத்தரி, தக்காளி ஆகிய பயிர்களின் விதைகளுடன், விதை நேர்த்தி செய்து பயிரிடும்போது இது நாற்று அழுகல் நோயை கட்டுப்படுத்தும்.

ஆக மொத்தத்தில் உயிர் உரங்களால் பயிர்களின் நைதரசன் தேவையை மட்டுமே பூர்த்திசெய்ய முடியும். பொசுபரசு, பொட்டாசியம் போன்றவற்றின் தேவையைப் பூர்த்தி செய்ய முடியாது.

தற்போதுள்ள வேளாண் செயன்முறையில் அளவுக்கு அதிகமான நைதரசன் உரப் பாவனையான மிகை யூரியா, மிகை அமோனியம் சல்பேற்று இடுதல் என்பவையே உணவையும் நீரையும் நஞ்சாக்குகின்றன. எனவே யூரியா, அமோனியம் சல்பேற்று ஆகிய நைதரச செயற்கைப் பசளைகள் பாவித்தலை நிறுத்தி அல்லது குறைத்து உயிர் உரங்கள் மூலம் பயிரின் நைதரசன் தேவையை நிறைவுசெய்துகொண்டு,மற்றைய மூலகங்கள் உள்ள செயற்கைப் பசளைகளான மியூரியேட் ஒப் பொட்டாஸ், சூப்பர் பொஸ்பேற் என்பவற்றை சிபாரிசுக்கேற்ப பயன்படுத்துவதே, நஞ்சற்ற வெற்றிகரமான வேளாண்மைக்கு வழிவகுக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளையராஜாவும் இசைக்கருவிகளும்:



நூலின் அட்டைப்படத்தை அதை வரைந்த ஓவியர் கே.பரந்தாமன், இளையராஜாவிடம் கையளித்த போது...

## காதுக்குரிய இசை இரசனையை காகிதத்தில் எழுதித்தந்த பிரயத்தனம்

இ.இராஜேஸ்கண்ணன்

இசை, இசைக்கும் கலைஞன் , இசை வாத்தியங்கள், இசைக்கான மெட்டுகள் என்பவையெல்லாம் மக்கள் வாழ்வு நெறியின் வெளிப்பேறுகள் என்பதால், இசை பற்றிய தேடல் என்பது ஒரு வகையில் வாழ்வு நெறி பற்றிய தேடலே. அதுவே பண்பாடு பற்றிய தேடலுமாகின்றது. இசையையும் பண்பாட்டையும் இணைத்துப் பேசும் போது, சமகால உலகின் பண்பாட்டு உலகமயமாக்கல் சூழலில் இசைக்கான பிராந்தியத் தனித்துவங்களும் அடையாளங்களும் பின்தள்ளப்பட்டு, ஏனைய கலைகளைப் போலவே இசையையும் உலகளாவிய பொதுப் பண்பாட்டம்சமாக ஆக்கிக்கொள்ளவே முனைகின்றனர். தேசங்கள் கடந்த பண்பாட்டுப் பரிமாற்றம் எனும் சுலோகத்தின் கீழ் இசையின் இனத்துவப் பண்பினை(ethno music) விட, உலகப் பொதுவெளிக்கான இசை எனும் கருத்தே முக்கியம் பெற்றுள்ளது.

இது ஐரோப்பிய இசை, அமெரிக்க இசை, ஆசிய இசை, ஆபிரிக்க இசை என்று அடையாளப்படுத்தும் மரபை செயலிழக்கச்செய்து, ஊடகங்களின் வழியே சில நாடுகளின் இசையை உலகப் வெகுசனப் பொதுமைக்கு அறிமுகப்படுத்தும் ஒரு தயாரிப்புத் தொழிலாக (music industry) மாற்றியுள்ளது.

இதனால் வெகுசனத் தளத்துக்கான இசையில் கூட அமெரிக்க மயமாக்கம், ஐரோப்பிய மயமாக்கம் எனும் நிலை ஏற்பட்டுள்ளது. ஜேர்மனி, பிரான்ஸ், நெதர்லாந்து, அமெரிக்கா முதலான நாடுகளின் இசை வெகுசனப் பொதுமைக்கான இசையின் தயாரிப்புகளாக பிரபலப்படுத்தப் பட்டுள்ளன. இந்த பிரபலத்தை ஆசியப் பிராந்திய இசை பெற்று ஏன் இசையில் ஓர் ஆசிய மயமாக்கம் நிகழக்கூடாது? சீன கே பொப், ஜப்பானிய ஒக்கினாவா, கராத்தே , யோகா பயிற்சி என்று பல்வேறு பண்பாட்டு அம்சங்கள் உலக வெகுசனப் பொதுமைக்கு ஆசியமயமாக்கத்தின் வழியாக கிடைத்துள்ளன. ஆசியப் பிராந்தியத்தின் இந்திய இசை அடையாளத்தை அத்தகையதொரு உலக வெகுசனப் பொதுமைக்குக் கொண்டுபோவதற்கு இளையராஜாவின் இசை காரணமாகியுள்ளது. தேசங்கடத்தலை மேற்கிலிருந்து கிழக்கு நோக்கியே பார்த்துவந்த மரபை, இசையில் இளையராஜா கிழக்கிலிருந்து மேற்குக்கு சாத்தியமாக்கினார். அத்தகைய பேராற்றல் மிக்க இசைக் கலைஞன் பற்றி "இளையராஜாவும் இசைக்கருவிகளும்" எனும் நூலை ஜீவநதி தனது 191 ஆவது வெளியீடாக கொணர்ந்துள்ளது.

புல்லாங்குழல், வயலின், வீணை, கிற்றார், நாதஸ்வரம், மிருதங்கம், மேளதாளம், ட்ரம்ஸ், தபேலா, ஹார்மோனியம் முதலான இசைக்கருவிகள் பாடல்களுக்கான இளையராஜாவின் இசையமைப்பில் எவ்வாறு கையாளப்பட்டன என்பது பற்றி முறையே இ.சு.முரளிதரன், ஜெயபாரதி






கௌசிகன், வெற்றி துஷ்யந்தன், த.ஜெயசீலன், யாத்ரிகன், த.பார்த்திபன், கானா பிரபா, மா. செல்வதாஸ், ந.குகபரன், புலோலியூர் வேல் நந்தகுமார் ஆகியோர் எழுதிய பத்து கட்டுரைகளின் தொகுப்பாக இ.சு.முரளிதரனை தொகுப்பாசிரியராகக் கொண்டு இந்நூல் வந்துள்ளது. பரணீதரனின் வெளியீட்டு முயற்சிகளில் இதுவும் ஓர் அடையாளம்.

இந்நூலைக் கண்டவுடன் படிக்க நாட்டம் கொள்ள வைப்பது தமிழ்நாடு சேலத்தைச் சேர்ந்த மு.பரந்தாமனின் கணினி வடிவமைப்பின் வழியான கொலாஜ் தன்மை பொருந்திய அட்டைப்படமே. இளையராஜாவின் முகவுருவை இசைக்கருவிகளால் கொலாஜ் செய்து வடிவமைக்கப்பட்ட அட்டைப்படம்,ஓர் இசையமைப்பாளன் பயன்படுத்தும் வாத்தியங்களின் சங்கமமாக இளையராஜாவுக்கு உருவம் கொடுக்கிறது. நூலின் உள்ளடக்கத்தை பிரதிபலிக்கும் அந்த ஓவியம், இளையராஜாவே நேரடியாக பார்த்து மகிழ்ந்தது என்று அறியக்கிடக்கிறது.இந்த நூலின் கட்டுரையாசிரியர்களை இருவகைப்படுத்தலாம்.

ஜெயபாரதி கௌசிகன், த.பார்த்திபன் ஆகிய இருவரும் வாண்மைரீதியாக இசைத்துறை சார்ந்தவர்கள். ஏனையவர்கள் இசையை வாண்மைத் துறையாக கொண்டவர்களல்லர். இதனால் வாண்மைரீதியான புலமைத்துவத்துடன் எழுதப்பட்ட கட்டுரைகளும், ஈடுபாட்டார்வத்துடனான இரசனை நோக்கிலான கட்டுரைகளும் கலந்த நூலாக இது அமைந்துள்ளது. இந்த வகைமையைக் கருத்தில்கொண்டுதான் இவர்களது கட்டுரைகள் தொடர்பில் கருத்தாடமுடியும். முதலாவது கட்டுரை புல்லாங்குழல் பற்றியது. இறுதிக் கட்டுரை ஹார்மோனியம் பற்றியது. இடையில் எத்தனை இசைக்கருவிகள் வந்து போனாலும் அவை இரண்டின் எல்லையினுள்ளும்தான் என்று சிந்திக்கத் தூண்டுகிறது! இளையராஜா சிறுவனாக இருந்தபோது அவரது கிராமத்தில் வீடுகள் வேய்வதற்காக ஊரவர்களால் கொண்டுவரப்படும் மூங்கில்களில் கத்தை எனப்படும் சிறிய மூங்கில்களை எடுப்பதற்காக வீடுவேயும் வேலைக்குச் சென்றிருக்கிறார். அவற்றை கொண்டுவந்து துளையிட்டு புல்லாங்குழலாக்கி இசைத்திருக்கிறார். அவர் இசைத்த முதல் வாத்தியம் அதுவானது. அண்ணன் பாவலர் வரதராஜன் வைத்திருந்த பொன்னையா ஆசாரியார் செய்துகொடுத்த ஹார்மோனியத்தை அண்ணனுக்குத் தெரியாமல் வாசித்ததற்காக அடிவாங்கியிருக்கிறார். இந்தத் தகவல்களின் பிரதிபலிப்பாகத்தான் முதலும் முடிவுமான அந்த இரு கட்டுரைகளை காணமுடிகிறது.

சிறுபராயம் முதல் இசையை நாடிநின்ற இளையராஜா இசை ஞானியானதன் பின்னாலுள்ள உழைப்பின் உன்னதத்தைப் பேசிக் கொண்டே கிற்றார் பற்றி எழுதுகிறார் த.ஜெயசீலன். 45 வருட கால சினிமா இசையில் கோலோச்சிவரும் இளையராஜாவின் சிறப்புக்களைப் பேசும் இந்தக் கட்டுரையே இந்தத் தொகுப்பின் நீண்ட கட்டுரை. இளையராஜாவின் சினிமா இசையில் லீட் கிற்றார், ப்பேஸ் கிற்றார் என்பவற்றின் பிரயோகம் தொடர்பில் பல்வேறு தகவல்களைக் குறிப்பிடுகின்றார். "மிகப் பெரிய இசைஞானத்தோடும், அயராத அசுர பயிற்சியோடும், பசியைக்கூட மறந்த முயற்சியோடும், பழமையையும் புதுமையையும் இரவு பகலாக கற்றறிந்த பலத்தோடும், இன்னோரன்ன புதுத்தொரிவுகள் பரிசோதனைகள் செய்யவல்ல அசாத்திய துணிவோடும், அதற்கு ஏற்கனவே அச் சூழலில் காணப்பட்ட பீடங்களின் தடைகளற்ற சூழலினாலும்" என்று இளையராஜாவின் வளர்ச்சிப்போக்கு குறித்து பல கருத்துக்களை ஜெயசீலன் முன்வைக்கின்றார். இந்தக் கட்டுரை தொகுப்பின் முதலாவது கட்டுரையாக வந்திருக்குமாயின் இளையராஜா பற்றிய அடிப்படையான தகவல்களை நூலின் தொடக்கத்திலேயே அறிமுகமாக்கியிருக்கும்.


இந்த நூலிலுள்ள கட்டுரைகள் சினிமா இசையில் இளையராஜா பயன்படுத்திய இசைக்கருவிகள், அவற்றை வாசித்த இசைக் கலைஞர்கள், அந்த இசைக் கருவிகள் பாடல்களில் வெளிப்படும் விதம், அவை தரும் உணர்வுகள், படத்தில் வரும் காட்சிப்படுத்தலுக்கும் இசைக்கருவிக்குமான தொடர்பு முதலான விடயங்களை பாடல்களையும், அவை வந்த படங்களையும் எடுத்துக்காட்டி விளக்குகின்றன. சினிமா எனும் ஊடகத்தின் பல்லூடக சேர்க்கைத் தன்மையை (hybrid) பின்புலமாகக்கொண்டே இளையராஜாவின் இசையின் சிறப்புக்கள் இந்தக் கட்டுரைகளில் இரசிக்கப்படுகின்றன. "இளையராஜாவும் புல்லாங்குழலும்" எனும் கட்டுரையின் முடிவில் இ.சு.முரளிதரன் "மேற்கூறிய படங்களை பார்த்தவர்களால் வேய்ங்குழலிசை நிகழ்த்திய மாயவித்தையினை அவ்வளவு சீக்கிரம் மறந்துவிட முடியா தென்றே நம்புகிறேன்" என்று கூறுவது இதனையே குறிக்கின்றது. அதாவது, சினிமாவில் வரும் படமாக்கப்பட்ட காட்சி களை மனதில் இருத்திக்கொண்டுதான் பாடலில் இசையினதும் இசைக்கருவிகளதும் பிரயோகத்தை உணர்வுக்கு விருந்தாக்கிக்கொள்ள முடியும் என்பதையே இது கருதுகின்றது. இசைக் கருவிகள் தொடர்பான இரசனை குறிப்புகளாக இதிலுள்ள கட்டுரைகள் பலவும் அமைந்து போனமைக்கு அதுவே பிரதான காரணமாகவும் உள்ளது. இந்த இடத்தில் தான் ஜெயபாரதி, பார்த்திபன் போன்றவர்களின் வாண்மைத்துவப் புலமையின் தேவையை வேறுபடுத்தி உணர முடிகின்றது. பாடல் ஒன்றின் தயாரிப்பில் இளையராஜாவின் வாத்தியத்தேர்வின் சிறப்புக் குறித்து கட்டுரையாசிரியர்கள் எல்லோரும் சிலாகிக்கின்றனர். ஆயினும், அவை இசைதரும் மனத்திருப்தி, உள்ளக்கிளர்ச்சி சம்பந்தமான உணர்தல் நிலைப்பட்டதே. ஆனால், வயலின், மிருதங்கம் தொடர்பில் எழுதிய கட்டுரைகளில் நுணுக்கமான பார்வை வெளிப்படுகிறது. குறிப்பாக இராகத்துக்கேற்ற ஸ்வரத் தொகுதிகள் பாடல்களில் எப்படிக் கட்டமைக்கப்படுகின்றன, அதன் நடை எப்படி தீர்மானமாகியுள்ளது, மேலைத்தேய ஹார்மொனிக்கல், பாலிபோனி இசைத்தழுவலில் அமைந்த ஸ்வரத்தொகுதிகள் என்பவற்றை ஜெயபாரதி எடுத்துக்காட்டுகளுடன் நுணுக்கமாக விளக்கு கின்றார். அவ்வாறே மிருதங்கத்தின் பிரயோகம் பற்றி பார்த்திபன் பாடல்களில் வந்துள் [illegible]க்கோர்வைகள், அவற்றின் காலப்பிரமாணங்கள், [illegible] ளோடு மாறிச் செல்லும் சதுஸ்ட , கண்ட, திஸ்ர [illegible] ஆவர்த்தன உணர்வூட்டங்களையும், மீட்டு மற்றும் [illegible] களையும் பாடல் வரிகளை குறிப்பிட்டு விளக்குகின்[illegible]

(14ஆம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொற்சிலம்பம் போட்டி

47



அனுப்புபவர் பெயர்:..........................................

முழுமையான தபால் விலாசம்: ..............................

..............................................................

கையொப்பம்:..................................................

ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருகின்றமையால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

## இடமிருந்து வலம்

1.தமிழ் மாதம், 2. புறோக்கர்கள் செய்யும் வேலை 6.வரவேற்புக்காக வைக்கப்படும் மங்களகரமான பொருள், 7. ஆளை மயங்க வைக்கும் ஆசை வார்த்தை, 9.தானிய அளவீட்டுஅலகு 11. கயிறு செய்யப் பயன்படுத்தப்படுவது, 12.இப்போதைய நிறுத்தல்அலகு, 13. வெயில் வாட்டி எடுக்கும் காலம், 14.பிரி, 16. தமிழ்க்கடவுள்,18. பிணம் 19."இதுவும் மூர்க்கனும்கொண்டதுவிடா", 20.தலையில் கட்டுவது 21.குத்து விழுவது இப்படி 22.இரத்தம்

## மேலிருந்து கீழ்

1.அரைச் சதம், 2.பிரிப்பு, 3. பிரபலமான தமிழ் நடிகர்களில் ஒருவர், 4.ஓர் இ(சை/ழை)க்கருவி, 5.சமிபாட்டு உறுப்பு, 8.தொடர்பு, 10.நிகழ்ந்த ஒன்று, 12.செங்குத்துக்கு மாறானது, நிலத்துக்குசமாந்தரமானது, 13. மன்னனை இப்படியும் சொல்வர், 15.கையெடுத்து வணங்குதல், 16. வித்தைகளைக் கற்றுத் தருபவர், 17.சிரசு, 18.திடீரென நிகழ்வதை இப்படி வர்ணிப்பர், 20.சிஷ்யனுக்கு வழிகாட்டி

### சொற்சிலம்பம் போட்டி 45 க்கான விடைகள்

**இடமிருந்து வலம்**

1. சங்கதி, 4.வரகு, 6.பருமன், 8.தகடு, 10.கமலம், 11. திரு, 12.சரம், 13.வாசகம், 15.கும், 16.கடுகதி, 17.ஏறு, 18.விசும்பு, 20.புலம்பல், 21.பாவி

**மேலிருந்து கீழ்**

1.சந்ததி, 2.கபடு, 3.திரு, 4.வன்மம், 5.குடும்பம், 7.மகரம், 9.கருவாடு, 12.சகதி, 14. சகலம், 15.குறும்பா, 16.கம்பு, 17.ஏசு, 18.வில், 19.புவி

**சொற்சிலம்பம் போட்டி இல.47**

பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்

**உதயன் சஞ்சீவி**

**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

என்னும் முகவரிக்கு

**23.07.2021 இற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக** தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

## போட்டி விதிகள்

- வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
- சஞ்சீவியில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
- போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
- வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே

**ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/=**

பரிசாக வழங்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் பரிசு பெற்றோருக்கான ... காலப்பகுதியில் அவரவர்களது ... வைக்கப்படும்.

**போட்டி இலக்கம் 45இல் வெற்றி பெற்றோர் விபரம்**

**1 ஆம் பரிசு**

**பு.சஞ்ஜை**
யாழ்.இளையதம்பி இந்து வித்தியாலயம், யாழ்ப்பாணம்.

**2 ஆம் பரிசு**

**தா.ஶ்ரீதரன்,**
சுழிபுரம் மேற்கு, சுழிபுரம்

**3 ஆம் பரிசு**

**பா.விதுசன்,**
பாலேந்திரன் ஸ்ரோஸ், சிறுப்பிட்டி மேற்கு, நீர்வேலி

**4 ஆம் பரிசு**

**இ.பத்மா,**
பளை நகரம், பளை

**5 ஆம் பரிசு**

**திருமதி. றோ.ம.தயானந்தன்**
15ஆம் கட்டை, உடுப்பிட்டி

# நிதியமைச்சர் பஸில் ராஜபக்ச மாத்தையாவுக்கு....!



## அவசரமா ஒரு கடுதாசி

*ஆயுபோவன் மந்திரித்துமா!*

ஒரு மாதிரி நீங்களும் அரசாங்கத்துக்குள்ளுக்கை வந்திட்டியள். நீங்கள் ஏன் உள்ளுக்கை வந்தனியள்? ஆர் உங்களை உள்ளுக்கை கொண்டுவந்தது? அதின்ரை பின்னணி என்ன? இதெல்லாம் இலங்கைச் சாதாரண குடிமகனுக்கு மட்டுமில்லை அரசாங்கத்திலை இருக்கிற பல பேருக்கும் தெரியாததொண்டு. அதாலை பலர் சிதம்பர சக்கரத்தைப் பேய் பாத்தமாதிரித்தான் உங்களின்ரை வரத்தைப் பாக்கினம்.



இப்ப இலங்கை அரசியலிலை நடந்திருக்கிற மாற்றத்தை அடி பிடி இல்லாமல், சண்டை சச்சரவு இல்லாமல்,வெடிச் சத்தம் கோளாமல், சுருக்கமாச் சொன்னால் கந்தகப் புகை கிளம்பாமல் நடந்த ஒரு சதிப் புரட்சி எண்டுதான் நான் சொல்லுவன். நிதி அமைச்சை விடமாட்டன் எண்டு, விடாக்கொண்டன் எண்டு நிண்ட உங்கட கொண்ணையை ஒரு நோவுமில்லாமல் கழண்டுபோகப் பண்ணிப் போட்டியள். இலங்கை அரசியலிலை நடந்திருக்கிற மாற்றத்தைக் கண்டிட்டு எங்கட ஊர்ச்சாத்திரியார் சொன்ன வசனம் என்ன தெரியுமே? "எடே அமெரிக்கன் சாதிச்சுப்போட்டான்டா எண்டதுதான். உங்கடை குடும்பத்திலை மூண்டுபேரும் மூண்டு விதம் எண்டு கதைக்கிறவை. மூத்த அண்ணை மஹிந்தர் நல்லாக் கதைப்பர். வாயாலை எதையும் வெட்டி ஆடிப்போடுவர். ஆனால் எல்லாருக்கும் தெரியும் அவர் ஒரு புழுகுப் பெட்டி எண்டு. அவரிலை உள்ள ஒரு கெட்ட பழக்கம் கனக்கச் சொல்லுவார், ஒண்டும் செய்யமாட்டார். அதாலை அவரை ஆரும் அதிகம் நம்பமாட்டினம்.

இப்ப இருக்கிற கோத்தாபய கனக்கக் கதையார்.ஆனால் மூக்கு நுனியிலை கோபத்தை வச்சிருப்பார்.அவரிட்டை ஒளிவு மறைவு கிடையாது. 'மில்ரி டிசிப்பிளின்' கனக்க இருக்கும். ஆனால் ஏமாத்தாமல் சொன்னதைச் செய்துபோடுவர். அவருக்கு தானொரு அரசியல் சூனியம் எண்டு ஜனாதிபதியா வந்த கொஞ்ச நாளிலையே தெரிஞ்சு போச்சு. அதாலை தான் இப்ப உங்களைக் கூப்பிட்டிருக்கிறதாச் சொல்லுகினம்.

ஆனால் உங்களைப் பற்றிச் சொல்லப்போனால். ஆரை எண்டாலும் கதையாலை விழுத்திப்போடுவியள். தந்திரமாத்தான் எதையும் யோசிப்பியள். முதலிலை வாயாலை சொல்லிப் பாப்பியள். மசியாட்டில் கத்தை கத்தையா நோட்டைக் காட்டிக் கதைப்பியள். அதுக்கும் அடங்காட்டி அவையை வழிக்கு கொண்டுவாறதுக்கு உங்களிட்டை வேற வழி வகையும் உண்டு எண்டு எனக்குத் தெரியும்.

அது இப்ப வடிவாத் தெரியுது. ஏனெண்டால் நீங்கள்வர முன்னம் இந்தா வெட்டுறன், கவிழ்க்கிறன் எண்டு நிண்ட எல்லாரையும் வந்த 'இரண்டு மூண்டு நாளிலை பெட்டிப் பாம்பாக்கிப் போட்டியள்.நீங்கள் வரமுதல் முறுகிக்கொண்டு நிண்டவையள் இப்ப பஸில் புராணம் பாடத் துவங்கிவிட்டினம் எண்டதிலை இருந்து அது தெரியிது. ஒரு காலத்திலை மஹிந்த சிந்தனையை நடைமுறைப்படுத்தினவையளிலை விமல் வீரவன்ச, மத்தெட்டுகம தேரர், உதய கம்மன்பில எண்டு மூண்டுபேரும் முக்கியம் எண்டதை மறந்து, கோத்தா அவையளோடை மிண்டப் பாத்திட்டார். அவை பாக்க வெளியாலை தெரியாட்டிலும் உள்ளாலை கன வேலை செய்து வைச்சிருக்கினம் எண்டு சனம் கதைக்கிது. அது உங்கடை பக்கத்திலை உள்ளவைக்குத் தெரியாது.ஆனால் உங்களுக்கு அவையின்ரை பலம் தெரியும். அதுதான் வந்த உடனை நீங்கள் செய்த முதல் வேலை அவையளைக் கூப்பிட்டு வழமையாச் செய்யிற மாதிரி தோளிலை கைபோட்டு" மச்சான் எண்டிட்டியள். உடனை அவையின்ரை உச்சி குளிர்ந்திட்டுதெல்லே. அதைத்தான் நான் உங்கடை முதலாவது வெற்றி எண்டு சொல்லுவன். உங்கடை அடுத்த குறி புத்த மகா சங்கங்களை பெட்டிப் பாம்பாக்கிறதுதான் எண்டும் சனம் கதைக்கிது.அதையும் நீங்கள் வடிவாச் செய்வியளாம். உங்கடை அடுத்த முயற்சி வெள்ளை யானையை அடக்கிறதுதான் எண்டும் அது உங்களாலை லேசா முடியும் எண்டும் கதைக்கினம். நான் சொன்ன அந்த வெள்ளை யானை எது தெரியுமே? ஐரோப்பாவின்ரை ஜிஎஸ்பி வரிச்சலுகை. பயங்கரவாதத் தடைச் சட்டத்தை மீளப் பரிசோதனை செய்யுங்கோ ஜிஎஸ்பியைப் பற்றி யோசிப்பம் எண்டு சொன்ன அவையளை "அதைப் பிறகு பாப்பம் எண்டு சொல்லுற அளவுக்கு அமெரிக்காவுக்குள்ளாலை வேலையைக் கொண்டு போயிடுவியள்.அதை மட்டும் பிசகில்லாமல் செய்துபோட்டியள் எண்டால் நீங்கள் தான் இலங்கையின்ரை அடுத்த ராசா.


ஆனால் உங்கடை வருகை சீனாக்காரனுக்கு அவ்வளவு "ஹப்பி இல்லையாம். அதாலை அவை தாங்கள் நாமலுக்குத் தலைப்பாகை கட்டலாம் எண்டு யோசிக்கிறதாக் கேள்வி. அங்கையும் இஞ்சையும் கதை எறிஞ்சு பாத்தவையாம். அவ்வளவு வாய்க்கேல்லை எண்டு சொல்லிச்சினம்.

இருந்தாலும் இப்ப இடியப்பச் சிக்கலாக் கிடக்கிற அரசியலைச் சிக்கெடுத்து நேராக்கக் கூடிய வல்லவர், நல்லவர் நீங்கள்தான் எண்டு ஆக்கள் சோதிடம் சொல்லினம்.

ஆனால் ஒண்டை மட்டும் என்ன செய்யப்போறியள்? எப்பிடிச் செய்யப்போறியள்? எண்டுதான் நான் உட்படப் பலர் எதிர்பாத்துக்கொண்டு இருக்கிறம். அது என்ன தெரியுமோ? இழுபறியாக் கிடக்கிற இலங்கைத் தமிழர் பிரச்சினை!!!!!

என்றும் உங்கள் மேல் பட்சமுள்ள
*அப்பாவி அன்னமுத்து*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கண்ணீர் அஞ்சலி

ராணி சீதரன்

அந்தக் கண்ணீர் அஞ்சலி, வினித்தாவின் காலடியில் கசங்கிக் கிடந்தது. நேற்று அவளைப் பார்க்க வந்த பள்ளித் தோழிகள் வீசியதை இப்பொழுது கவனமாக எடுத்துப்பிரித்தாள் மாலதி. எழுத்துகள் தெளிவில்லாமல் கசங்கலில் பதுங்கிக்கொண்டிருந்தன. அது வழமைக்கு மாறாக எழுதப்பட்டது என்பதை அதைப் படிக்கும்போது புரிந்து விடும். அதன் உள்ளடக்கத்தின் சாராம்சம் துயரம் கலந்தது. அந்தக் கடுதாசியை எடுத்துப் படித்துத் துயரத்தைப் பகிர்ந்துகொள்ள அவள் முனைந்தாலும் மனது அதற்கு இடங்கொடுக்க மறுத்தது.

"இதைப் படிச்சுத் தான் என்னத்தைச் செய்ய?" அலுத்துக்கொண்டவளாக் அதை மீண்டும் கசக்கித் தூர எறிந்தாள்.

வினித்தா புலம்புவது கேட்டது. இரவெல்லாம் நித்திரையில்லாமல் திரிந்தவள் பொழுது விடியும் போதுதான் கண்ணயர்ந்தாள். கோழியுறக்கம் கொண்டு அருண்டு எழும்பியிருக்கிறாள் என்பதை அவளிடமிருந்து வந்த அனுக்கம் வெளிப்படுத்தியது.

மாலதிக்கு இன்னமும் முப்பத்தைந்து வயது முடியவில்லை. காண்டமும், கைரேகை சாத்திரமும் அவளின் கலியாணத்துக்குப் பிறகு தான் 'குருச் சந்திர யோகம்' இருப்பதாக அடித்துச் சொன்னதை நம்பினாள். மனம் நிறைந்த கனவுகளோடு வாழ்க்கையில் புகுந்தவளை வலிந்து வந்து இழுத்து ஒட்டிக் கொண்டது விதவைக் கோலம். வயதும் தனிமையும் பலரை அவள் பக்கம் அனுதாபம்கொள்ளச் செய்தது. வழி தெரியாமல் துயரத்தில் கரைந்தாள். ஊரும் உறவும் உதவவேண்டும் என்ற பயத்தில் ஒதுங்கி நின்று அவளை வேடிக்கை பார்த்தது. முடிவாக தற்கொலைக்கு முயன்று அதிலும் தோல்வியடைந்த போதுதான், இறுதிக்கட்ட யுத்தத்தில் செய்த ஒப்பந்தம் போல எப்படியாவது வாழ்ந்து காட்ட வேண்டும் என்ற வெறி அவளுக்குள் முளைகொண்டது.

விளங்காத செய்யுளை விலக்கிவிட்டுப் படிக்கும் மாணவர்களைப் போல வினித்தாவைப் பார்த்ததுமே முகத்தைத் திருப்பிக்கொள்ளும் பள்ளித்தோழிகளிடம், உயிரையும் தருவேன் என்ற பாவனையில் நெருங்கிப்போகும் அவளை அன்போடும் அக்கறையோடும் அரவணைத்துப் பழகுவதற்கு முன்வருவோர் அருந்தலாக இருந்தார்கள்.




"வினி ! உன்னுடைய கொப்பியைக் கொஞ்சம் தாவேன். ரீச்சர் 'நோட்ஸ்' வேகமாய்ச் சொல்லுவா. என்னால எழுத முடியேல்ல. நீ நல்ல வடிவாய் எழுதுவாய்"

சாலினி குழையடித்துக் கொண்டு வரும்போது தாராள மனத்தோடு வினித்தா கொடுப்பாள். எதையும் தருவேன் என்னையும் உங்களில் ஒருத்தியாகச் சேருங்கள் என அவளின் மனம் கெஞ்சுவதை அவதானித்துப் பார்ப்பவருக்கு அப்படியே விளங்கிவிடும். சாலினியின் கணநேர முகமலர்ச்சி அந்த நேரத்தில் அவசரமாக அவளிடமிருந்து விடைபெறும். மற்ற நேரங்களில் 'ஆயிரம் வேலைகளோடு ஓடுகிறேன். மீண்டும் உதவி தேவைப்படும்போது மட்டுமே உனது பக்கம் திரும்பிப் பார்ப்பேன்' என்பதை நுட்பமாக உணர்த்திவிடுவாள்.

'நீ ஏழை. அதிகம் ஆசைப்படாதை. ஒதுங்கிக் கொள். தொலைக்காட்சி நாடகத்தையோ முகநூல் பதிவையோ விளாசித் தள்ளும்போது. நீ என்ன சொல்லுவாய்?' பேந்தப் பேந்த' முழிப்பாய் .அதைவிடப் பேசாமல் இருப்பது மேல் ' அவளின் உள்மனம் குத்திக்காட்டும் போதெல்லாம், 'என்னிடம் படிப்பு இருக்குது. நான் சாதிப்பன் பார்.' மனதோடு சவால் விடுவாள். ஒரே வகுப்பில் படிப்பவர்கள் ஒதுக்கி வைக்கும்போது அது பசிக் கொடுமையை விட மோசமானதாக இருக்கும். தனிமைப்படுதலும், தாழ்வுச் சிக்கலும் வினித்தாவை பலவீனப்படுத்தினாலும், தன்னைத் தானே சமாதானமாக்கி மீண்டெழுவாள். பாசத்தைக் காட்டும் பண்புள்ள உறவாய் தமிழ் அவளோடு துள்ளி விளையாடித் தோழமை கொண்டது. பேச்சு, கவிதை, விவாதம் எல்லாவற்றிலும் வினித்தா முதலிடத்தைப் பெறுவாள். அவள் பரிசுகளோடு வரும்போது மாலதியின் மனதில் மின்னல் கீற்றின் வெளிச்சம் தோன்றி மறையும்.

சட்டத்தரணிகள் போடும் 'கோட்' மீது அவளுக்குத் தனிக் காதல் எப்படி வந்ததோ தெரியாது.

"சட்டத்தரணி வினித்தா ! சொல்லும் போதே நல்லாய்த் தான் இருக்குது. அம்மா சொல்லுங்கோ."

மாலதியும் கிளிப்பிள்ளையாகி 'சட்டத்தரணி வினித்தா', 'சட்டத்தரணி வினித்தா' எனச் சொல்லிக் கொண்டிருப்பாள்.

"சரி போதும் போதும்."

ஏழையின் பக்கத்து நியாயத்தை நிலை நிறுத்திக் குற்றவாளிகள் தண்டனை பெறவும், நிரபராதிகளை விடுதலை செய்யவும் சட்டம் உதவவேண்டும் என்பதைப் பொருளாகக் கொண்ட அவளின் விவாதங்கள் பலத்த கைதட்டல்களைப் பெற்றன. வினித்தா பாடசாலைக்குப் போகும்போது 'கன்ரீனுக்குக் 'கொடுக்கும் வடைப் பார்சலும் தயாராக இருக்கும். அதைக் கையில் எடுக்கும் போது அவளின் மனது விம்மி அழும். யாரும் கண்டுவிடக்கூடாது என்ற வேண்டுதல், அதை ஒப்படைக்கும் வரை தொடரும். அம்மா அதிகாலையில் எழும்பிச் சுட்டுக் கொடுக்கும் உழைப்பை மதிக்க மனதைப் பக்குவப்படுத்தினாலும் அலட்சியங்கள் அவளைப் பலவீனப்படுத்தும்.

பக்கத்துத் தெருவில் உள்ள கனகம்மா, அழைக்கும்போது அவளின் வீட்டுக்குச் சென்று வளவு கூட்டுவதும், சின்னச் சின்ன உதவிசெய்து வருவதும் மாலதியின் பகுதிநேர வேலையாகியது. இது அவளின் சிக்கனமான வாழ்க்கையின் வரவு செலவுக் கணக்கைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க உதவியது. எந்தக் கஷ்டத்தையும் மகளுக்குத் தெரியப்படுத்தாது தனக்குள் அனைத்தையும் புதைத்துக் கொண்டவள் மகளின் படிப்புக்கு இடையூறு வரக்கூடாது என்பதில் தனது முழுக்கவனத்தையும் செலுத்தினாள்.

வினித்தாவின் பெறுபேறு அவளைச் சாதனைப் பெண்ணாக்கியது. பாராட்டு மழையில் நனைந்தாள். சட்டத்தரணி கனவு நனவாகப் பலர் ஆசீர்வதித்தார்கள். மாவட்ட நிலையில் முதலிடம் பெற்ற பெருமையோடு உயர்தரக் கலைப் பிரிவில் இணைந்தாள்.

"பிள்ளையள் தமிழ்ப் பாடத்தை படிக்காமல் விடுங்கோ. இலக்கியங்கள், இலக்கணம், வரலாறு இப்படி ஏகப்பட்ட பாட அலகுகள் இருக்குது. 'பாஸ்' பண்ணுறதும் கஷ்டம். அதனால கணனிப் பாடத்தைப் படியுங்கோ. அது உங்களுக்குப் பிரயோசனமாகும். இலகுவாக "ஏ" சித்திபெறலாம்." ஆசிரியரின் ஆற்றுப்படுத்தல் வினித்தாவுக்கு ஏமாற்றத்தைக் கொடுத்தது. ரீச்சர் தமிழ் படிக்க வேண்டாம் என்று சொன்ன கதையைத் தாயிடம் ஒப்புவித்தாள். ரீச்சரிடம் விரைந்தாள் மாலதி.

"ரீச்சர் ! எல்லாப் பிள்ளையளும் தாய் மொழியைப் படிக்க வேணும். அப்பதான் இனம், பண்பாடு, அறியலாம். அப்பதான் கடந்து வந்த பாதையளைப் புரிஞ்சு அதையெல்லாம் கட்டிக் காப்பினம். இல்லாட்டி கண்டதே காட்சி கொண்டதே கோலமாய்ப் போயிடுவினம்."

மாலதியின் உணர்ச்சி மிகுந்த பேச்சைக் கேட்டு ஊமையாகிப் போன ரீச்சர் தனது பக்க நியாயத்தை முன்வைத்தாள்.

"அம்மா நாங்கள் தமிழ்ப் பாட 'ரீச்சர்' தான். ஆனால் ஏன் படிப்பிக்க விரும்பல்லை என யோசிச்சுப் பாருங்கோ கெட்டிக்காரப் பிள்ளையள் விஞ்ஞானம், கணிதம் படிக்கப் போக, மிஞ்சிய பிள்ளையள் தான் தமிழ் படிக்க வருவினம். இரண்டு வருசங்கள் துரத்தித் துரத்திப் படிக்க வைச்சாலும் நூறு வீதம் 'பாஸ்' கிடைக்காது. நாலு பேரில ரண்டு பேர் 'பெயில்' பண்ணினால் அதிபர் எங்களுக்கெல்லே மங்களம் பாடுவார். எங்கட பாடத்தின் சித்தியின் வீதமும் குறைஞ்சு போகுது. இதால ஆருக்கு லாபம்? சிலவேளை வினித்தாவின் இலக்கை அடைய இது தடையாயும் இருக்கும்."

குட்டிப் பிரசங்கம் நடத்தி ஓய்ந்த ரீச்சரைப் பார்த்த மாலதி, "பிள்ளை விரும்புவதைப் படிப்பியுங்கோ. நீங்கள் விரும்பியதைப் பிள்ளை படிக்க முடியாது. வினித்தாவ தமிழில 'ஏ' சித்தி எடுக்க வைப்பது என்ரை பொறுப்பு."

மகளின் திறமையை நம்பி வாக்குறுதியை வீசிவிட்டாள். வருங்காலத்தில் தமிழ் படிக்கப் பிள்ளைகளே இருக்க மாட்டார்கள் என்ற எண்ணம் அவள் முன்னே பேய் போலத் தலை விரித் தாடியது. மாலதிக்குத் தமிழ் படிப்பித்த கோபாலபிள்ளை ரீச்சர் கண்முன்னே தோன்றி மறைந்தார்.

"வினி ! உன்ரை கெட்டித்தனத்தை நம்பி ரீச்சருக்கு வாக்குக் கொடுத்திட்டன் கவனமாய்ப் படி."

"அம்மாவின் ஆசை நிச்சயமாக நிறைவேறப் போகுது பாருங்கோவன் அதில் எந்தச் சந்தேகமும் இல்லை."

வினித்தா மாலதியின் சபதத்தை நிறைவேற்றுவேன் என்பதில் அசையாத நம்பிக்கை கொண்டிருந்தாள். ஒருகால் உடைந்த மேசையும் பின்னலறுந்த கதிரையும் அவளின் படிப்புக்குத் துணையிருக்கும் உற்ற உறவுகளாயின. இந்த நிலையில் தான் எல்லோரையும் வீட்டுக்குள் முடக்கியது கொரோனா என்ற பெருநோய்.

காலச் சூழலைக் கருத்தில் கொண்டு தொலைக்காட்சியிலும் கையடக்கத் தொலைபேசியிலும் கற்பித்தல் நடைபெறுவது வினித்தாவுக்குத் தெரியும். அவள் அதைப்பற்றி மூச்சு விடாமலிருந்தாள். அவளின் வீட்டில் அந்த இரண்டும் பயன்படுத்த முடியாத பொருள்களின் வரிசையில் அடங்கிவிட்டன. இல்லாத பொருள்களுக்கு அம்மா ஏங்கி, அந்த வசதியைச் செய்ய முடியவில்லையே என்ற கவலையில் வருந்துவாள். தாங்கமாட்டாள். இவை எதுவும் எனக்குத் தேவையில்லை என்னால் படிக்க முடியும் என்பதில் அவளின் உறுதி வலுத்தது.

தமிழ்ப்பாடம் முதலாவது பகுதிக்குரிய பரீட்சை நடந்தபோது அதற்கு விடையெழுதி விட்டு வந்த வினித்தா நிலத்தில் கால் இல்லாத பரவசத்தில் மிதந்து வந்து அம்மாவைக் கட்டி அணைத்து முத்த மழையில் குளிப்பாட்டினாள்.

"சரி சரி குதிக்காதே. இரண்டாம் பகுதியையும் இப்பிடிச் செய்யப்பார். போயிருந்து படி."

மகிழ்ச்சியின் வெளிப்படுத்தலாகத் தாய்க்கு நளினம் காட்டிக் கொண்டு நகர்ந்தாள். அவளுக்குப் பிடிக்காத பகுதியென்றால் இலக்கிய வரலாறு தான். அது ஆழக்கடல் போன்று தொலை தூரத்துக்குப் பயணிக்க வைப்பதாக உணர்ந்தாள். சங்ககாலமும் சோழர் காலமும் எதிர்பார்க்கைக்குரிய காலப்பகுதிகள் என்று சபதம் கூறிய ஆசிரியர்களின் வாக்குப் பலிக்கும் என்ற நம்பிக்கையும் இருந்தது.

அம்மா வீபூதியோடு முன்னால் வர, அவளின் காலில் விழுந்து ஆசீர்வாதம் பெற்றுக்கொண்டு வினித்தா புறப்பட்டாள்.


பரீட்சை மண்டபத்தில் இருந்த மாணவர்கள் முகத்தில் தமிழ் ஒளி வீசியது. நேரந் தவறாமையோடு வினாத்தாள்கள் கைமாறின. எதிர்பார்த்தது போல சங்ககாலம் வினாவாக வந்திருந்ததைப் பார்த்ததும், சங்ககாலம் கட்டாயம் வரும் என்று சொன்ன தமிழ்ப் பாட ரீச்சரை நன்றியோடு மனதால் வாழ்த்தினாள். "கேள்விகளை முதலில் வாசியுங்கள். எடுத்தவுடன் எழுதத் தொடங்காதீர்கள்."

பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு நினைவுக்கு வந்து எச்சரித்தது. அடுத்த கேள்வி யாப்புப் பற்றியது. சிதம்பர சக்கரமாகத் தோன்ற, நம்பிக்கை இழக்காது மற்றக் கேள்வியைப் பார்த்தாள். குறுந்தொகைப் பாடல்கள் ஐந்து பாடப் பகுதியில் இருக்கிறது. ஆனால் கலித்தொகை வந்திருக்கிறது. கண்ணில் பிழையோ என்பதை உறுதிசெய்வதற்குக் கண்களைக் கசக்கிக்கொண்டு; பார்த்தாள். தெளிவாகத் தெரிகிறது. குறுந்தொகையில் விழுந்து நீச்சலடித்த அவளுக்கு கலித்தொகை பற்றிய கதையை யாரும் சொல்லித் தரவில்லையே. (14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மௌன மொழி கவிதைகள்




இனத்தின் உரிமைகளும்
நினைவின் உறைவிடமும்
அழிந்த பஞ்சசீல பாதங்களே
தாகம் பசி சுமந்து
தாரத்தில் நிலை குலைந்து - ஏவும்
கணை கிழிந்து எரிந்தவராய்
வேத வழி மொழிந்து வேரில் தளைக்கும் இனம்
நீதி நிலைக்கும் வரை நிமிர்வு கொள்ளும்

முல்லைக்கவி

முள்ளி வாய்க்காலுக்குள் முடக்கப்பட்டு
மூர்க்கர்களால் அழித்தொழிக்கப்பட்ட அந் நாளே மே 18
அழிக்கப்பட்ட ஆத்மாக்களை
ஆத்மார்த்தமாக அஞ்சலிக்க கூட முடியாத அவல நிலை
அகிலமே அகலக் கண் திறந்து பாராயோ
நினைவுத் தூபிதனை நிர்மூலமாக்கி விட்டால்
நெஞ்சத்தின் நினைவலை தனை
தடுத்திடத்தான் முடியுமா

வி.பி.சிவேஸ், தண்ணீரூற்று

வீழ்த்தி விட்டோம் என எண்ணி
வீண் கர்வம் கொள்ளும் கயவரே
வீழ்ந்து கிடப்பது எம் தலைகள் அல்லவே
வீரம் இது என
வீராப்பு கொள்ளும் மடைமைகளே!!
வீரம் எது என துயிலும் எம்
வீரர்களிடம் ஒரு வார்த்தை கேட்டறிந்திருக்கலாமே???

ஆ.ஆரபிவரணி

எழுந்து நின்ற கரங்கள்
உடைத் தெறியப்பட்டனவே
நாம் பட்ட துயர் தனை
அவர் பட்டிருந்தால் தொட்டிருக்கார் தூபிதனை
நாட்ட வந்த அடிக்கல் தனை
சுட்டுச் சென்றது அந்நியரோ
விட்டிருந்தால் எம் நாட்டை
நாம் சுதந்திரமாய் வாழ்ந்திருப்போம்

சி.மதீஷன், மு/வித்தியானந்தா கல்லூரி

கவிதைக்கு பரிசு 1000/-

உங்கள் கவிதைகள் எங்கள் கதவைத் தட்ட வேண்டிய கடைசி நாள்:

**23.07. 2021**

அனுப்ப வேண்டிய முகவரி:

**உதயன் சஞ்சீவி**

இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
மின்னஞ்சல் முகவரி: sanjeevi@uthayan.com

0773165555

பரிசு பெறும் கவிதை

விண்ணில் நின்று வீழ்ந்த கல்லில்லை – இது
இன்னல் பட்ட இனத்தின் நம்பிக்கை
கருவாடு காய்க்கின்ற மணல் மேடு
அழியாத பதிவேடு மனதோடு
சதிகார கரம் சேர்ந்த அதிகாரம்
பரிகாரம் தேடிடவே பலி கேட்கும்
வலி கொண்ட சமுதாயம் உறங்காதே
வரலாறு விடை கூறும் கலங்காதே

வி.சாத்வீகன், முல்லை

நினைவில் இன்றும் நெஞ்சம் தவிக்கும்
நிரையாய் பிணங்கள் புதைத்த கோலம்
வலிகள் மறைந்தும் தொடரும் துயரம்
சொல்லி அழவும் ஆறுதல் இல்லை
முள்ளிவாய்க்கால் நினைவில் சின்னம்
கல்லில் வடித்த சிலைக்கும் அவலம்
அரக்கர் கூட்டம் அடக்கும் கரங்கள்
முடக்கிப் போகும் எங்கள் துடிப்பை

சரண்குமார்,
வற்றாப்பளை

இந்த ஒளிப்படத்தைப் பார்த்ததும் உங்கள் சிந்தனையில் உதிக்கும் கவிதைகளை 8 வரிகளுக்கு மேற்படாமல் உடனே எழுதி தெளிவாக முகவரியை குறிப்பிட்டு அனுப்புங்கள். மிகச் சிறப்பான ஒரு கவிதைக்கு ரூபா. 1000/ பரிசாகக் காத்திருக்கிறது. பாராட்டுப் பெறும் ஏனையவை மௌனமொழி பகுதியில் பிரசுரமாகும்.

போர் விதைத்த பூமியிது
புல்லுமிங்கே முளையாது...
மாண்டவரும் மீள்வதில்லை
அவர் நினைவுகளோ உறவுகளில் மறைவதில்லை...
நினைவுருக்கள் அழிந்தாலும்
நிஜங்களைச் சுமக்கும் சுமைதாங்கி
மனங்களாய் நாமிங்கே...

த.சிவா
அல்வாய்.

# இளையராஜாவும்...

(11 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதன்போது மிருதங்கத்தோடு இணைவுறும் ஏனைய இசைக் கருவிகளின் பொருத்தப்பாடு பற்றியும் விளக்கு கின்றார். சதுஸ்ர நடையை திஸ்ர நடையாக உடைக்கும் அழகுபற்றியெல்லாம் வியக்கின்றார். முட்டு இசை, முழவு இசை, மிருதங்கப் புரட்டல், கொன்னக்கோல் என்பவற்றோடு ஷனாய், புல்லாங்குழல் என்பவை இணைந்து பாடல்களில் வெளிப்படும் இசைச் சித்திரங்களை பார்த்திபன் சிறப்பாக வெளிப்படுத்துகின்றார். கொன்னக்கோல் பற்றி அவர் எழுதும்போது "பருவமே புதிய பாடல் பாடு" என்ற பாடலில் வரும், தொடையில் கையினால் தட்டி காலடி ஒலியை கொடுத்த எளிமையான தாள நுட்பமும் நினைவில் வருகின்றது. இவர்கள் இருவரது கட்டுரைகளும் இந்த நூலுக்கு இரசனைத்தளம் கடந்த இன்னொரு தளத்திலான பரிமாணமும் உள்ளதென்பதை தெளிவாகக் காட்டுகின்றன.

இந்த நூலில் அமைந்துள்ள கட்டுரைகளில் இளையராஜாவின் சிறப்பு, அவரின் பாடல்களின் அழகு , மேலைத்தேய கீழைத்தேய வாத்தியங்களை இணைத்த திறமை, வாத்தியங்களின் தேர்வு, இராகச் சேர்க்கை , ட்ரம்ஸ் மூலம் நையாண்டி மேளம் இசைத்தமை மற்றும் வீணைக்கு இசைக்குறிப்பு எழுதி, கிற்றாரில் வெளிப்படுத்தியமை போன்ற தற்புதுமைகள், இளையராஜாவைப் பற்றி பிற கலைஞர்கள் வெளிப்படுத்திய கருத்துக்களின் பதிவுகள், சோகத்துக்கு இசைத்த ஷணாயை மகிழ்வுக்கு இசைத்துக் காட்டிய உடைப்புகள் என்று ஏராளமான தகவல்கள் நிறைந்துள்ளன. கட்டுரையாசிரியர்களின் தேடல்கள் வியக்கவைக்கின்றன. காதுக்குரிய இசை இரசனையை காகிதத்தில் எழுதி தொற்றவைப்பதில் கட்டுரையாசிரியர்களின் பிரயத்தனம் அபாரமானது.

ஆயினும், இளையராஜாவின் இசையில் வரும் இசைக்கருவிகளை இன்னபாடலில் இன்னகருவி இப்படி இசைக்கப்பட்டு இத்தகைய உணர்வை ஊட்டியது என்ற வரையறைக்குள் அந்தத் தகவல்கள் நின்றுபோயின. இந்தக் கட்டுரைகளை கலைஞர்களே எழுதுதல், கலைஞர்களுடன் நேர்கண்டு எழுதுதல், கலைஞர்கள் சொன்னதை எழுதுதல், தாமுணர்ந்து எழுதுதல், தாம் அறிந்து எழுதுதல் என்ற பரிமாணங்களில் விரிவாக்கம் செய்யும்போது எதிர்காலத்தில் இந்தக் கட்டுரையாசிரியர்களின் உன்னதமான நூலொன்றை எதிர்பார்க்க முடியும். இளையராஜாவின் இசை பண்பாட்டின் இசை என்பது தனியடையாளம். இந்நூலின் கட்டுரைகள் அதை பல இடங்களில் குறிப்பிடுகின்றன. நாதஸ்வரம், தவில், முழவு, உறுமி என்பவை பற்றியும், கரகாட்டம், தெம்மாங்கு , கிராமிய தெய்வ வழிபாடு முதலான கிராமிய மரபுகள் பற்றியும் இணைத்துப் பேசும் கட்டுரைகளில் இசையின் உள்ளூர் அடையாளங்கள் விளக்கப்படுகின்றன. உள்ளூர் இசையை உலக அரங்கிற்கு கொண்டுபோகும் இளையராஜாவின் இசை நுணுக்கங்கள் பற்றிய விரிவான தேடல்களும் தேவைப்படுகின்றன. இந்தத் தேடல் திரையிசை கடந்து புலமைநிலையில் விரிவுபெற வேண்டியது.

இதற்கான அடிப்படைகளை இந்தக் நூலில் வந்த கட்டுரைகள் சிந்திக்கவைக்கிறன. அத்தகைய முனைப்புகளின் போது நாட்டாரிசை, தமிழிசை, தமிழர்களின் இசை, இந்திய இசை என்பவை பற்றிய சரியான புரிதல்களுடன் இசையை அணுகி, ஒப்பாய்வுகள் செய்ய நேரிடும். அது இந்தக் கட்டுரைகளின் மூன்றாவது தளமாக விரிய வேண்டும். ஹங்கேரிய இசையில் Gloomy Sunday என்பது தற்கொலைப் பாடல் என்று சொல்லப்படுவது. தற்கொலையின் இசை இருந்த இந்த உலகத்தில் தான் எத்தனையோ தற்கொலைகளை தடுக்கும் வல்லமையுள் இளையராஜாவின் இசையும் உள்ளது.

இளையராஜாவின் முழுப்பாடலின் உணர்வை சாறாகத்தரும் Prelude ஈர்க்கும் மணங்களை, Interlude வருடிவிடும் அற்புதத்துக்கு அவரின் இசைக்கருவிகள் காரணமாகியிருப்பதால் அவை தற்கொலையை தடுக்கும் பாடல்கள் எனும் வல்லமையைப் பெற்றன. இந்த வல்லமை உண்மையில் பாடல் தரும் உணர்வின் வெளிப்பாடே. இந்த உணர்வு வெளிப்பாட்டை விருந்துவைத்ததில் இந்த நூலின் சாரமாகவும் அமைந்துவிட்டது. இந்த முயற்சியில் ஜீவநதியும் இ.சு.முரளிதரனும் கைகோர்த்தது நல்ல பயனை விளைவித்துள்ளது. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

(13ஆம் பக்கத் தொடர்ச்சி)

சந்தேகத்தோடு மீண்டும் கேள்வியைக் கண்கள் படமெடுத்துக் காட்டின. கலித்தொகை என்பதை மனம் அடித்துச்சொன்னதும் பார்வை மங்கியது. தலை இறுகியது. கையின் அசைவியக்கம் தடைப்பட்டது. தனக்கு என்னவோ நடந்துவிட்டது என்பதைக் கிரகித்துக் கொண்ட கணத்தில் வினித்தா மயங்கிவிழுந்தாள். பரீட்சை மண்டபத்தின் அமைதி குலைந்தது.

பயத்தால் ஏற்பட்ட அதிர்ச்சியில் வினித்தா பேயறைந்த நிலையில் தவித்தாள் தடுமாறினாள். சிறந்த பெறுபேற்றைப் பெற்ற மாணவி என்ற பெருமையோடு வீட்டுக்கு அழைத்து வரக்கனவு கண்ட மாலதி, அழுகை பாதி, அரற்றல் மீதியாக ஆசிரியர்களின் கைத்தாங்கலில் கொண்ட வரப்பட்ட வினித்தாவைப் பார்த்தவுடன் இடிந்து போனாள். இதயத்தை யாரோ கசக்குவது போன்ற வலியை அனுபவித்தாள். கண்ணீர் அஞ்சலியின் சாராம்சம் மாலதிக்கு மனப்பாடமாகியிருந்தது. 'இந்த வருடம் நடைபெற்ற தமிழ்ப்பாடப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் பலர் மண்டபத்தில் மயங்கி விழுந்தார்கள். சிலர் மன நிலை பாதிப்புக்குள்ளாகினார்கள். இந்த விபத்தில் மரணமடைந்தவர்களின் இறுதிக்கிரியைகள் அவரவர் வீட்டில் நடைபெறும். அனைவரும் கலந்துகொண்டு அஞ்சலி செய்யுமாறு வேண்டுகின்றோம்- துயர் பகிர்வோர் 13ஆம் ஆண்டு கலைப்பிரிவு மாணவர்கள்'

நேற்று இந்தச் செய்தியைப் படித்து முடித்த மாணவர்களின் துயரம் நிறைந்த முகங்கள் மாலதியின் கண்களில் நிழலாடின. 'கொரோனா' தந்த இழப்புகளைப் போல பரீட்சையும் பலரின் வாழ்க்கையோடு விளையாடியிருக்கிறது. மகளைத் திரும்பிப் பார்த்தாள்.

"அம்மா ! அம்மா!! சங்ககாலம் ...."

சொல்லி முடிக்க முதல் பாயிலிருந்து வெருண்டெழும்பிய வினித்தாவைப் பார்க்க மாலதிக்குச் சகிக்க முடியவில்லை. தலைவிரி கோலத்தோடு வீங்கிப்போன முகத்தைக் கையால் மூடிக்கொண்டு விசும்பினாள். அந்த விபத்திலிருந்து அவள் மீளவில்லையென்பதை அவளின் தோற்றம் உறுதிப்படுத்தியது.மாலதி அவளைத் தன் மார்போடு அணைத்தாள். வினித்தாவின் கண்களிலிருந்து பொல பொலவென வழிந்த கண்ணீர் மாலதியின் புறங்கையில் விழுந்து கிடந்த அவளின் கண்ணீர்த் துளிகளோடு சேர்ந்து சங்கமமாகியது.

தூரத்தில் காற்று, கண்ணீர் அஞ்சலியை அங்கும் இங்குமாக அலைக்கழிப்பதை நீண்ட நேரமாக வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள் மாலதி. காற்றின் மிதமான வேகத்தில் நிலையற்று அலைந்த கண்ணீர் அஞ்சலி திடீரென வீசிய பெருத்த காற்றுக்கு ஈடுகொடுக்க முடியாது எங்கோ கண்ணுக்குத் தெரியாமல் மறைந்துபோனது. ■

ம.மயூரபாலன்



# இருக்கும் இடத்தை விட்டு...!


ஒரு ஆழமான கருத்தை மக்கள் தெளிவாகவும் இலகுவாகவும் புரிந்துகொள்வதற்காக காலம் காலமாக கவிதைகள், கதைகள் போன்ற இலக்கிய வடிவங்கள் புழக்கத்தில் உள்ளன அவை புரிந்துகொள்வதற்கு கடினமான விடயங்களை இலகுவாக்குவது மட்டுமன்றி நம் உள்ளத்தை தொட்டு வாழ்விலே ஒரு உன்னதமான மாற்றத்தையும் கொண்டு வருகின்றன.

தொழில்நுட்பம் வளர்ச்சியடைந்துள்ள இன்றைய காலகட்டத்தில் ஒவ்வொரு மனிதனின் உள்ளத்திலும் நிறைந்துள்ள ஆனந்தம், அமைதி பற்றிய செய்தியை கேட்கும் பொழுது ஒரு புத்துணர்ச்சியும் ஒரு இனந்தெரியாத நம்பிக்கையும் பிறக்கின்றது. எல்லாமே முடிவடைந்துவிட்டது என எண்ணுபவன் கூட வாழ்க்கையின் பெறுமதியை உணர்ந்து உறுதியுடன் வாழ்வை வாழத் தொடங்குகின்றான்.

ஒரு மகாராணி, மாடியிலே தனது வைரமாலையை கழற்றி வைத்துவிட்டு கூந்தலை உலர்த்திக்கொண்டிருந்தாள். அப்பொழுது அங்கு வந்த காகம் ஒன்று அவளது மினுங்கும் வைரமாலையை எடுத்துக்கொண்டு பறந்து சென்றுவிட்டது. எங்கு தேடியும் அதனைக் கண்டுபிடிக்க முடியவில்லை. மகாராணியும் அந்த வைரமாலைதான் வேண்டும் என அடம்பிடித்தாள். அதனாலே அரசனும் வைரமாலையைக் கண்டுபிடித்து கொடுப்பவர்களுக்கு பாதி இராச்சியத்தை தருகிறேன் என அறிவித்துவிட்டார்.அப்பொழுது தெருவோரம் ரோந்து சென்ற படையினரின் கண்களில் அந்த வைரமாலை தென்பட்டது. அதனை ஒரு அழுக்கடைந்த சகதியில் அவர்கள் கண்டார்கள். பாதி இராச்சியம் கிடைக்கும் என்ற காரணத்தால் அவர்கள் உடனே அந்த சகதியில் இறங்கித் தேட ஆரம்பித்தார்கள். ஆனால் சகதிக்குள் இறங்கியதும் வைரமாலை மாயமாகி விட்டது. அது தென்படவில்லை.

அப்பொழுது அங்கு வந்த படைத் தளபதி சகதியில் இறங்கி தானும் வைரமாலையை தேட ஆரம்பித்தான். ஆனால் அவனுக்கும் அது மேலிருந்து பார்த்தபோது தென்பட்டது. ஆனால் சகதிக்குள் இறங்கியதும் மாலை மறைந்துவிட்டது. அப்பொழுது செய்தி கேட்டு அங்கு வந்த அரசனும் மாலையைச் சகதிக்குள் கண்டான். பாதி இராச்சியத்தைக் கொடுக்க மனமின்றி தானும் அந்த சகதியில் இறங்கி தேட ஆரம்பித்தான்.அவனுக்கும் அந்த மாலை சகதிக்குள் இறங்கிய பின்னர் தென்படவில்லை.

அந்த நேரம் அந்த வழியால் வந்த ஞானி ஒருவர் எல்லோரும் சகதியில் இருப்பதை கண்டார். அவர் அரசனிடம் "நீங்கள் அனைவரும் ஏன் சகதியில் இருக்கின்றீர்கள்? எனக் கேட்டார். அரசனும் "இது மிகவும் ஒரு புதிராக உள்ளது. மகாராணியின் வைரமாலையை ஒரு காகம் இங்கே போட்டுவிட்டு சென்றுவிட்டது. வெளியில் இருந்து பார்க்கும் பொழுது அது தெரிகின்றது. ஆனால் உள்ளே குதித்து பார்க்கும்பொழுது அது மறைந்து விடுகின்றது எனக் கூறினான்.



அதற்கு ஞானியும் சிரித்துவிட்டு அங்குள்ள மரத்தின் கிளையை நோக்கி காட்டினார். அந்த மரத்தின் கிளையிலே வைரமாலை தொங்கிக் கொண்டிருந்தது. ஞானியும் "உங்களுக்கு அந்த வைரமாலை தேவை என்றால் மரத்தில் ஏறி அதனை எடுத்துக் கொள்ளுங்கள். உங்களுக்கு தெரிவது வைரமாலையின் விம்பம் மட்டும்தான் என கூறிச் சென்றுவிட்டார். இவ்வாறான நீதிக் கதைகள் வெறுமனே பொழுதுபோக்குக்காக சொல்லப்பட்டவையல்ல. அந்த கதைகள் ஒரு கருத்தை, ஒரு படிப்பினையை புகட்டுவதற்காகவே கூறப்பட்டுள்ளன. இந்தக் கதையும் அவ்வாறுதான். இது ஒன்றும் புதிய கதையல்ல. நம்மில் பலரும் ஏற்கனவே கேட்ட கதைதான். ஆனால் அது எதற்காக சொல்லப்பட்டது என்பதை மறந்துவிடுகிறோம். நாம் எவையெல்லாம் நமக்கு ஆனந்தம் தருகின்றன என எண்ணுகிறோமோ அவை உண்மையிலேயே நமக்கு ஆனந்தம் தருகின்றனவா என்பதனை எண்ணிப் பார்க்க வேண்டி உள்ளது.

உதாரணத்துக்கு நாங்கள் ஒரு நல்ல சுவையான உணவை உண்கிறோம். அப்பொழுது நமக்கு கிடைக்கும் மகிழ்ச்சி அந்த உணவில் இருந்து வருகின்றது என எண்ணுகின்றோம். அல்லது ஒரு சூரிய அஸ்தமனத்தை பார்க்கும் பொழுது ஏற்படும் ஆனந்தம் அந்த அழகான காட்சியில் இருந்து வருகின்றது என எண்ணுகின்றோம். ஆனால் ஏதோ காரணத்தினால் நாம் துக்கமாக இருக்கும்பொழுது அதே உணவை நம்மால் ரசித்து உண்ண முடிவதில்லை அல்லது அந்த சூரிய அஸ்தமனத்தை பார்க்கும்பொழுது அதனால் எந்தவித மகிழ்ச்சியும் ஏற்படுவதில்லை. நாம் வேதனையில் இருக்கும் பொழுது அழகான நிலாவும் வேதனையை கூட்டுவது போல இருக்குமே அன்றிக் குறைப்பதில்லை.

இவற்றையெல்லாம் பார்க்கும்போது ஏதோ ஒரு விதத்தில் நாம் வெளியே தேடுகின்ற ஆனந்தமும் அமைதியும் நம் உள்ளே உள்ளது போலத்தான் தோன்றுகிறது. இதற்காக ஒரு பாடலே உள்ளது. கஸ்தூரிமானின் வயிற்றிலே கஸ்தூரியின் நறுமணம் உள்ளது. ஆனால் அந்த மான் அதனை அறியாது காடு முழுவதும் அந்த நறுமணத்தை தேடுகின்றது. தேடித்தேடி இறுதியில் அதற்கு ஏமாற்றம் தான் மிஞ்சுகின்றது.

இதனைத்தான் கவிஞர் கண்ணதாசன் தனக்கே உரித்தான பாணியிலே "இருக்கும் இடத்தை விட்டு இல்லாத இடம் தேடி எங்கெங்கோ அலைகின்றார் ஞானத் தங்கமே என எழுதிவைத்தார். உறியில் நெய் இருக்க ஊரெல்லாம் நெய்க்கு அலைவானேன்? என்பது நாம் அறியாத ஒரு பழமொழி அல்ல.

*"ஓடிஓடி ஓடிஓடி உட்கலந்த ஜோதியை*
*நாடிநாடி நாடிநாடி நாட்களும் கழிந்து போய்*
*வாடிவாடி வாடிவாடி மாண்டு போன மாந்தர்கள்*
*கோடிகோடி கோடிகோடி எண்ணிறந்த கோடியே"*

– இது சிவவாக்கியர் அருளிய பாடல். அதாவது நம் உள்ளே உள்ள ஜோதியைத் தேடித் தேடி எண்ணிலடங்காத மக்கள் இறந்து விட்டார்கள் என கூறுகிறார். இவைகள் எல்லாம் நாம் வெளியே தேடும் ஆனந்தம் அமைதி என்பன நம் உள்ளே தான் உள்ளன எனும் செய்தியை நமக்கு மீண்டும் மீண்டும் வலியுறுத்துகின்றன.

**நம் ஒவ்வொருவரது வாழ்விலும் ஆனந்தமும் அமைதியும் நிலவ வேண்டும். அது தானாக ஏற்படப்போவதில்லை. அதற்காக முயற்சி போட வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும். "தண்ணீர் தண்ணீர்" என கூறுவதாலே தாகம் தீரப் போவதில்லை. அமைதி அமைதி என சொல்லுவதாலே அமைதி ஏற்படப்போவதில்லை.**

நல்லதொரு திரைப்படத்தைப் பற்றிய ஒரு விமர்சனம் வரும்பொழுது அந்தப் படத்தை பார்க்க வேண்டும் என்ற ஆவல் ஏற்படுகின்றது. ஒரு புத்தக விமர்சனத்தை கேட்கும் பொழுது அந்த புத்தகத்தை படிக்கவேண்டும் என்ற ஆர்வம் ஏற்படுகின்றது. அதுபோலவே நம் உள்ளே என்ன உள்ளது என்பதனை கண்டு கொள்ளும் அவா நமக்கு ஏற்பட வேண்டும். ஆனந்தம் மற்றும் அமைதிக்கான தேடுதலை நாம் இதுவரை காலமும் வெளியில் இருந்து ஆரம்பித்தோம். ஆனால் நாம் அதற்கான தேடலை நம் உள்ளிருந்துதான் ஆரம்பிக்க வேண்டும். அது நம்முள்ளேயே ஒளிந்திருக்கிறது.

ஒரு மனிதன் பணம் சம்பாதிப்பதற்காக தூரத்தில் உள்ள நகரத்துக்கு சென்றான். அங்கு அவன் ஒரு வியாபாரத்தை ஆரம்பித்து மெதுவாக அதனை விரிவாக்கினான். ஒருநாள் தனக்கு தேவையான அளவு பணம் கிடைத்த பின்னர் மீண்டும் தனது கிராமம் நோக்கி செல்ல ஆரம்பித்தான். அவனிடம் பணம் இருக்கலாம் என எண்ணிய திருடன் ஒருவன் மெதுவாக அவனிடம் பேச்சுக் கொடுத்து பழக ஆரம்பித்தான். தானும் அதே கிராமத்துக்கு செல்வதாகவும் பேச்சு துணைக்காக கூட வருவதாகவும் திருடன் கூறினான். இந்த மனிதனும் அதற்கு சம்மதித்தான். இருவரும் தமது பயணத்தைத் தொடங்கினார்கள். போகும் வழியில் அந்த மனிதன் தான் எவ்வாறு நகரத்துக்கு வந்து பணத்தை உழைத்துக்கொண்டு மீண்டும் கிராமத்துக்குச் செல்கிறான் எனும் கதையை விவரமாக கூறினான்.

அன்று இரவு அவர்கள் இருவரும் போகும் வழியில் உள்ள ஒரு விடுதியில் தங்கினார்கள். அங்கே இரவு உணவுக்காக செல்லலாம் என்று மனிதன் கேட்ட பொழுது அந்தத் திருடன் "நீங்கள் போய் வாருங்கள் நான் பின்னர் வந்து உங்களுடன் இணைந்துகொள்கிறேன் என கூறினான். அந்த மனிதனும் சரியென கூறிச் சென்றுவிட்டான். அவன் போன பின்னர் திருடன் அவனது பெட்டிகள் எல்லாவற்றையும் நன்றாக தேடிப்பார்த்தான். ஆனால் அவனுக்கு பணம் ஒன்றும் கிடைக்கவில்லை.

மறுநாள் காலையில் அவர்கள் மீண்டும் பயணத்தை ஆரம்பித்தபோது திருடன் அந்த மனிதனிடம் "உங்களிடம் உண்மையிலேயே பணம் உள்ளதா? எனக் கேட்டான். அதற்கு அந்த மனிதனும் "ஆமாம், நான் ஏராளம் பணத்தைக் கொண்டு செல்கின்றேன் எனச் சொன்னான். இறுதியாக அவர்கள் அந்த கிராமத்துக்கு அருகே வந்துவிட்டார்கள். அப்பொழுது அந்தத் திருடன் "நான் உங்களிடம் ஒரு விஷயத்தைச் சொல்ல வேண்டும். நான் ஒரு திருடன். உங்களிடம் உள்ள பணத்தை திருடத்தான் உங்களுடன் சேர்ந்து வந்தேன். நீங்கள் இரவு உணவுக்குச் சென்ற பின்னர் நான் உங்களது பெட்டி, படுக்கை எல்லாவற்றையும் தேடினேன். ஆனால் எங்கும் பணத்தை கண்டுபிடிக்க முடியவில்லை. இப்பொழுது நீங்கள் உங்களது கிராமத்துக்கு வந்துவிட்டீர்கள். நீங்கள் பயப்பட வேண்டிய அவசியமில்லை. இப்பொழுது சொல்லுங்கள், உண்மையிலேயே உங்களிடம் பணம் உள்ளதா? இல்லையா? எனக் கேட்டான்.

அதற்கு அந்த மனிதன் "நீ என்னை முதல் முதலில் சந்தித்த பொழுதே நீ ஒரு திருடன் என்பதனை நான் புரிந்துகொண்டேன். அதனால் தான் அன்று இரவு உணவு உண்ணச் செல்வதற்கு முன்னர் எனது பணம் எல்லாவற்றையும் உனது தலையணையின் கீழே ஒளித்து வைத்தேன். நீ எல்லா இடங்களும் தேடுவாய், ஆனால் உனது தலையணையின் கீழே தேடமாட்டாய் என நான் அறிந்திருந்தேன் எனக் கூறினான்.

இது ஒரு வேடிக்கையான கதை மட்டுமல்ல உண்மையிலே நமது வாழ்விலும் இதுதான் நடைபெறுகின்றது. ஞானிகள், மகான்கள் எல்லோரும் மிகவும் தெளிவாக "உன் உள்ளே உள்ளது என கூறிய விஷயத்தை நாம் வெளியே எல்லா இடங்களிலும் தேடுகிறோம். ஆனால் நம் உள்ளே தேடுவதற்கு நாம் ஒருபொழுதும் முயற்சிக்கவில்லை.

"யாம் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம் எனும் வாசகத்துக்கு ஏற்ப, நம் ஒவ்வொருவரது வாழ்விலும் ஆனந்தமும் அமைதியும் நிலவ வேண்டும். அது தானாக ஏற்படப் போவதில்லை. அதற்காக முயற்சி செய்யவேண்டியது மிகவும் இன்றிய மையாததாகும். தண்ணீர் தண்ணீர் என கூறுவதாலே தாகம் தீரப்போவதில்லை. அமைதி அமைதி என சொல்லுவதாலே அமைதி ஏற்படப் போவதில்லை. அமைதியை உணரவேண்டியது நம் ஒவ்வொருவரதும் அடிப்படைத் தேவையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஆட்டம்காணும் கியூபா

ஆர்.பிரகாஷ்

அமெரிக்காவுக்குச் சிம்ம சொப்பனமாகத் திகழ்ந்த காஸ்ட்ரோ சகோதரர்களின் ஆட்சி கைமாற்றப்பட்டு சில மாதங்களிலேயே கியூபா என்னும் கோட்டை ஆட்டம் காணத் தொடங்கியிருக்கின்றது. இன்று கலவரங்களாலும், போராட்டங்களாலும் நிறைந்துள்ளது கியூபா. இதற்குப் பின்னணியில் அமெரிக்காவின் வழமையான 'விளையாட்டுத்தான்' உள்ளதா? என்ற கேள்வி பூதாகரமாக எழுந்துள்ளது. கியூபா அரசும் இந்தப் போராட்டங்களுக்குப் பின்னணியில் அமெரிக்காவின் சதி உள்ளது என்றுதான் குற்றம் சாட்டியுள்ளது.

## காஸ்ட்ரோ சகோதரர்கள்

மாபெரும் ஆயுதப் புரட்சிமூலம் 1959ஆம் ஆண்டு அமெரிக்க ஆதரவு சர்வாதிகார ஆட்சியை கியூபாவில் முடிவுக்குக் கொண்டுவந்தார் பிடல் காஸ்ரோ. பிடல் காஸ்ரோ இருக்கும் வரையில் கியூபாவில் தம்மால் ஆதிக்கம் செலுத்த முடியாது என்று அறிந்துகொண்ட அமெரிக்கா, அவரைக் கொன்றுவிட எத்தனையோ தடவைகள் பல்வேறு முயற்சிகளை எடுத்தது. பிடல் பாவிக்கும் சுருட்டில் விஷம் கலந்து கூட வைத்திருந்தது. எனினும், எந்தப் பொறியிலும் அகப்படாத பிடல், கியூபாவை தொடர்ந்தும் அமெரிக்காவின் பிடியில் இருந்து தள்ளியே வைத்திருந்தார். 2006ஆம் ஆண்டு பதவியில் இருந்து விலகிய பிடல், தன் சகோதரன் ரவுல் காஸ்ட்ரோவை அதிபராக்கினார். பிடலின் ஆட்சியில் கியூபா ஒரு அரணாக எவ்வாறு பாதுகாக்கப்பட்டதோ ரவுலின் ஆட்சியிலும் அதுவேதான் நடந்தது. உச்சக்கட்டமாக அமெரிக்காவின் அப்போதைய ஜனாதிபதி ஒபாமா, கியூபாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டு அந்த நாட்டுடன் ஒரு நல்லிணக்கத்தை ஏற்படுத்த முனைந்தபோதிலும் அமெரிக்காவை கொஞ்சம் தள்ளியே வைத்திருந்தது கியூபா. 2016ஆம் ஆண்டு பிடல் மறைந்ததை அடுத்து அடுத்த சில மாதங்களில் ரவுலும் ஆட்சியைக் கைமாற்றினார். தற்போது கியூபாவின் ஜனாதிபதியாக மிகுயேல் டயாஸ் உள்ளார். காஸ்ட்ரோ சகோதரர்களுக்கு வெளியே கியூபாவின் உச்ச அதிகாரத்தைப் பெற்ற நபர் மிகுயேல் டயாஸ்தான்.

## மாறாத கொள்கைகள்

புதியவர் ஆட்சிக்கு வந்ததால், அமெரிக்க எதிர்ப்புச் சிந்தனைகளும் அமெரிக்காவுக்கு வெறுப்பை ஏற்படுத்தும் கம்யூனிசக் கொள்கைகளும் கியூபாவில் கொஞ்சம் தளர்வு பெறலாம் என்று உலகமே ஆவலுடன் எதிர்பார்த்தது. ஆனால், நடந்தது என்னமோ தலைகீழாகத்தான். பிடலில் ரவுலின் கரங்களுக்குள் கியூபா எவ்வாறு இருந்ததோ அதே எண்ணம், அதே சித்தாந்தம் மிகுயேலாலும் கைக்கொள்ளப்பட்டது. அதே திமிர்த்தனம் கியூபாவிடம் இருந்தது. எனினும் கொள்கையளவில் கியூபாவின் நிலைப்பாடுகள் மாறவில்லையே தவிர அமெரிக்க ஊடுருவல் அங்கு ஆரம்பித்துவிட்டதா? என்ற சந்தேகம் தற்போது கியூபாவில் இடம்பெறும் காட்சிகளைக் காணும்போது ஏற்படுகின்றது.

## மாறிவரும் காட்சிகள்

கியூபாவில் தற்போது அன்றாடம் பல போராட்டங்கள் இடம்பெறுகின்றன. கியூபத் தலைநகர் ஹவானாவிலும் இந்தப் போராட்டங்கள் மிகையாக இடம்பெறுகின்றன. மருத்துவப் பொருள்களுக்கு பற்றாக்குறை, வேலையில்லாத் திண்டாட்டம், பொருளாதாரப் பின்னடைவு என ஏகப்பட்ட விடயங்களை வலியுறுத்தி இந்தப் போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. ஒரு ஜனநாயக ஆட்சியில் போராட்டங்கள் தவிர்க்க முடியாதவையாக இருந்தாலும் கியூபாவுக்கு இவை புதியன. இதனால்தான் இவற்றின் பின்னணியில் அமெரிக்கத் தலையீடு உள்ளது என்று தெரிவித்துள்ள கியூபா அது தொடர்பில் விசாரணைகளையும் நடத்தி வருகின்றது. கியூப அரசின் கருத்தில் நியாயம் இருக்கவும் செய்கின்றது. ஏனெனில் அமெரிக்காவின் அந்நியத் தலையீடுகள் இவ்வாறுதான் ஆரம்பிக்கும் என்பது வரலாறு. ஒரு நாட்டை சின்னாபின்னமாக்க வேண்டுமெனில், அந்த நாட்டில் உள்ள அரச எதிர்ப்பாளர்களையும், அமெரிக்க ஆதரவாளர்களையும் ஓரணியில் ஒன்றுதிரட்டி, அவர்களைக் கொண்டு கலவரங்களை நடத்தி பின்னர் அந்த நாட்டுக்குள் ஆயுதக் குழுக்களைக்கூட உருவாக்கி தன் எதிர்ப்பு நாடுகளை சல்லடையாக்கி விடுவது அமெரிக்காவுக்குக் கைவந்த கலை. சிரியா, ஈராக், ஈரான் உள்ளிட்ட நாடுகள் இதற்கு சிறந்த உதாரணங்கள். ஈராக்குக்கு புஷ், சிரியாவுக்கு ஒபாமா, ஈரானுக்கு ட்ரம்ப், தற்போது கியூபாவுக்கு பைடன்.

உலக வலம்

---

விளையாட்டு

ஆர்.லயனல்

# மெஸ்ஸிக்கு தங்கப்பந்து?

சர்வதேச கால்பந்தாட்ட அரங்கில் சிறந்த வீரர்களுக்கு வழங்கப்படும் உயரிய விருதுகளில் முதன்மையானது பலூன் டி ஆர். தங்கப்பந்து என்று அழைக்கப்படும் இந்த விருதை நடப்பு வருடத்தில் மெஸ்ஸி கைப்பற்ற வாய்ப்புக்கள் அதிகம். மெஸ்ஸி தலைமையில் 28 ஆண்டுகளின் பின்னர் ஆர்ஜென்ரீனா அணி கோபா அமெரிக்கா கிண்ணத்தைக் கைப்பற்றியுள்ளது. அத்துடன் தனிப்பட்ட ரீதியிலும் மெஸ்ஸி ஏராளம் சாதனைகளை நடப்பு வருட கோபா அமெரிக்காவில் பொறித்துள்ளார். தொடரின் சிறந்த வீரர், அதிக கோல்களைப் பதிவுசெய்த வீரர், கோல் பெறுவதற்கு அதிக வாய்ப்புக்களை ஏற்படுத்திய வீரர் என்று அனைத்திலும் மெஸ்ஸியின் பெயர்தான். மெஸ்ஸிக்கு வழமையாக கடும் போட்டியைக் கொடுக்கும் ரொனால்டோ, யூரோ கிண்ணத்தில் அதிக கோல்களைப் பதிவுசெய்த வீரராக உள்ளபோதிலும் நடப்புச் சம்பியன் என்ற அந்தஸ்துடன் தொடரில் களம்கண்ட போர்த்துக்கலை காலிறுதிக்குத் தகுதிபெற வைக்கக்கூட ரொனால்டோவால் முடியவில்லை.

இதனால் வாக்கெடுப்புக்கு முன்னரேயே மெஸ்ஸியின் பக்கம் காற்று வீசுவதை உணர முடிகின்றது. ஏற்கனவே 6 தங்கப்பந்துகளை தன்னகத்தே கொண்டுள்ள மெஸ்ஸி 7ஆவது தடவையாகவும் இன்னொரு பந்தைக் கொண்டுசென்றால் அதில் ஆச்சரியத்துக்கு ஒன்றும் இல்லை.

**'பந்து மேல பந்து வந்து கொட்டுகிற வேளையிது!'**



# போகலாமே பெடரர்?



கால்பந்தாட்டம் என்றால் மரடோனா, பீலே. கோல்ப் என்றால் டைகர் வூட்ஸ். கிரிக்கெட் என்றால் பிரட்மன், சச்சின். இவ்வாறு ரென்னிஸ் என்றால் முதலில் நினைவுக்கு வருபவர் சுவிற்சர்லாந்தின் நட்சத்திர வீரர் றோயர் பெடரர்தான். பெடரர் என்பது ஒரு பெயரல்ல. அது ஒரு 'பிராண்ட்' என்பதாகவே ஒருகாலத்தில் கொள்ளப்பட்டது. ஆனால் கடந்த இரு ஆண்டுகளாக அந்த விம்பம் மெல்லச் சரிந்து, சிதைந்து விழுகின்றதா என்றதொரு கேள்வி எழுகின்றது. 39 வயதான பெடரர் இதுவரை 20 பகிரங்கத் தொடர்களைக் கைப்பற்றியுள்ளார். ஆனால் கடந்த இரண்டு வருடங்களாக அவர் பெரியளவில் சோபிக்கவேயில்லை. வயதுக்குரிய உபாதைகள், மந்த ஆட்டம் என்பன பெடரை ஆட்கொண்டன. பெடரருக்கு ஒரு காலத்தில் கடும் போட்டியாளராகத் திகழ்ந்த 35 வயதான நடாலும் இதுவரை 20 பகிரங்கத் தொடர்களைக் கைப்பற்றியுள்ளார். கடந்த வாரம் முடிந்த விளம்பிள்டனில் சம்பியனான ஜோகோவிக்குக்கும் அது 20 ஆவது பகிரங்கமாக அமைந்தது.

36 வயதில் பெடரர் 20 பகிரங்கக் கிண்ணங்களுடன் ஓய்வை அறிவித்திருந்தால், இன்று 39 வயதில் பெடரரும், 34 வயதில் ஜோகோவிக்கும், 35 வயதில் நடாலும் சாதித்த அளவுகோல் கிட்டத்தட்ட ஒன்றுதான் என்ற விம்பம் தோன்றியிருக்காது. ஓய்வை அறிவித்திருக்க வேண்டிய பெடரர் என்னும் ஆளுமை, தொடர்ந்தும் களம் காணுவது தவறோ என்ற எண்ணம் தற்போது எல்லோரிடத்திலும் மேலிடுகின்றது. தன் மைதான வாழ்க்கையை பெடரர் மறுபரிசீலனை செய்ய வேண்டிய காலம் இது. மேலும்மேலும் தோல்விகளை, பின்னடைவுகளைச் சந்திக்காமல் இப்போதாவது அவர் கௌரவமாக விலக வேண்டும். ரசிகர்களின் எதிர்பார்ப்பும் அதுவே.

**'போகும் காலம் வெகுதூரமில்லை செல்லாய் நீ செல்லாய்'**

# ரொனால்டோவின் பாணியில் கெய்ல்

கால்பந்து உலகத்தின் முடிசூடா மன்னனாகத் திகழும் ரொனால்டோ அதிகம் சம்பாதிக்கும் விளையாட்டு வீரர்களின் பட்டியலில் நீண்டகாலமாக முதலிடத்தில் உள்ளார். மைதானத்துக்கு வெளியிலும் ஒரு வர்த்தகராகவும் ரொனால்டோ வெற்றிபெற்றுள்ளார். ரொனால்டோ தன்னுடைய பெயரான 'கிறிஸ்ரியானோ ரொனால்டோ' என்பதையும் தனது ஜெர்சி இலக்கமான '7' என்பதையும் இணைத்து 'சி.ஆர்.7' என்ற பெயரில் பல நட்சத்திர ஹொட்டல்களை நிறுவியுள்ளார். ஐரோப்பிய நாடுகளின் தலைநகர்கள், பல வர்த்தக நகரங்கள் என்று பல இடங்களில் இந்த 'சி.ஆர்.7' ஹொட்டல்கள் வெற்றிகரமாக இயங்க ஆரம்பித்துள்ளன. இதே வர்த்தகத்தை தற்போது கையிலெடுத்துள்ளார் 'யுனிவெர்சல் பாஸ்' கெய்ல்.

கோவாவில் உள்ள கிளப்களில் 'காசா டிடோ கிளப்' மிகவும் பிரபலம். இதன் கிளைகள் அங்குள்ள பல்வேறு நகரங்களில் செயற்பட்டு வருகின்றன. சுற்றுலாப் பயணிகள் மற்றும் வாடிக்கையாளர்களின் தேவைகளை நன்கறிந்து நிறைவேற்றுவதால் இந்தக் கிளப்புக்கு நல்ல பெயருண்டு. இந்த நிலையில், டிடோ கிளப்பின் உரிமையாளர்களான டேவிட் மற்றும் ரிகார்டோ டிசோசா ஆகியோர் கடந்த மாதம் 28ஆம் திகதி, தங்களது டிடோ கிளப் நிறுவனத்தை விற்கும் முடிவுக்கு வந்தனர். இதையடுத்து கிளப்பின் உரிமத்தை தற்போது பெற்றுள்ளார் மேற்கிந்திய தீவுகளின் அதிரடி கிரிக்கெட் வீரர் கெய்ல். அவர் தனது கிளப்புக்கு '333 தந்த்ரா' என்று பெயரிட்டுள்ளார். 333 என்பது கெய்லின் அதிகபட்ச ஓட்டங்களாகும்.



**'காசேதான் கடவுளப்பா... கெய்லுக்கும் அது தெரியுமப்பா'**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org